

காலிறுதியில் சானியா, பயஸ் ஜோடிகள்
பக்கம் 18

உதயன்

24 பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

சுடர்: 29 கதிர்: 280 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 17, செவ்வாய் 02.09.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

**தெளிவான வானிலை**
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



# தமிழர்களின் தீர்வுக்காக சென்னையில் போராட்டம்

## கருணாநிதி தலைமையிலான டெசோ ஏற்பாட்டில் நாளை

சென்னை, செப்.2
தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பது உட்படத் தாம் நிறைவேற்றிய தீர்மானங்களை வலியுறுத்தி நாளை சென்னையில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது என்று அறிவித்துள்ளது டெசோ.
தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தலைமையில் டெசோவின் அவசர கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் டெசோ அமைப்பைச் சேர்ந்த க.அன்பழகன், மு.க. ஸ்ராலின், கே.வீரமணி, திருமாவளவன், சுப.வீரபாண்டியன், சுப்புலட்சுமி ஜெகதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் 4 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் 25ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை உரையாற்ற ஐ.நா. சபை அனுமதிக்கக் கூடாது. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்

22 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு செல்லவிருந்த பஸ் மீது முற்றவெளியில் நேற்று தாக்குதல்

யாழ்ப்பாணம், செப் 2
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதற்குத் தயாராக இருந்த தனியார் சொகுசு பஸ் ஒன்றின் மீது நேற்று இரவு இனந்தெரியாதோரால் கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் பஸ்ஸின் கண்ணாடிகள் நொருங்கின. பெண் பயணி ஒருவர் காயமடைந்தார்.
யாழ். முற்றவெளிப் பகுதியில் உள்ள தனியார் பஸ் தரிப்பு நிலையத்தில் நேற்று இரவு 7.45 மணியளவில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.
இதனால் கொழும்பு செல்வதற்காக பஸ்ஸுக்குக் காத்திருந்த பயணிகள் நேற்று இரண்டாவது நாளாகவும் அல்லோலகல்லோலப் பட்டனர்.
தமக்குரிய வழித்தட அனுமதியை வழங்குமாறு கோரி நேற்றுமுன்தினம் இரவு யாழ். முற்றவெளியில் உள்ள தனியார் பஸ் தரிப்பிடத்தில் உரிமையாளர்களும், சாரதிகளும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இந்தப் போராட்டத்தால் கொழும்பு நோக்கிப் பயணிக்கவிருந்த தனியார் பஸ்கள் தடுத்து நிறுத்தப்பட்டன.
இதனையடுத்து நேற்று மாலை முதல் அப்பகுதியில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.
இந்த நிலையில் நேற்று இரவு

22 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். பல்கலையில் 8 பேருக்கு டெங்கு

யாழ்ப்பாணம், செப்.2
யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் 8 பேர் டெங்குத் தொற்றுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். கடந்த வார ஆரம்பத்தில் ஒருவர் டெங்குத் தொற்றுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதன்பின்னர் ஏனையவர்கள் தொடர்ச்சியாக டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி மருத்துமனையில் சேர்க்கப்பட்டனர். விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களும், வெளிமாவட்ட மாணவர்களும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## முகமாலை சென்றார் பிரிட்டன் தூதர்



யாழ்ப்பாணம், செப்.2
வடக்கு மாகாணத்துக்கு மூன்று நாள் பயணமாக வந்துள்ள இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கீன் நேற்று முகமாலைக்குச் சென்று அங்கு கண்ணிவெடிகள் அகற்றப்படும் நடவடிக்கைகளைப் பார்வையிட்டார். (22ஆம் பக்கம் பார்க்க)

புலிகளை காக்கவே முனைந்தது சர்வதேசம்



பக்கம் 3

## பொலிஸார், பிக்குகளின் அடாவடிகள் ஆவணமாக செல்கின்றன ஐ.நாவுக்கு

யாழ்ப்பாணம், செப். 02
வவுனியாவில் கடந்த சனிக்கிழமை நடந்த காணாமற்போனோரின் உறவினர்களின் பேரணியில் பொலிஸார் குழப்பம் விளைவித்தமை தொடர்பிலும், கடந்த மாதம் மருதானையில் நடைபெற்ற காணாமற்போனோரின் உறவினர்களுடனான கலந்துரையாடலில் பிக்குகள் குறுக்கிட்டமை தொடர்பிலும் ஆவணங்கள் திரட்டப்பட்டு, அவை எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்ப

22 ஆம் பக்கம் பார்க்க

தமிழ் புத்திஜீவிகளின் தளத்தின் குறுக்குவெட்டு தோற்றம்
பக்கம் 14

## புதிய வாக்காளர் பட்டியல் நாளை முதல் பார்வைக்கு

யாழ்ப்பாணம், செப். 2
2014ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் மற்றும் நீக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் நாளை முதல் காட்சிப்படுத்துவதற்குச் சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்.மாவட்ட தேர்தல்கள் திணைக்கள உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார்.
இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த மே மாதம் ஆரம்பமாகியிருந்தன. கிராம சேவையாளர்கள் ஊடாக பி.சி. படிவம் விநியோகிக்கப்பட்டு வாக்காளர்களின் பெயர்களைப் பதிவு செய்யும் செயற்பாடுகள் நடைபெற்று வந்தன.
தற்போது பொதுமக்களால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், கடந்த வாக்காளர் இடாப்பில் பெயர் இருந்து நீக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் மற்றும் இந்த ஆண்டு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் என்பன தனித்தனியே காட்சிப்படுத்தப்படவுள்ளன.
பிரதேச சபை, பிரதேச செயலகம், கிராம சேவையாளர் அலுவலகம், மாவட்டச் செயலக தேர்தல்கள் திணைக்களம் என்பவற்றில் நாளையிலிருந்து இந்த இரண்டு பட்டியல்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. இதன்போது பெயர் விவரங்கள் நீக்கப்பட்டமைக்கு எதிராகவோ அல்லது புதிதாக

22 ஆம் பக்கம் பார்க்க


# தமிழர் நலனைக் கருத்தில் எடுத்து உடன் இணைந்து செயற்படுங்கள்

## மத்திய-வடக்கு மாகாண அரசுகளிடம் யாழ்.ஆயர் கோரிக்கை



யாழ்ப்பாணம், செப் 2
தமிழர்களின் எதிர்கால நலனையும் அபிலாஷைகளையும் கருத்தில் கொண்டு அரசும் மாகாண சபையினரும் இணைந்து செயற்பட வேண்டிய அவசர தேவை இன்று உள்ளது. இரு தரப்பினரும் பொதுநலனைக் கருத்தில் கொண்டு இணைந்து செயற்பட முன்வரவேண்டும் என யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.
சுதந்தவாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியதை அடுத்து அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
கடந்த மாத இறுதியில் நடைபெற்ற இலங்கை ஆயர் பேரவையின் கூட்டத்தொட

22 ஆம் பக்கம் பார்க்க




இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் ரங்கீன் மற்றும் அவரது குழுவினர் நேற்று உதயன் பணிமனைக்கு வந்திருந்தனர். அவர்கள் உதயன் பத்திரிகையின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவனுடன் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர். (ந-20)

# வன்முறையாளருக்கு வாக்களிக்காதீர்கள்

## அமைச்சர் நிமால் கோரிக்கை

கொழும்பு, செப்.2
வன்முறைகளில் ஈடுபடும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.



ஊவா மாகாணத்தின் பதுளையில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"வன்முறைகளில் ஈடுபடாத உறுப்பினர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும். டிப்பெண்டர் வாகன கலாசாரத்தில் இருந்து மீண்டு மக்களுடன் இருக்கும் வேட்பாளர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்." - என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை, ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சரும் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் புதல்வருமான சஷீந்திர ராஜபக்ஷ மற்றும் தேனுக்க வித்தானகமகே போன்றவர்கள் டிப்பெண்டர் வாகனங்களை அதிகளவில் பயன்படுத்தி வன்முறையான தேர்தல் பரப்புரை மேற்கொண்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வருகின்றது. இந்தநிலையிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (ற)

# சாகும் வரை உணவு தவிர்ப்பு

## எச்சரிக்கிறது ஐ.தே.க.



கொழும்பு, செப்.2
ஊவா மாகாண சபைத் தேர்தல் பரப்புரைகளின் போது பொலிஸாரும் அதிகாரிகளும் அரசு வாய்ப்பை தேடிக் கொடுக்கும் வகையில் செயற்பட்டால் சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஐக்கிய தேசிய கட்சி எச்சரித்துள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் ஹரின் பெர்ணாண்டோ இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.
நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய அவர், "ஆளும் கட்சியின் தேர்தல் விளம்பரங்களை அகற்றாது தமது கட்சியின் விளம்பரங்களை மாத்திரம் அகற்றினால் நான் சாகும் வரை உணவு தவிர்ப்புப் போராட்டம் மேற்கொள்வேன், ஆளும் கட்சியினரை போன்றே நானும் கட்சியின் தேர்தல் விளம்பரங்களையே காட்சிப்படுத்துகின்றேன்"- என்று அவர் தெரிவித்தார். (ற)

# ஜனாதிபதித் தேர்தலில் வன்முறை பெரிதாகும்

## எச்சரிக்கின்றது பவ்ரல் அமைப்பு

கொழும்பு, செப்.2
ஊவா மாகாணத் தேர்தலில் தற்போது நடைபெறும் தேர்தல் வன்முறைகளை அவதானிக்கையில், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களின் நிலைமை பயங்கரமானதாகக் காணப்படும் என்ற அச்சம் தோன்றுகின்றது - என்று தெரிவித்துள்ளது தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல்.
ஊவா மாகாண நிலைமைகள் குறித்துப் பொலிஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளது அந்த அமைப்பு. அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,
"பொலிஸாரால் சட்டம், ஒழுங்கைப் பேண முடியாத நிலை ஊவா மாகாணத்தில் காணப்படுகின்றது. நாட்டின் ஒன்பது மாகாணங்களில் ஒன்றில் நடைபெறுகின்ற தேர்தலில் வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்காக பெருமளவு பொலிஸாரைப் பயன்படுத்த முடியும். அப்படியிருக்கையிலேயே ஊவா மாகாணத்தில் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றது.
இந்தநிலையில் பொது மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் ஒன்பது மாகாணங்களிலும் நடைபெறுகின்ற சூழ்நிலையில் அந்த பகுதிகள் முழுவதிலும் பெருமளவு பொலிஸாரை பயன்படுத்துவது சாத்தியமா?"- என்றுள்ளது. (ற)

# 15 ஆயிரம் சிறுவர்கள் சீர்திருத்தப் பள்ளிகளில்

கொழும்பு, செப்.2
400 சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் சிறுவர்கள், சிறுவர் சீர்திருத்த நிலையங்களில் உள்ளனர் என்று அகில இலங்கை சிறுவர் சீர்திருத்த அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள சங்கத்தின் செயலாளர் கே.கே கீர்த்திரத்ன,
"குறித்த சிறுவர்கள் அதிக குற்றச் செயல்களில் ஈடுபட்டமை தொடர்பிலேயே இவ்வாறு அவர்கள் சிறுவர் சீர்திருத்த நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். எனினும் இவர்களை மீண்டும் சமுதாயத்துடன் இணைப்பதற்கு அவர்களுக்கு உளவியல் ரீதியான போதனைகள் அவசியப்படுகின்றன"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# வல்லப்பட்டையுடன் சீனர் கைது

கொழும்பு, செப்.2
13 கிலோ வல்லப்பட்டையுடன் சீனப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைப்பற்றட்ட வல்லப்பட்டைகளின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.
குறித்த சீனப் பிரஜை கோலாலம்பூர் ஊடாக சீனாவுக்குப் பயணமாவதற்குத் திட்டமிட்டிருந்தார் என்றும், மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

# நீதிமன்ற வளாகத்துக்குள் ஒருவர் துப்பாக்கியுடன் கைது

கொழும்பு, செப்.2
கொழும்பு - புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்குள் துப்பாக்கியுடன் நுழைய முற்பட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் கிரான்பாஸ் பகுதியைச் சேர்ந்த 41 வயதானவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
குறித்த துப்பாக்கிக்கு அனுமதிப் பத்திரம் உள்ளது என்றும், ஆயினும் சந்தேகநபர் ஏன் துப்பாக்கியுடன் நீதிமன்ற வளாகத்திற்குள் வந்தார் என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் வாழைத்தோட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
அதேவேளை அண்மையில் ஹல்ஸ்டப் நீதிமன்றத்தின் முன் இடம்பெற்ற கத்திக் குத்து சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்ததோடு இருவர் காயமடைந்திருந்தனர். பேஸ்புக் ஊடாகப் பழக்கத்தை ஏற்படுத்தி மாணவி ஒருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவத்தை அடுத்து, குறித்த மாணவியின் தந்தை கத்திக் குத்தை மேற்கொண்டிருந்தார். (ற)

# இலங்கையில் புகலிடம் கோரிய பாகிஸ்தானியரின் மனு நிராகரிப்பு

கொழும்பு, செப்.2
புகலிடம் கோரி இலங்கையில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்களை நாடு கடத்த கூடாது என்று தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.



இலங்கையில் புகலிடம் கோரி இலங்கையில் தங்கியிருந்த பாகிஸ்தானியப் பெண் ஒருவர் இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீதான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மேன்முறையீட்டு நீதியரசர் உபாலி அபேரத்ன அந்த மனுவை நிராகரித்தார்.
அத்துடன், இந்த அகதிகளை நாடு கடத்துவதற்கு நீதிமன்றத்தால் முன்னர் விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடை உத்தரவையும் இரத்துச் செய்வதாக நீதியரசர் உபாலி அபேரத்ன அறிவித்தார்.
நீர்கொழும்பில் தற்காலிகமாகத் தங்கியுள்ள அனிலா இம்ரான் என்ற பாகிஸ்தானிய பெண்ணால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (ற)

# காலணிகளை நாவால் சுத்தம் செய்வோரே ஜனாதிபதி ஆட்சியை எதிர்க்கின்றனர்

## பிரதமர் டி.எம். ஜயரத்ன கூறுகின்றார்



கொழும்பு, செப்.2
ஏகாதிபத்தியவாதிகளின் சப்பாத்துக்களை நாவால் சுத்தம் செய்யும் சிந்தனைகளை கொண்ட, வெளிநாட்டு டொலரை சட்டைப் பைகளில் போட்டுக்கொள்ளும் தரப்பினரே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை வேண்டாம் என்று கூறுகின்றனர். - இவ்வாறு தெரிவித்துள்ளார் பிரதமர் டி.எம். ஜயரத்ன.
கண்டியில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
"தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தி, மக்களை கொலை செய்து பெரும் அழிவுகளை ஏற்படுத்திய புலிகளின் 30 வருடப் போரை முடிவுக்கு கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை வேண்டாம் என்றால், அதை விட சிறந்த முறை உள்ளதா?. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையில் தவறு ஏற்பட்டால், அதனை சுட்டிக்காட்டாது, அதை நீக்க வேண்டும் எனக் கூறுபவர்கள் சப்பாத்துகளை நாவால் சுத்தப்படுத்தும் சிந்தனைகளை கொண்ட தரப்பினராவர்.
சப்பாத்துக்களை நாவால் சுத்தப்படுத்தும் தரப்பினர் அதே போன்ற தலைவரை தெரிவு செய்து கொள்வதற்காக ஜனாதிபதி முறைமையை வேண்டாம் என்று கூறுகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 17 செவ்வாய் (02.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 280

# புலிகளைக் காப்பதற்கே முனைந்தது சர்வதேசம்

## கோத்தபாய ராஜபக்ஷ கூறுகின்றார்



கொழும்பு, செப்.2

**இந்தியா உட்பட சர்வதேச சமூகத்தினர் எம்மைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணங்கிச் செயற்படுமாறு கூறியதுடன் - விடுதலைப் புலிகளை பாதுகாக்கவே முற்பட்டனர். இருப்பினும், இந்த நாட்டைப் பாதுகாத்துத் தேசிய ஒற்றுமையை நிலை நாட்ட வேண்டும் என்பதே எமது கனவாக இருந்தது. மாறாக ஒரு இனத்தை அழிக்க வேண்டுமென்ற எண்ணத்திலோ எமது தனிப்பட்ட ஆசைகளுக்காகவோ நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நடத்தவில்லை. இந்த நாட்டையும் மூவின மக்களையும் காப்பாற்றுவதே எமது ஒரே இலக்காக இருந்தது - இவ்வாறு தெரிவித்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ**

தேசிய இளைஞர் நாடாளுமன்றத்தின் பத்தாவது செயலமர்வு மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"முப்பது வருட கால இலங்கையில் இறுதி ஐந்து ஆண்டுகள், நாடு வேறொரு பாதையை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது. ஜனாதிபதியால் காப்பாற்றப்பட்ட இந்த நாட்டை எதிர்காலத்தில் முன்னெடுத்து செல்ல வேண்டுமாயின் அது இளைஞர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

இலங்கையில் முன்னுதாரணமாக சுட்டிக் காட்டக்கூடிய அளவில் ஒரு சில தலைவர்கள் மட்டுமே உள்ளனர். எனது வாழ்க்கையில் நான் கண்ட

(21 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் அரிசி விலை காட்சிப்படுத்துவது கட்டாயமானது

### பாவனையாளர் அதிகார சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம்.செப்.2

யாழ். மாவட்டத்தில் சகல அரிசி விற்பனை நிலையங்களிலும் அரிசி வகைகளின் விலைகள் நுகர்வோர்களின் பார்வைக்குத் தெரியும் வகையில் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தப்படவேண்டும் என்று யாழ்.மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபையின் இணைப்பாளர் வசந்த சேகரன் அறிவித்துள்ளார்.

அரசால் அறிவிக்கப்பட்ட அரிசிக்கான விலைக்கட்டுப்பாட்டில் வர்த்தகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் நேற்று வணிகர்கழகத்தில் நடைபெற்றது.

இதன்போது வர்த்தகர்களால் அரிசி விலைகள் மற்றும் தரம் தொடர்பான பிரச்சினைகள் எடுத்துக் கூறப்பட்டன.

இதனையடுத்து நிர்ண

(21 ஆம் பக்கம் பார்க்க)

## வலி.தெற்கு பிரதேச வர்த்தகர் சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், செப் 2

வலி.தெற்கு பிரதேச வர்த்தகர் சங்கம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட இந்தச் சங்கத்தின் தலைவராக சி.ஹரிகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வலி.தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ் தலைமையில், பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் இந்தத் தெரிவுகள் இடம்பெற்றுள்ளன.

வலி.தெற்கு பிரதேச வர்த்தகர் சங்கத்தின் தலைவராக

(22 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலி பொலிஸ் முன்பாக மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

### ரிப்பர் எரித்ததாக ஆறுபேரை விசாரணைக்கு அழைத்ததை அடுத்து

அச்சுவேலி, செப்.2

ரிப்பர் எரிப்புச் சம்பவம் தொடர்பாக 6 பேர் விசாரணைக்கு அழைக்கப் பட்டதையடுத்து புத்தூர் நவக்கிரி வடக்கு வெளிக்கிராமத்தின் 300 க்கும் மேற்பட்ட பொது மக்கள் நேற்றுப் பிற்பகல் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொது மக்களின் கோரிக்கையை கேட்டறிந்து ஆவன செய்வதாகத் தெரிவித்தோடு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிராமத்துக்கு பயணம் செய்து நேரில் கலந்து உரையாடுவதாகக் கூறியதை அடுத்து ஆர்ப்பாட்டம் நிறுத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் மணல் ஏற்றிச் சென்ற மகேஸ்வரி நிதியத்தின் 'ரிப்பர்' வாகனம் வடக்கு வெளி கிராமத்தில் இளம் கர்ப்பிணித் தாயை மோதியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். இதனால் ஆத்திரமடைந்த பொது மக்கள் ரிப்பர்

(21 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டாரவன்னியனுக்கு முல்லைத்தீவில் சிலை

யாழ்ப்பாணம், செப். 2

வன்னியை ஆண்ட தமிழ் மன்னனான பண்டாரவன்னியனுக்கு முல்லைத்தீவு நகரத்தில் சிலை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் து.ரவிகரன். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஊடாக இதனைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(22 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பொடியன் கைது

யாழ்ப்பாணம், செப் 2

'வவுனியா பொடியன்' என்ற பெயரில் முகப்புத்தகத்தை (பேஸ்புக்) தவறான வழியில் பயன்படுத்திச் சமூகத்தில் அவப்பெயரை ஏற்படும் வகையில் கருத்துகளைப் பதிவேற்றி, படங்களைப் போட்டுவந்த ஜீ.சீ.ஈ. சாதாரண தர வகுப்பு மாணவனைக் கைது செய்துள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவனுக்குப் பின்புலமாகச் சிலர் செயற்பட்டு வந்துள்ளதாகச் சந்தேகிக்கப்படுகிறது. அது தொடர்பில் விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் மேலும் கூறினர்.

வவுனியா பொடியன் என்ற

(21 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சி இளைஞர் மாநாடு வவுனியாவில்

யாழ்ப்பாணம், செப் 2

தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி மாநாடு எதிர்வரும் 6 ஆம் திகதி வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு, புதிய நிர்வாகத் தெரிவு, மத்திய செயற்குழுக் கூட்டம் என்பன வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 5 ஆம் திகதி கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களின் கலந்துரையாடல், கடந்த கூட்ட அறிக்கைகள் என்பன தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளன. மறுநாள் 6 ஆம் திகதி காலையில் கட்சியின்

(21 ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபரை மோதியது ராணுவ வாகனம்

யாழ்ப்பாணம், செப் 2

இராணுவ வாகனம் மோதியதனால் வயோதிபர் ஒருவர் காலில் தசை பிடுங்கப்பட்டுப் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இராணுவ வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். பண்ணையில் நேற்று முற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது.

இதில் சம்பியன் ஒழுங்கை கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த வீ. சோமசுந்தரம் (வயது78) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

தீவகத்தில் உள்ள கோயி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## பனங்கட்டி உற்பத்திச் சங்கத்தை மீளத் திறக்க நீதிமன்று அனுமதி

### குற்றத்துக்கு 7 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், செப். 2

ஊர்காவற்றுறையில் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தப்படும் உடல் நலத்துக்குக் கேடான உரம் கலந்து பனங்கட்டியைத் தயாரித்து விற்பனை செய்தமை தொடர்பான வழக்கில், குறித்த சங்கம் குற்றத்தை ஒப்புக்கொண்டு 7 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தியது. இது தவிர விற்பனைக்கு விடப்பட்ட பனங்கட்டிகளை மீள எடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் ஒப்படைக்குமாறும் உரிய அறிவுறுத்தல்களுக்கேற்ப நிறுவனத்தை மீளத் திறக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்குக் கிடைத்த தகவலின் படி கடந்த 13 ஆம் திகதி நடத்திய அதிரடிச் சோதனையில் உரம் கலந்து பனங்கட்டிகள் தயாரிக்கப்பட்டமை தெரியவந்தது.

அங்கு பயிர்செய்கைக்குப் பயன்படுத்தும் பொகோடோ உரம் 125 கிலோகிராம் மற்றும் உரம் கலந்து தயாரிக்கப் பட்ட 125 கிலோகிராம் பனங்கட்டி என்பன மீட்கப்பட்டன. அந்தச் சங்கத்தை உடனடியாகச் சீல் வைத்து மூடுமாறும் நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

(21 ஆம் பக்கம் பார்க்க)

மிக அற்புதமான அபூர்வமான பொன்னான உண்மையான வாய்ப்பு

கனடா PR (நிரந்தரக்குடியுரிமை) உடன் படிக்க உழைக்க அரியவாய்ப்பு

3 பேருக்கு மட்டுமே. 04.09.2014 வரை மட்டுமே.
தவறவிடாதீர்கள்.
மிகக் குறைவான கட்டணத்துடன் இது சாத்தியமாகின்றது.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090



(51580) (6.4.3)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# திருமண வீட்டுக்குச் சென்றவேளை வீடு புகுந்து ரூ.85 ஆயிரம் சூறை

## பருத்தித்துறை ஓராம் கட்டையில் சம்பவம்

வடமராட்சி.செப்.2
திருமண வைபவமொன்றில் கலந்து கொள்ள வீட்டிலுள்ளோர் அனைவரும் சென்றிருந்த போது, அவர்களது வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் 85 ஆயிரம் ரூபா ரொக்கப் பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பகல் பருத்தித்துறை ஓராம் கட்டைப் பகுதியிலுள்ள இளைப்பாறிய அதிபர் ஒருவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம், பற்றி மேலும் தெரியவருவதாவது:-

திருமண வைபவம் ஒன்றுக்கு வீட்டார் சென்றிருந்த சமயம் வேறு சாவியைப் பயன்படுத்தி கதவைத் திறந்து வீட்டினுள் நுழைந்த திருடர்கள் அலுமாரியில் இருந்த பொருள்களை சிதறடித்து சல்லடை போட்டுத் தேடியுள்ளனர். அத்துடன் அங்கு வைக்கப்பட்டிருந்த 85 ஆயிரம் ரொக்கப் பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

வீட்டார், வீடு திரும்பிய போது கதவுகள் அனைத்தும் திறந்த நிலையில் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். பின்னரே திருட்டுப் போன விடயம் அவர்களுக்கு தெரிய வந்துள்ளது.

இதேவேளை, கடந்த புதன்கிழமை இரவு பருத்தித்துறை தம்பசிட்டியிலுள்ள வீடொன்றில் வீட்டார் அனைவரும் வெளியூருக்கு சென்றிருந்த சமயம் ஓடு பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் வீட்டிலிருந்த மடிக்கணினி, பிறின்ரர், கமெரா போன்ற கணினி உபகரணங்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பாகவும் பருத்தித்துறை பொலிஸில் வீட்டு உரிமையாளர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-173-109)

## 19 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் ஆறுமுகம் கந்தையா

(இளைப்பாறிய தபாலதிபர்–கோப்பாய்)



தோற்றம் 18.04.1907
மறைவு 02.09.1995

திதி: புரட்டாதி மாத பூர்வபட்ஷ அட்டமி (02.09.2014) செவ்வாய்க்கிழமை

எம் அருமை அப்பாவே! பத்தொன்பது ஆண்டென்ன பத்தொன்பதினாயிரம் ஆண்டுகள் தான் உருண்டாலும் உங்களது நினைவுகள் எங்களை என்றும் விட்டு அகலாது! உங்கள் ஆத்மாசாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை
க.குலராசன் (மகன்)
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

கைதடி தெற்கு, கைதடி. (51579)(4.3.6)

## உம் நினைவுகள் சுமந்து விழிநீரில் 11 ஆவது ஆண்டு

ஜெகத்சனனம் 03 ★ 04 ★ 1959



ஜெகதீபமாய் 03 ★ 09 ★ 2003

### வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரன்

திதி: பூர்வபக்க அட்டமி 02.09.2014

அன்பினால் ஆதரித்து மாசில்லா உம் மனதில்
பாசாங்கு துளியுமிலா பாசப் பிணைப்புடன்
வாழ்க்கைப் பாதைதனில் துளியும் துவண்டு விடாது
பயணித்த எம் குருவே நிலையில்லா வாழ்வுதனில் எம்மை நிலைநிறுத்தி தனியாய்
நின்று போராடி இன்றைய எம் வாழ்வை நெறிப்படுத்திய தூயவரே
காலம் செய்த கோலத்தின் விளைவால் காலனவன் கைப்பிடிக்குள்
காணாமல்போய் ஆண்டுகள் பதினொன்று ஆனதையா
கண்ணீரை மட்டும் பரிசாய் தந்து சென்ற வழி மறந்தீரோ!
திரும்பிவர மாட்டீரோ! தேம்பி அழும் எங்களை தேற்ற வரமாட்டீரோ!
காலம் உம்மை எம் கண்களில் இருந்து பறித்து ஆண்டுகள் பல
கடந்தாலும் எங்கள் உள்ளத்தில் உங்கள் நினைவுகள் மட்டும்
எப்போதும் நீங்காதிருக்கும்.
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

374, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (51505)(7.6.3)

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, மகன், மகள்மார், மருமகன்மார்.

## கமக்காரர் கூட்டம்

தென்மராட்சி, செப்.2
தென்மராட்சி தெற்கு மறவன்புலவு கமக்கார அமைப்பின் பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு முன்பாக இடம்பெறும்.

அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தலைவர் அ.திருஞானசம்பந்தர் அறிவித்துள்ளார். (வ-9)

## செல்வச் சந்நிதியில் ஆன்மிக சொற்பொழிவு

வடமராட்சி, செப். 2
தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் வருடாந்த பெருந்திருவிழாவை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் தினமும் முற்பகல் 10.30 மணிக்கு நடத்திவரும் விசேட ஆன்மிக நிகழ்வு வரிசையில் இன்று செவ்வாய்க்கிழமை 'மனம் துடித்தது, மானம் தடுத்தது' என்னும் தலைப்பில் செஞ்சொற்செம்மல் இரா.கேதீசனும், நாளை புதன்கிழமை 'இன்றைய தேவைகளும் சமயப் பணிகளும்' என்னும் தலைப்பில் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் ஜே.சந்திரப்பிரகாசமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை 'முருகனும் அழகும்' என்னும் தலைப்பில் ஆசிரியர் க.கைலைநாதனும் சொற்பொழிவாற்றுவார்கள். (ஓ-173)

## சந்நிதியில் நாளை பூங்காவனம்

வடமராட்சி, செப். 2
தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் வருடாந்த பெருந்திருவிழாவில் முக்கிய திருவிழாக்களில் ஒன்றான பூங்காவனத் திருவிழா நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவை ஒட்டி பெருந்தொகையான பக்தர்கள் பால் காவடி, கரகக்காவடி, வேல்காவடி, தூக்குக் காவடி, கற்பூரச்சட்டி எடுத்தும் அங்கப் பிரதிஷ்டை செய்தும் நேர்த்திகளை நிறைவேற்றுவார்கள். (ஓ-173)

## துயர் பகிர்கின்றோம்

எமது வட மாகாண சபையில் கடமையாற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர்
செல்வி பிரபா கந்தசாமிஐயர்
அவர்களின்
உறவுகளான தாயார், சகோதரர் மற்றும் சகோதரியின் மறைவுகள் குறித்த எமது கண்ணீர் அஞ்சலிகள்!

அன்னை உயிர் பிரிந்த, அந்தத் துயர் ஆறுமுன்னே,
அண்ணன் சோதரியை அடுத்தடுத்துப் பிரிந்தாயோ?
என்ன துயரமிது? எம் மனமும் கலங்குகின்றதே!
துன்பம் மிகக்கொண்ட சோதரியே துயர்துடைத்தோம்!
இதயங்களில் உனக்காக இரங்கற்பா பாடியின்று,
இதய அஞ்சலிகள் இங்கே நாம் சமர்ப்பித்தோம்.

நண்பர்கள், வட மாகாண சபை.
பிரதி பிரதம செயலாளர் அலுவலகம்-நிர்வாகம், வடமாகாணம்.

## நினைவலைகள்

யோண் இராசையா இராசையா மார்த்தீனம்மா

50ஆம் ஆண்டு நினைவஞ்சலி — 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி





மலர்வு : 24.04.1905
உதிர்வு : 26.04.1965

மலர்வு : 12.11.1918
உதிர்வு : 20.08.2004

எமது குடும்பத்தின் கலங்கரை விளக்கமாய்
அன்பின் பொறுமையின் சிகரங்களாய் விளங்கி
நாம் தலைநிமிர உங்கள் வாழ்வை எமக்காய்
அர்ப்பணித்த அன்புத் தெய்வங்களே! உங்களை நாம் என்றும் மறவோம்
இறைவனின் பாதத்தை அலங்கரிக்கும் அழகிய மலர்களே
எம் கண்ணீரை உங்களுக்கு காணிக்கையாக்குகின்றோம்.

34, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (51572)(5.6.3) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் யோசப் கமலநாதன்

மலர்வு 28.04.1955
உதிர்வு 02.09.2013

சின்னச் சிரிப்பும் சிங்காரப் பேச்சும் கள்ளம் கபடமில்லா உள்ளன்பும் கொண்டு
எம்மைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டாய்! திட்டமிட்டுக் காலனவன் அழைத்துவிட்டான்
தூங்கவில்லை எம் கண்கள் அன்புத் தெய்வமே!
அன்பு என்ற ஒன்றால் அணைத்த தெய்வமே! மெல்ல மெல்ல உம் ஆவி துடித்ததையும்
கொஞ்சம் கொஞ்சமாய் நோய் உம்மைக் கொலை செய்ததையும் நாம் அறியவில்லையே!
இருந்தும் எம் முகங்கள் தானே உம் நெஞ்சில் நிலைத்து நின்றதே!
அன்புத் தெய்வமே! உம் கமலவதனம் கண்டு நிச்சயம் அந்த இறைவனே ஆறுதல் கொள்வார்
இறைவன் திருவடியில் ஒற்றைக் கமலமாய் அமர்ந்திருக்கும் எம் அன்புத் தெய்வமே!
எம் கண்ணீரோடு கூடிய செபத்தைக் காணிக்கையாக்குகிறோம்.

34, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (51573)(45.6.3)


மனைவி, பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி இராமலிங்கம்
(முன்னாள் பணியாளர் எயர்சிலோன்)

மண்ணில் 02.03.1923
விண்ணில் 12.09.2013

திதி: பூர்வபக்ஷ அட்டமி 02.09.2014



அன்புள்ளம் கொண்ட எமது அன்புத் தந்தையே!
பாசத்துடன் எமை அரவணைத்து அறிவூட்டி
பண்புடனே வளர்த்தீர்கள்
உத்தம குணங்கள் கொண்டீர் உன்னத வாழ்வு கண்டீர்
அன்புள்ள கணவனாகி பாசமுள்ள தந்தையாகி
இன்னல்கள் பலவந்தும் இன்முகம் காட்டினீர்கள்
மண்விட்டு நீங்கள் மறைந்து விண்நோக்கி சென்றாலும்
எம் நெஞ்சம் விட்டு நீங்காமல் என்றும் நிலைத்திருப்பீர்கள்
நீங்காத நினைவுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"கலா பவனம்"
இல.14, மாட்டீன் லேன், யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் சின்னத்தம்பி அழகராஜா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

தோற்றம் 12.07.1926
மறைவு 03.08.2014



அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலமாக உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், எம்மோடு நின்று உதவியவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

"தில்லைஸ்தான்"
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர் (51578)(45.3.6.)

## தொழிற் [illegible] பயிற்சிகள்

தென்மராட்சி, செப். 2
சாவகச்சேரி இளைஞர் சங்கங்களின் சமாசத்தினர் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான 3 மாத தொழிற்பயிற்சி நெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறியில் தையல், கணினி மென்பொருள், வன்பொருள் ஆகியவற்றுக்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பயிற்சிகளில்பங்குபற்றவிரும்பும் இளைஞர், யுவதிகள் இன்றுதொடக்கம்எதிர்வரும் நான்காம்திகதிவரைகைதடி நுணாவில் அறவழி நிலையத்தில் உள்ள சமாச அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## தொண்டமானாறு ஆற்றில் மிதப்புப் போட்டு கண்காணிப்பு

### நீராடுவோர் எல்லை தாண்டிச் செல்வதைத் தடுக்க

வடமராட்சி, செப். 2
தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆற்றில் நீராடுவோர் எல்லை தாண்டிச் செல்லாமல் பாதுகாப்பதற்காக, அக்கரையை ஒட்டிய ஆழமான பகுதியில் அடையாளம் காண வசதியாக மிதப்புகள் போடப்பட்டு கடற்படையினர் கண்காணித்து வருகின்றனர்.

செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவுக்கு வருகை தரும் பக்தர்கள் ஆற்றங்கரையில் நீராடும் போது ஆழமான பகுதிக்கு செல்லும் வேளையில் ஆபத்து ஏற்பட வாய்ப்புக்கள் இருப்பதனாலேயே ஆற்றில் நடுவில் எல்லை இடப்பட்டு மிதப்புக்கள் மிதக்க விடப்பட்டுள்ளன.

மிதப்புகளுக்கு அப்பால் எவரும் நீராடச் செல்லக் கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அக்கரையில் கடற்படையினர் கடமையில் இருந்து நீராடும் பக்தர்கள் எல்லை தாண்டாமல் கண்காணித்து வருகின்றனர்.

இதேவேளை -7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, 8 ஆம் திகதி திங்கட்கிழமை, 9 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் இடம்பெறும் சப்பரம், தேர், தீர்த்தத் திருவிழாக் காலங்களில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தின் ஏற்பாட்டில் ஆலய வளாகத்தில் தற்காலிகமாக சுற்றுலா நீதி மன்றம் இயங்கும்.

ஆலயச் சுற்றாட லில் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிஸாரால் சுற்றுலா நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு உடனுக்குடன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். (வ-173)

## தமிழரசுக் கட்சியின் வடமராட்சிக்கான இளைஞர் அணி

பருத்தித்துறை, செப். 2
இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வடமராட்சிப் பகுதிக்கான இளைஞர் அணி ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் தலைமையில் பருத்தித்துறை நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற இளைஞர் அணிக்கான ஒன்றுகூடலில் பின்வருவோர் புதிய நிர்வாகக் குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இளைஞர் அணியின் தலைவராக ரி.சுரேஸும், செயலாளராக ம.சாந்தரூபனும், பொருளாளராக கு.பன்னீர்ச்செல்வமும் தெரிவு செய்யப்பட்டதோடு, பருத்தித்துறை நகர சபை சார்பாக சி.தீபானந்தும், கரவெட்டி பிரதேச சபை சார்பாக எஸ். பால்ராஜ், பருத்தித்துறை பிரதேச சபை சார்பாக பூ.சஞ்சீவனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் வடமராட்சிப் பகுதியிலுள்ள பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 15 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த மாநாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-108)

## ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான தர வட்டம் இன்று

தென்மராட்சி, செப். 2
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான தரவட்டம் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறும். ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் ஆங்கில பாட பெறுபேற்று வீதத்தை அதிகரிக்கும் நோக்குடன் இந்த தரவட்டம் நடத்தப்படவுள்ளது.

தரவட்டத்தில் மாணவர்களை பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நோக்குடன் வலயக் கல்வி அலுவலகத்தால் வெளியிடப்பட்ட ஆங்கில பாட செய் நூல் -1 விநியோகிக்கப்பட்டு செயல்விளக்கமும்வழங்கப்படவுள்ளது.

வலயத்தில் ஜி.சீ.ஈ.சாதாரண தர வகுப்புகளையுடைய பாடசாலைகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை இதில் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)


COLLEGE OF CHEMISTRY

# CHEMISSTONE

MONTHLY SERIAL EXAM-JULY 2014

G.C.E(A/L) 2016 Rank List

DIAS B.Sc(Hons) Spl in Chem.

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.


| S.No. | Index.No. | Full Name | School | Medium | Marks | Rank |
|---|---|---|---|---|---|---|
| 1 | J/8073/B | Niluja Mahadevan | V.G.H.S | | 98 | 1 |
| 2 | J/8100/B | Rathini Shanmugalingam | V.G.H.S | | 98 | 1 |
| 3 | J/8065/B | Thirugnanasampanthan Agashan | J.H.C | Eng | 97 | 3 |
| 4 | J/7141/M | Raveenthiran Banupriyan | J.H.C | | 96 | 4 |
| 5 | J/8321/B | Yohendrarajah Shahithiyan | J.H.C | | 96 | 4 |
| 6 | J/7029/M | Thilakaraj Prakanth | S.J.C | | 96 | 4 |
| 7 | J/8203/B | Kopithah Pavalakumaran | V.G.H.S | | 95 | 7 |
| 8 | J/7097/M | Sivapalan Shankeerthan | J.H.C | | 94 | 8 |
| 9 | J/8017/B | Laxshika Ramkumar | K.H.C | | 94 | 8 |
| 10 | J/8292/B | Mathusa Sivayokan | V.G.H.S | | 94 | 8 |
| 11 | J/8114/B | Balasuntharam Tharushan | J.H.C | | 93 | 11 |
| 12 | J/7004/M | Aniththushaa Amarasegaram | V.G.H.S | | 93 | 11 |
| 13 | J/8193/B | Hamsha Thanancheyan | V.G.H.S | | 93 | 11 |
| 14 | J/8289/B | Thamiliny Kangatharan | V.G.H.S | | 93 | 11 |
| 15 | Mu/8319/B | Singanayagam Rajanan | Y.C.C | | 93 | 11 |
| 16 | J/8107/B | Pathmanathan Meshihan | J.H.C | Eng | 92 | 16 |
| 17 | J/5411/M | Kavipriya Manoharan | K.H.C | | 92 | 16 |
| 18 | J/7088/M | Thevakumar Luheerathan | K.H.C | | 92 | 16 |
| 19 | Mu/5414/M | Keththura Lawrance | M.C.C | | 92 | 16 |
| 20 | J/7026/M | Kanagalingam Shanggeeth | J.H.C | | 91 | 20 |
| 21 | J/7098/M | Murugesapillai Dineskumar | J.H.C | | 91 | 20 |
| 22 | J/8424/B | Yogeswaran Swasthigan | J.H.C | | 91 | 20 |
| 23 | J/7047/M | Sivapathasundram Mathurikan | J.H.C | | 90 | 23 |
| 24 | J/8127/B | Sathiyaseelan Kokulan | J.H.C | Eng | 90 | 23 |
| 25 | J/7173/M | Kesavan Kovarthanan | S.J.C | Eng | 90 | 23 |
| 26 | J/7390/M | Vithusha Lingasabesan | V.G.H.S | Eng | 90 | 23 |
| 27 | J/7093/M | Kalaivani Sivagnanam | V.G.H.S | | 90 | 23 |
| 28 | J/8011/B | Saranja Kugatthas | V.G.H.S | | 90 | 23 |
| 29 | J/7140/M | Lingaratnam Subakaran | J.H.C | | 89 | 29 |
| 30 | J/7218/M | Ganesalinham Arudshankar | J.H.C | | 89 | 29 |
| 31 | J/8115/B | Jegatheeser Kanisthan | S.P.C | | 89 | 29 |
| 32 | J/8007/B | Kajaluxsi Ketheeswaran | V.G.H.S | | 89 | 29 |
| 33 | J/7043/M | Kulasingam Kanapalan | J.H.C | | 88 | 33 |
| 34 | J/8126/B | Jeyakumar Laksujan | J.H.C | Eng | 88 | 33 |
| 35 | J/8080/B | Chandramouleesan Gowribalan | S.J.C | | 88 | 33 |
| 36 | J/7006/M | Harani Pirabaharan | V.G.H.S | Eng | 88 | 33 |
| 37 | J/8392/B | Tharangi Navakumaran | V.G.H.S | Eng | 88 | 33 |
| 38 | J/7384/M | Sivananthan Sivaruban | F.M.M.V | | 87 | 38 |
| 39 | J/7020/M | Wijayakumar Tharsanen | J.H.C | | 87 | 38 |
| 40 | J/7168/M | Kentheeswaran Sivakajan | S.J.C | Eng | 87 | 38 |
| 41 | J/7022/M | Rudsika Navaratnam | V.G.H.S | | 87 | 38 |
| 42 | J/7252/M | Saruga Satgunarajah | V.G.H.S | | 87 | 38 |
| 43 | J/8222/B | Neeranjali Paralan | V.G.H.S | | 87 | 38 |
| 44 | J/7113/M | Viyajarathinam Jeevapriyanthan | V.H.C | | 87 | 38 |
| 45 | J/7142/M | Srinevasan Sarujan | J.H.C | | 86 | 45 |
| 46 | J/7089/M | Kuganathan Laxshan | K.H.C | | 86 | 45 |
| 47 | J/7323/M | Karunanithy Sarjanan | K.H.C | | 86 | 45 |
| 48 | J/7409/M | Balasingam Vithuran | K.H.C | | 86 | 45 |
| 49 | J/8027/B | Thavabalasingam Sarangan | M.C | | 86 | 45 |
| 50 | J/8051/B | Thevathas Kokulan | M.C | | 86 | 45 |
| 51 | J/7293/M | Thayana Selvaradnam | S.C | | 86 | 45 |
| 52 | J/8001/B | Piraveena Raghavan | V.G.H.S | | 86 | 45 |
| 53 | J/8049/B | Suganya Suganthan | V.G.H.S | Eng | 86 | 45 |
| 54 | J/8105/B | Danegka Somaskanthasamy | V.G.H.S | | 86 | 45 |
| 55 | J/8194/B | Abiramy Natgunam | V.G.H.S | | 86 | 45 |
| 56 | J/8269/B | Keeyani Sivagnanam | V.G.H.S | | 86 | 45 |
| 57 | J/8298/B | Thadsagini Pakiyaraj | V.G.H.S | Eng | 86 | 45 |
| 58 | J/7250/M | Subahary Ketheeswaran | J.H.L.C | | 85 | 58 |
| 59 | J/8252/B | Mathuranga Vickneswaran | V.G.H.S | | 85 | 58 |
| 60 | J/8323/B | Mousook Sithy Jaleena | A.A.C | | 84 | 60 |
| 61 | J/8052/B | Thirumaran Elamaran | J.H.C | | 84 | 60 |
| 62 | J/8308/B | Vineeba Simmenthiran | K.C.C | | 84 | 60 |
| 63 | J/7129/M | Pararajasingam Ahilrajh | K.H.C | Eng | 84 | 60 |
| 64 | J/8118/B | Gnanachchandran Kajeevan | S.J.C | | 84 | 60 |
| 65 | J/8005/B | Thuvaraka Muralietharan | V.G.H.S | Eng | 84 | 60 |
| 66 | J/8245/B | Sivaranchini Vivekanandan | V.G.H.S | | 84 | 60 |
| 67 | J/8397/B | Laksika Senathirajah | V.G.H.S | | 84 | 60 |
| 68 | J/8407/B | Malik Muhamed Khalith | A.A.C | | 83 | 68 |
| 69 | J/5402/M | Parameswaran Ratheeshan | J.H.C | | 83 | 68 |
| 70 | J/8083/B | Santhirakumar Sivapriyan | J.H.C | Eng | 83 | 68 |
| 71 | J/5501/B | Sinthuja Somasundaram | V.G.H.S | Eng | 83 | 68 |
| 72 | J/8006/B | Thirisika Manivannan | V.G.H.S | Eng | 83 | 68 |
| 73 | J/8172/B | Rahavi Rahavan | V.G.H.S | Eng | 83 | 68 |
| 74 | J/8343/B | Benitta Anton Jesuthas | V.G.H.S | | 83 | 68 |
| 75 | J/7001/M | Nagarajah Senthuran | J.C.C | | 82 | 75 |
| 76 | J/7108/M | Shivarasan Tharmeegan | J.H.C | Eng | 82 | 75 |
| 77 | J/7174/M | Ilankumaran Thishan | J.H.C | Eng | 82 | 75 |
| 78 | J/7180/M | Thurairasa Thusyanthan | J.H.C | | 82 | 75 |
| 79 | J/7227/M | Sittampalam Sooriyakumar. | J.H.C | | 82 | 75 |
| 80 | J/8111/B | Sriskantharajah Vijeyashanth | J.H.C | | 82 | 75 |
| 81 | J/8131/B | Seevaratnam Govarththanan | J.H.C | | 82 | 75 |
| 82 | J/8333/B | Suthargene Raveenthiran | J.H.L.C | | 82 | 75 |
| 83 | Kn/7145/M | Rajkumar Kinthujan | K.C.C | | 82 | 75 |
| 84 | J/7279/M | Daranya Maniseharan | M.C | | 82 | 75 |
| 85 | J/7292/M | Tharshana Selvaratnam | S.C | | 82 | 75 |
| 86 | J/8033/B | Sankavi Thaveendran | V.G.H.S | Eng | 82 | 75 |
| 87 | J/8046/B | Abirami Jeyakumar | V.G.H.S | | 82 | 75 |
| 88 | J/8255/B | Vishnupiriya Ravindren | V.G.H.S | | 82 | 75 |
| 89 | J/8304/B | Kajansika Vimalachandran | V.G.H.S | | 82 | 75 |
| 90 | J/8349/B | Thuraisingam Nishandanshan | V.M.M.V | | 82 | 75 |
| 91 | J/8175/B | Sharon Rochelle Elmo Johnson | C.G.C | | 81 | 91 |
| 92 | J/7163/M | Sivagnanam Thuvarakan | J.H.C | Eng | 81 | 91 |
| 93 | J/7434/M | Thevarajah Thuvaragan | J.H.C | | 81 | 91 |
| 94 | J/8058/B | Thurairathnam Kokulan | J.H.C | | 81 | 91 |
| 95 | J/8316/B | Selvarupan Mathushan | J.H.C | | 81 | 91 |
| 96 | J/7055/M | Rakeswaran Saranka | J.H.L.C | | 81 | 91 |
| 97 | J/7249/M | Nithiya Jeyatheeswaran | J.H.L.C | | 81 | 91 |
| 98 | Kn/8034/B | Kasinathan Hanurathan | K.C.C | | 81 | 91 |
| 99 | J/7017/M | Uruthirakumaran Lavaneethan | K.H.C | | 81 | 91 |
| 100 | J/7340/M | Luxshiga Uthayakumar | V.G.H.S | Eng | 81 | 91 |
| 101 | J/8113/B | Shashmeera Shriganeshan | V.G.H.S | Eng | 81 | 91 |
| 102 | J/7176/M | Sritharan Rajeevan | J.H.C | | 80 | 102 |
| 103 | J/7328/M | Shanmugakulakumaran Saravanan | J.H.C | | 80 | 102 |
| 104 | J/8312/B | Sivapalan Paraparan | J.H.C | | 80 | 102 |
| 105 | 7352/M | Rajenthirakumar Subakaran | S.J.C | Eng | 80 | 102 |
| 106 | J/7248/M | Thurusthika Nesalingam | V.G.H.S | | 80 | 102 |
| 107 | J/7298/M | Gobitha Selvaranjan | V.G.H.S | | 80 | 102 |
| 108 | J/7354/M | Anton Yohancy | H.F.C | | 79 | 108 |
| 109 | J/8095/B | Sivasathiyarajan Piraijalan | I.C.C | | 79 | 108 |
| 110 | J/7160/M | Theivendram Athavan | J.H.C | Eng | 79 | 108 |
| 111 | J/7348/M | Sothilingam Pirakalathan | J.H.C | | 79 | 108 |
| 112 | Kn/7493/M | Anbalagan Anuruththan | K.C.C | | 79 | 108 |
| 113 | J/7253/M | Tharmaraja Kelairaj | K.H.C | | 79 | 108 |
| 114 | J/7258/M | Ielamathy Manivannan | M.L.C | | 79 | 108 |
| 115 | J/7492/M | Subasthika Gnanasampanthan | V.G.H.S | | 79 | 108 |
| 116 | J/8018/B | Kolamugi Vethanayahan | V.G.H.S | | 79 | 108 |
| 117 | J/8224/B | Tharsika Nakenthiram | V.G.H.S | | 79 | 108 |
| 118 | J/7369/M | Balaratnam Pirunthavan | J.H.C | | 78 | 118 |
| 119 | J/7131/M | Ledchumanakumar Deluxsiyan | J.H.C. | | 78 | 118 |
| 120 | J/7422/M | Chandrasekaran Shobanapriyan | K.C.C | | 78 | 118 |
| 121 | J/7436/M | Minuja Kanthasamy | M.H.C | | 78 | 118 |
| 122 | J/7136/M | Mahilrajadurai Benat janushan | S.J.C | Eng | 78 | 118 |
| 123 | J/7149/M | Chandrakumaran Thanusikan | S.J.C | | 78 | 118 |
| 124 | J/7003/M | Delosha Thayanithy | V.G.H.S | Eng | 78 | 118 |
| 125 | J/8191/B | Nilakshika Thirukumaran | J.C | | 77 | 125 |
| 126 | J/5406/M | Sivalingam Kajan | J.H.C | | 77 | 125 |
| 127 | J/7080/M | Elangeswaran Mathynuthan | K.H.C | | 77 | 125 |
| 128 | J/8366/B | Balenthira Tharsana | | | 77 | 125 |
| 129 | J/8201/B | Diluxchana Shanmuganathan | S.J.M.C | | 77 | 125 |
| 130 | | A.M. Antranita Subeska | V.G.H.S | | 77 | 125 |
| 131 | J/7064/M | Nishani Poovalingam | V.G.H.S | | 77 | 125 |
| 132 | J/8186/B | Kajanthini Balendrarajah | V.G.H.S | | 77 | 125 |
| 133 | J/8225/B | Vaishnavy Pushparasha | V.G.H.S | | 77 | 125 |
| 134 | J/8370/B | Vinoja Nithiananthan | V.G.H.S | | 77 | 125 |
| 135 | J/7087/M | Mohan Agashan | J.H.C | Eng | 76 | 134 |
| 136 | J/8259/B | Ramanathan Sathursan | J.H.C | | 76 | 134 |
| 137 | J/7050/M | Arumugham Vithushanth | J.H.C. | | 76 | 134 |
| 138 | Kn/8375/B | Raveenthiranath Sivalaxsan | K.C.C | | 76 | 134 |
| 139 | Mu/7103/M | Jeyatheeswaran Tharmeekan | M.C.C | | 76 | 134 |
| 140 | J/8039/B | Sobika Balakrishnan | M.L.C | | 76 | 134 |
| 141 | J/7391/M | Thuvaraha Manoharan | V.G.H.S | Eng | 76 | 134 |
| 142 | J/8032/B | Sathustika Subenthiran | V.G.H.S | Eng | 76 | 134 |
| 143 | J/8223/B | Vipushana Murugathasan | V.G.H.S | | 76 | 134 |
| 144 | J/8396/B | Keerthika Ramakrishnan | V.G.H.S | Eng | 76 | 134 |
| 145 | J/8400/B | Siriskantharajah Aberame | V.G.H.S | | 76 | 134 |
| 146 | J/7124/M | Peratharan Sukethan | V.M.M.V | | 76 | 134 |
| 147 | Mu/8278/B | Janarththany Kalathevan | V.M.V | | 76 | 134 |
| 148 | J/8341/B | Shrilasha Ramakrishnan | C.G.C | | 75 | 147 |
| 149 | J/8102/B | Karthika Puvaneswaran | I.C.M.V | | 75 | 147 |
| 150 | J/5405/M | Paramanantham Logasanan | J.H.C | | 75 | 147 |
| 151 | J/7171/M | Mahathevan Piraveen | J.H.C | Eng | 75 | 147 |
| 152 | J/7244/M | Vettivel Noshothan | J.H.C | Eng | 75 | 147 |
| 153 | J/8159/B | Sakthivadivel Rathuson | J.H.C | | 75 | 147 |
| 154 | J/7272/M | Mithulajini Thiripuvaneswaran | J.H.L.C | | 75 | 147 |
| 155 | J/7362/M | Velauthapillai Sajeepan | K.H.C | | 75 | 147 |
| 156 | J/8442/B | Kajishiya Perinpanayagam | M.L.C | | 75 | 147 |
| 157 | J/8206/B | Kirushanthy Jeyarasha | S.J.M.V | | 75 | 147 |
| 158 | J/8081/B | Gayaththiri Panchadcaram | V.G.H.S | | 75 | 147 |
| 159 | J/8199/B | Loveciya Sunthar | V.G.H.S | | 75 | 147 |
| 160 | J/8301/B | Thamilchelvi Surenthiran | V.G.H.S | | 75 | 147 |
| 161 | J/8388/B | Thiruse[illegible]vanathan Sangavi | V.G.H.S | Eng | 75 | 147 |

# வை.எம்.சி.ஏ. பகுதியில் 35 குடும்பங்கள் வீட்டுத் திட்டப் பட்டியலில் இருந்து நீக்கம்

## கண்டாவளைப் பிரதேச செயலகம் பாரபட்சமென முறைப்பாடு

கிளிநொச்சி, செப்.2

கண்டாவளை கோரக்கன்கட்டுக் கிராமத்தின் வை.எம்.சி.ஏ. பகுதி மக்களுக்கென கண்டாவளைப் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட நிரந்தர வீடுகள் அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் 160 வீடுகளுக்கான பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது.

வை.எம்.சி.ஏ. பகுதியில் வசிக்கும் 55 குடும்பங்களில் 35 வரையான குடும்பங்களின் பெயர் வீட்டுத்திட்டப் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் திடீரென அவை நீக்கப்பட்டுள்ளன.

இந்தப்பகுதி மக்கள் பலரிடம் காணிஆவணங்கள் உள்ளன. இந்தக் காணிகளில் தாம் 30 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்வதாகவும், தங்களுடைய வை.எம்.சி.ஏ. பகுதிக்கு வீட்டுத்திட்ட வீடுகள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் 35 வரையான குடும்பங்களுக்கு அவை பாரபட்சமான முறையில் கண்டாவளை பிரதேச செயலகத்தினால் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கோரக்கன்கட்டுக் கிராமத்தில் காணிப் பிணக்குகள் எவையும் இல்லையெனவும், வெளியாள்கள் எவரும் காணிகள் உள்ளதென உரிமை கொண்டாடி கிராமத்துக்கு வரவில்லை யெனவும், காணிப் பிணக்குகள் இல்லாத தமது கிராமத்தில் நிரந்தர வீடுகள் பாகுபாடின்றி வழங்குவதற்குக் கண்டாவளைப் பிரதேச செயலர் நடவடிக்கையெடுக்க வேண்டுமெனக் கோருவதென்று கோரக்கன்கட்டு கிராமத்தில் நேற்று முன் தினம் மாலை 4.00 மணியளவில் இடம்பெற்ற கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிளிநொச்சி அரச அதிபர் உட்பட பல அதிகாரிகளிடம் தமது நிலைமைகள் தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த மக்களின் நிலைப்பாடு தொடர்பாகக் கண்டாவளை பிரதேச செயலர் த.முகுந்தனிடம் கேட்டபோது,

வை.எம்.சி.ஏ என்று சொல்லப்படுகின்ற காணி மத்திய வகுப்புத் திட்டக் காணியாகும். மத்திய வகுப்புக் காணிகள் என்பது தனியாருக்குக் கொடுக்கப்பட்ட காணிகளாகும். தனியாருடைய காணிகளில் இருப்பவர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்க முடியாது. அரச காணிகளில் இருப்பவர்களுக்கு மட்டும் தான் வீடுகள் வழங்கப்படுகின்றன.

சொந்த காணிகளில் இருப்பவர்களுக்குத் தான் வீடுகளை வழங்கமுடியும். மத்திய வகுப்புத் திட்டக் காணிகளில் இருப்பதன் காரணமாக கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 749 குடும்பங்கள் ஏனைய கிராமங்களில் வீடுகளை பெற முடியாதுள்ளன. பரந்தன், புன்னைநீராவி, கல்மடுநகர் ஆகியவையே அவை.

ஆனால் கோரக்கன்கட்டு கிராமத்தில் மத்திய வகுப்புத் திட்டக் காணிகளினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 14 ஆகும்.

அரச காணிகளில் குடியிருப்பவர்களுக்கு வீடுகள் வழங்குகின்றீர்கள்.

மத்திய வகுப்புத் திட்டக் காணிகளில் குடியிருக் கும் எமக்கு வீடுகளை ஏன் வழங்கவில்லையென்பதே அந்தக் கிராம மக்களின் முறையீடாகும்.

அரச காணிகளில் குடியிருப்பவர்களுக்குத் தான் காணிகளைச் சீரமைத்து வீடுகளை வழங்கக்கூடிய அதிகாரம் பிரதேச செயலருக்கு உள்ளது.

ஆனால் மத்திய வகுப்புத் திட்டக் காணிகள் தனியாருக்கு வழங்கப்பட்டவை என்பதனால் அவற்றை மக்களுக்கு வழங்கு வதற்கான அதிகாரம் பிரதேச செயலரிடம் இல்லை. காணி அமைச்சருக்கும் இல்லை.

அமைச்சரவை பத்திரம் வழங்குவதற்காகப் பெயர்ப்பட்டியல் சமர்ப்பித்துள்ளோம். அரச காணி என்ற அனுமதிப் பத்திரம் வைத்துள்ளவர்களுக்கு மட்டும் வீடு வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளோம்- என்றார்.

இதேவேளை, கோரக்கன்கட்டு கிராம அபிவிருத்திச் சங்கம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் கண்டாவளை பிரதேச செயலரை நேரில் சந்தித்து நிலைமைகளை விளக்கி மனுவொன்றைக் கையளித்த போது, அதனை வாங்கிய பிரதேச செயலர் கசக்கி எறிந்ததாக உதயனிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

பிரதேச செயலரின் நடவடிக்கை தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் உட்பட உயர்மட்ட அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-18)



கோரக்கன்கட்டு கிராமத்தில் வை.எம்.சி.ஏ. பகுதியில் நிரந்தர வீடுகள் கிடைக்காத குடும்பம் ஒன்று வாழும் வீடு இது.

## விதி மீறிய சாரதிகளிடம் தண்டம்

கிளிநொச்சி, செப்.2

கிளிநொச்சியில் வீதி ஒழுங்கு விதி முறைகளை மீறிய சாரதிகளிடம் 23 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மற்றும் பளை ஆகிய பகுதிகளில் வீதி ஒழுங்குக்கு முரணான விதத்தில் வாகனங்களை முந்திச்சென்றமை, கவனயீனமாக வாகனம் செலுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களில் ஒன்பது பேருக்குத் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் 13 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காப்புறுதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாவும், தலைக் கவசம் இன்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும், தடைசெய்யப்பட்ட பகுதியால் வாகனம் செலுத்திய ஒருவருக்கு 2 ஆயிரம் ரூபாவும், வரிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய ஒருவருக்கு ஆயிரத்து 500 ரூபாவும் என 23 ஆயிரத்து ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ.வகாப்தீனிடம் இவர்களைப் பொலிஸார் முன்னிலைப்படுத்தியதை அடுத்து குறித்த குற்றங்களுக்காக மேற்படி தண்டப்பணம் செலுத்த உத்தரவிடப்பட்டது. (த-55)


## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி கணேசலிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியை)



வேலணை கிழக்கு, தாவாடியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி கணேசலிங்கம் 31.08.2014 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், சிதம்பரப்பிள்ளை-உமையம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை கணேசலிங்கத்தின் அருமை மனைவியும், புனிதவதி ஆறுமுகம், திலகவதி திருநாவுக்கரசு, காலஞ்சென்ற சண்முகநாதன், பத்மாவதி, சுப்பிரமணியம், இலட்சுமிதேவி குணரெத்தினம், தயாநிதி மகேந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் குமார லிங்கம், நடேசமூர்த்தி, இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், திருநாவுக்கரசு மற்றும் அகிலத்திருநாயகி, குணரத்தினம், மகேந்திரநாதன் ஆகியோரின் மைத்துனியும்,யசோதரா, சசிதரா,சபேசன், முரளிதரன், கிரிதரன், சிறிதரன்,கலாதரா, வசுந்தரா(லதா), சுமித்திரா ஆகியோரது சிறிய தாயாரும், கலைக்குமாரி, சுரேஸ்குமார், ஜயந்தன், தர்சினி,நர்மதன், சிவானுஜா, சேயோன், சிவப்பிரியா, சுபேந்திரன் ஆகியோரின் பெரியம்மாவும், குமரன், காந்தன்,சயந்தன், வரதன், நிகேதனன், கீதா, கவிதா, வனிதா, தனஞ்சயன் ஆகியோரின் மாமியும், திவ்வியா, விக்னேஷ், குமார், கிருஷ்ணி, சேயோன், திஷான், பிரம்மன், நீரஜா, மதுரன், மகதி, ஜெயந்திரன், ஆரபி, பைரவி, ஆதிரையன், தனுஷ்யன், கௌரீஷன், திலக்ஷன், சஜீவன், மதுஷன், லக்ஷிகா, ஆதிதன், அக்ஷாயினி, அகர்ஷியா ஆகியோரின் அருமைப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணி அளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.91/18, இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 6380

(51588)(5.3.6)

தகவல்: குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு

எமது சபையின் நிரந்தர ஊழியராகிய ஜெகதீஸ்வரனின் மாமியாராகிய நடராசா அன்னலட்சுமி அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (02.09.2014) நண்பகல் 12 மணியளவில் பொற்பதி வீதி, திருநெல்வேலியில் நடைபெற விருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள், சபை ஊழியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

படபிராந்திய ஊழியர் தொழிற்சங்கம்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

(51583)(4.6.3)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கந்தசாமி



சாவற்கட்டைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கந்தசாமி நேற்று (01.09.2014)திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-அம்மணி தம்பதியரின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி, பூலோகவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவமலர்,செல்வமலர், இராசமலர், துரைசிங்கம்(UK), புஸ்பமலர்,சிவமலர்,இன்பமலர், ஆசைமலர், ஜீவமலர்(டென்மார்க்), ஜெயமலர்(அபிவிருத்தி உத்தியோகத்தர், உடுவில் பிரதேசம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பாலசாமி மற்றும் சிதம்பரநடராசா,துரைசிங்கம், வானதி (UK), சுந்தரலிங்கம்,கனகேஸ்வரன், மோகனராஜ் (பிரான்ஸ்), ஞானச்சந்திரன் (டென்மார்க்),கோணலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், சின்னையா,பொன்னம்மா,காலஞ்சென்றவர்களான பாக்கியம், சுப்பிரமணியம், கந்தையா மற்றும் அருமைத்துரை, பொன்னையா, தெய்வேந்திரம், காலஞ்சென்ற பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதாஸ், ரூபன், கஜன், றஜீவ், ஈசன், ஜீவன், சர்மிளா, சுமன், ஸ்ரெலா, விஜயந்தி, தர்சினி,வினோதினி, விஜித், பிரஜீட், றொபின், றொபிந்தினி,துஸ்யந்தன்,ஜயுந்தன், ஜயந்தினி, அபிமன்யு (U.K), அஜித்தன் (U.K) சோபனா, ஜெசீனா, சுரேனா,நிரோஜனா, யாதவன், றிதாபன், இந்துஜா,டிலக்சன், லக்சி, பாரதி(கனடா), சிவபாரத், வேணுகானன் (U.K), சுமனவாகினி,துஸ்யவாகினி ஆகியோரின் அன்புப் பேரனும், விதுசன், விந்துசி,வினுசிகா, றினாஸ், யொயனா, வர்சிகா, தஸ்மிகா, கிசேன், அஸ்வினி (கனடா),அபிசயன், நவகிருஸ்ணன், விபூசனன், யதுராகன் யதுசன்,டினுசன் கபிலன், தனுராஜ், சானுஜா, விதுசிகா, நிதுசா, அபிநாஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2014) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு, சாவற்கட்டு.

(51587)(5.3.6)

தகவல்: பிள்ளைகள்

## பி.பி.சி. நிர்வாக குழுவின் தலைவராக பெண்

லண்டன், செப்.2

உலகப் புகழ்பெற்ற வானொலி, தொலைக்காட்சி செய்தி நிறுவனமான பி.பி.சியின் செயற்பாடுகளை மேற்பார்வையிடும் பி.பி.சி. அறக்கட்டளை நிர்வாகக் குழுவின் புதிய தலைவராக ரோனா பேர்ஹெட் (வயது53) என்ற பெண் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

எச்.எஸ்.பி.சி. வங்கி, பெப்ஸிகோ உள்ளிட்ட பல சர்வதேச நிறுவனங்களின் நிர்வாகக் குழுவில் இடம் பெற்றுள்ள ரோனா பேர்ஹெட். பி.பி.சி. அறக்கட்டளையின் முதலாவது பெண் தலைவராக இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகப் புகழ்பெற்ற பி.பி.சியில் தலைவர் பொறுப்பு ஏற்கவுள்ளமை பற்றிக் கருத்துக் கூறிய அவர், "திறமை வாய்ந்த பலரைக் கொண்டுள்ள பிரிட்டனின் உன்னதமான நிறுவனத்தின் நிர்வாகக் குழுவுக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்பதைப் பெருமையாகக் கருதுகிறேன்" - என்றார்.

அவரது நியமனம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை பிரிட்டன் கலாசாரத்துறை அமைச்சர் ஸஜித் ஜாவீத் பின்னர் வெளியிடுவார்.

அதன்பின்னர், பிரிட்டன் நாடாளுமன்றத்தின் கலாசாரம், ஊடகம், விளையாட்டுத் துறைகளின் தெரிவுக் குழு முன்பாக அவர் முன்னிலையாக வேண்டும். தெரிவுக்குழு உறுப்பினர்களின் விசாரணைக்குப் பின்னரே அவர் பதவியேற்பது உறுதி செய்யப்படும். (வ)



பிரான்ஸ் தலைநகர் பாரிஸின் புறநகர் பகுதியில் நான்கு மாடி கட்டடமொன்றின் ஒரு பகுதி நேற்று முன்தினம் திடீரென்று வெடித்து, நொருங்கி விழுந்தது. உள்ளூர் நேரப்படி நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் இடிபாடுகளில் சிக்கிய ஒரு சிறுவன் உயிரிழந்ததாக நேற்றுமுன்தினம் காலை அறிவிக்கப்பட்டது. ஆனால், அன்றையதினம் மாலை நிலவரப்படி 2 சிறுவர்கள், 2 பெண்கள் உட்பட இதுவரை 6 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் 11 பேர் உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 4 பேர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (வ)

# சோமாலியா சிறைக்குள் தீவிரவாதிகள் அட்டகாசம்

### மோதலில் 12 பேர் உயிரிழப்பு

மொகாடிசு, செப். 2

சோமாலியா நாட்டு சிறைக்குள் புகுந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 12 பேர் உயிரிழந்தனர்.

சோமாலியா தலைநகர் மொகாடிசுவில் சிறைச்சாலை உள்ளது. இது அந்த நாட்டின் உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு துறையால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அங்கு அல்கொய்தா அமைப்பின் மற்றொரு பிரிவான அல்ஷபாப் தீவிரவாதிகளின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் தீவிரவாதிகள் கும்பலாக அங்கு புகுந்தனர். சிறைச்சாலையை உடைத்து தாக்குதல் நடத்தினர். அங்கு அடைக்கப்பட்டிருந்த தீவிரவாதிகளை மீட்க முயன்றனர். சிறைக் காவலர்கள் அதைத் தடுத்தனர். இதனால் இரு



தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. மோதல் சுமார் 45 நிமிடங்கள் நீடித்தது.

அதில் 12 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 7 பேர் தீவிரவாதிகள் ஆவர். மேலும் 3 சிறைக் காவலர்கள் மற்றும் 2 கைதிகளும் உயிரிழந்துள்ளனர். (வ)

## தீவிரவாத அமைப்பில் சேர முயன்ற பிரான்ஸ் சிறுமி கைது

பரிஸ், செப்.2

தீவிரவாதிகள் அமைப்பில் இணைவதற்காகப் பிரான்ஸ் நாட்டில் இருந்து சிரியாவுக்குத் தற்போது செல்ல முயன்ற 16 வயது இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்..

இதுகுறித்து பிரான்ஸ் உள்துறை அமைச்சர் பெர்னார்ட் கஸனுவ் கூறுகையில்,

16 வயது இளம் பெண் ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அமைப்பில் சேர சிரியாவுக்கு செல்ல முயன்ற போது கைது செய்யப்பட்டுள்ளார்.

சனிக்கிழமை இரவு தெற்கு பிரான்ஸில் உள்ள நீ விமான நிலையத்துக்கு வந்த அவர் துருக்கி செல்லும் விமானத்தில் செல்ல முயன்றுள்ளார்.

அவரைப் பொலிஸார் விமான நிலையத்தில் கைது செய்தனர்.

குறித்த சிறுமியை விமானப் பயணச்சீட்டு எடுத்து அனுப்ப முயன்றதாக 20 வயது இளைஞர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சிறுமியின் நோக்கங்கள் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்று அவளது வீட்டார் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய யூனியனில் உள்ள பிரான்ஸில் 50 லட்சத்தும் மேற்பட்ட முஸ்லிம்கள் உள்ளனர்.

அங்கிருந்து இதுவரை 800 முஸ்லிம்கள் ஜிகாதிகளாக சிரியாவில் ஐ.எஸ்.ஐ. எஸ். தீவிரவாதிகள் அமைப்பில் சேர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது. (வ)

## உலக நாடுகளை மிரட்டும் ரஷ்ய ஜனாதிபதி புடின்

மொஸ்கோ, செப்.2

ரஷ்யாவுடன், உலக நாடுகள் மோதுவதைத் தவிர்ப்பதே நல்லது என்று அந்தநாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



*விளாடிமிர் புடின்*

கிரெம்ளினில் இளைஞர் முகாம் ஒன்றை ஆரம்பித்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஆயுதப் படையினர் அணு ஆயுதங்களால் பலப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் எந்தவிதமான சவால்களையும் சந்திப்பதற்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரேனிலிருந்து க்ரைமியாவைப் பிரித்து ரஷ்யாவுடன் இணைத்துக் கொண்டமையையும் புடின் நியாயப்படுத்தியுள்ளார்.

இதன்மூலம் வன்முறைகள் மிகுந்த உக்ரேன் அரசிடம் இருந்து பெரியளவிலான ரஷ்ய மொழி பேசும் மக்களைத் தாம் பாதுகாத்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, உக்ரேன் அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு உதவ ரஷ்யா படையினரை அனுப்பிவருவதாக உக்ரேன் குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.(வ)

## 40 ஆண்டுக்கு முன் பிறப்பு அத்தாட்சியை தொலைத்த மூதாட்டிக்கு வயது 127

மெக்ஸிக்கோவைச் சேர்ந்த லெயான்ட்ரா பெசெர்ரா லும்ப்ரெராஸ் என்ற பெண்மணி நேற்று முன்தினம் தனது 127 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

அவரே உலகில் இதுவரை அறியப்பட்ட மிக நீண்ட ஆயுள் உடைய மனித இனத்தவர் என உறவினர்கள் மற்றும் நண்பர்களால் அறிவிக்கப் படுகின்ற போதும் அதற்கான ஆதாரத்தை அதாவது பிறப்புச் சான்றிதழை 40 வருடங்களுக்கு முன்னர் தொலைத்து விட்டார் என்பது சோகமான கதை!

இதனால் உலகில் அதிகூடிய வயது வாழ்ந்த மனித இனந்தவர் என்ற கின்னஸ் சாதனையை இவரால் பதிய முடியவில்லை. ஆனாலும்



இவரது நண் பர்கள் மற்றும் உறவினர் களின் தகவல்படி அதிக வயது வாழ்ந்த நபராகக் கருதப்படும் இந்தப் பெண்மணி தனது நீண்ட ஆயுளின் இரகசியமாகக் கூறுவது சொக்லட்டும் அதிகளவு நித்திரையும் என்கிறார்.

1887 ஒகஸ்ட் 31 இல் மேற்கு மெக்ஸிக்கன் நகரமான ஷபோபானில் பிறந்த இவர் இரு உலக மகாபோர்களின் போதும் உயிர் வாழ்ந்துள்ளார்.

அவருக்கு 73 பூட்டப் பிள்ளைகள் உள்ளனர் என்ப தும் தனிச் சிறப்பு ஆகும். முதலாவது உலகப்போர் ஆரம்பித்தபோது அவரது வயது 27. அமெரிக்க அதிபர் ஜோன் எஃப் கென்னடி கொல்லப் பட்ட போது அவரது வயது 75 என்பதுடன் பேர்லின் சுவர் இடிக்கப்பட்ட போது 100 வயதை நெருங்கி விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவரை விட வயதில் 12 வயது இளையவரான அதாவது 115 வயதுடைய ஜப்பானின் மிசாவோ ஒகாவா என்பவரே கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தின்படி இன்றைய காலத்தில் மிக அதிக வயதுடைய நபர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# நவாஸுக்கு கெடு விதித்த மதத் தலைவருக்கு பிடிவிறாந்து

இஸ்லாமபாத், செப்.2

பாகிஸ்தான் பிரதமர் பதவியில் இருந்து நவாஸ் ஷெரீப் விலக அந்தநாட்டு சூபி முஸ்லிம் மதத் தலைவர் தாஹிர் உல் காத்ரி 24 மணி நேர கெடு விதித்தார்.

இந்த நிலையில் பிணையில் வெளியே வர முடியாதவகையில் தீவிரவாத தடுப்பு நீதிமன்றத்தால் அவருக்கு எதிராகப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் நவாஸ் அரசுக்கு எதிராக பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சித் தலைவரும், முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவருமான இம்ரான் கான், சூபி மதத்தலைவரும், பாகிஸ்தான் அவாமி தெஹ்ரீக் கட்சித் தலைவருமான தாஹிர் உல் காத்ரி ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நவாஸ் தேர்தலில் முறைகேடு செய்து வெற்றி பெற்றுள்ளதால் அவர் பதவி விலக வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இரு கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்களும் பாகிஸ்தான் நாடாளுமன்றத்தை கடந்த 15 நாள்களாக முற்றுகையிட்டுள்ளனர். போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருவதால் நவாஸ் அரசுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. அரசுத் தரப்புக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற பல சுற்று பேச்சுகளும் தோல்வியடைந்தன. தேர்தல் சீர்திருத்தங்களை மேற்கொள்ள அரசுதரப்பு ஒப்புக் கொண்டது. ஆனால் நவாஸ் ஷெரீப் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.


இந்த விவகாரத்தில் சமரசத்தை ஏற்படுத்த இராணுவ தளபதி ரஹீல் ஷெரீப் தலையிட்டுள்ளதால் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

இந்தநிலையில் இம்ரான் கான் கட்சியின் துணைத் தலைவர் ஷா மெஹ்மூத் குரேஷி, காத்ரியை சந்தித்துப் பேசினார்.

அரசுக்கு எதிராக அடுத்த கட்டப் போராட்டத்தை எவ்விதம் எடுத்துச் செல்வது என்பது குறித்து இருவரும் விவாதித்தனர். அதன் பின்னர் நவாஸ் ஷெரீப் பதவி விலக 24 மணி நேரம் கெடு விதிப்பதாக் காத்ரி அறிவித்திருந்தார். (வ)

# ஈழத் தமிழரின் உரிமைக்காக செப்ரெம்பர் 9 இல் அறப்போர்

## வைகோ தலைமையில்



சென்னை, செப்.2
ஈழத் தமிழர்களின் உரிமையை நிலைநாட்ட வேண்டி சென்னையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் எதிர்வரும் 9 ஆம் திகதி அறப்போர் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த வெளியிடப்பட்ட அறிக்கையில்,

'இலங்கை இராணுவத்தை ஏவி லட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை ஈவு இரக்கமின்றி படுகொலை செய்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இனக்கொலைக் குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளி ஆவார்.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு போரின் இறுதிக் கட்டத்தில் எண்ணிலடங்காத தமிழர்கள் படுகொலை உள்ளிட்ட இலங்கை அரசின் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் குறித்து, சுதந்திரமான பன்னாட்டு நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று, இந்த ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, ஐ.நா.வின் மனித உரிமை ஆணையாளர் 3 பேர் கொண்ட விசாரணைக் குழுவை அறிவித்தபோதிலும், அந்த விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மாட்டோம் என்று ஆணவத்தோடு அறிவித்து, ஐ.நா. சபையின் மதிப்புக்கே பங்கம் விளைவித்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை ஐ.நா. சபையின் பொதுச்சபையில் எதிர்வரும் 25 ஆம் திகதி உரையாற்ற அழைப்பு விடுத்திருப்பது ஐ.நாவின் நம்பகத்தன்மையையே கேள்விக் குறியாக்கிவிட்டது. இதனால் அதற்குக் கண்டனம் தெரிவித்தும்- ராஜபக்ஷவுக்கு விடுத்த அழைப்பைத் திரும்பப் பெறக் கோரியும், ஐ.நா. அறிவித்த விசாரணைக் குழுவினரை இந்தியாவுக்கு வர அனுமதித்து, தொப்புள் கொடி உறவுகளான ஏழரைக்கோடி தமிழர்கள் வாழும் தமிழ் நாட்டில் இலங்கை அரசின் இனப்படுகொலையால் தமிழகத் துக்கு தஞ்சமென வந்த ஈழத் தமிழ் அகதிகள் விசாரணைக் குழுவிடம் அச்சமின்றி வாக்குமூலம் வழங்க உத்தரவாதம் தருகிற நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.

அதனைச் செயற்படுத்த தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்தும், இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஆக்கிரமித்துள்ள இலங்கை இராணுவமும், பொலிஸாரும் முற்றாக வெளியேற்றப்பட்டு, ஈழத் தமிழர் தாயகத்தில் திணிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை வெளியேற்றி, சிறை முகாம்களில் உள்ள ஈழத் தமிழர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்.

சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பு ஈழத் தமிழர்களின் பூர்வீக தாயகத்திலும், உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள புலம்பெயர் வாழ் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் ஐ.நாவின் மேற்பார்வையில் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், எதிர்வரும் 9 ஆம் திகதி பொதுச் செயலாளர் வைகோ தலைமையில் சென்னையில் கண்டன அறப்போர் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்றும்- உயர்நிலைக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது'- என்றுள்ளது. (வ)

## இராமேஸ்வரம் மீனவர்கள் மீண்டும் தொழிலுக்கு

இராமேஸ்வரம், செப்.2
இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 38 தினங்களுக்குப் பின்னர் நேற்று கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றுள்ளனர்.

3 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து 37 தினங்களாகத் தொடர் வேலை நிறுத்தம் செய்து வந்த இராமேஸ்வரம் மீனவர்கள், சனிக்கிழமை தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

அதனைத் தொடர்ந்து நேற்று முதல் கடலுக்குச் சென்றுள்ள மீனவர்கள், கடலோர காவற்படை தங்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும்என்றகோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இலங்கை அரசின் பிடியில் உள்ள இந்தியர்களின் 63 படகுகளை விடுவிக்க வேண்டும்உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மீனவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர். (வ)



## மறைந்த நடிகர் நாகேஸ்வர ராவுக்கு அமெரிக்காவில் தபால் தலை

டில்லி, செப்.2
மறைந்த நடிகர் நாகேஸ்வர ராவை கௌரவிக்கும் வகையில் அமெரிக்கா அஞ்சல்துறை எதிர்வரும் 20 ஆம் திகதி அவரது உருவப் படம் பொறித்த அஞ்சல் தலையை வெளியிடவுள்ளது.

இதுகுறித்து அவரது மகனும் நடிகருமான நாகர்ஜுனா வெளியிட்டுள்ள அறிக்கையில்- அமெரிக்காவின் அஞ்சல் துறைக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இது எனது தந்தைக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம் என்று தெரிவித்துள்ளார். பத்ம விபூஷண், தாதா சாகிப் பால்கே உட்பட பல்வேறு விருதுகளை அவர் பெற்றிருந்தார். (வ)



*ஐந்து நாள் பயணமாக ஜப்பான் சென்றுள்ள பிரதமர் மோடி,தமது பயணத்தின் இரண்டாவது நாளான நேற்றுமுன்தினம் அங்குள்ள பழைமையான புத்த கோவிலுக்குச் சென்று பார்வையிட்டார்.*

## சி.பி.ஐயிடம் விளக்கம் கோருகிறது நீதிமன்று

### நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு விவகாரத்தில்

டில்லி, செப்.2
ஹிண்டல்கோ நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில், விதி முறைகள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளனவா என்று விளக்கம் அளிக்கும்படி மத்திய புலனாய்வுத் துறைக்கு டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்மோகன் சிங் பிரதமராக பதவி வகித்த காலத்தில் நிலக்கரிச் சுரங்கங்கள் முறைகேடாக ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் இதனால் அரசுக்கு 1.83 லட்சம் கோடி இழப்பீடு ஏற்பட்டதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. அதையடுத்து உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில், நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு தொடர்பான வழக்கில் தொழிலதிபர் குமார் மங்கலம் பிர்லாவின் ஹிண்டல்கோ நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில், விதி முறைகள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளதா என்று விளக்கம் அளிக்குமாறு அளிக்கும்படி சி.பி.ஐ.,க்கு டில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னதாக கடந்த வாரம் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு தொடர்பாக அதிரடி உத்தரவு ஒன்றைப் பிறப்பித்த உச்ச நீதிமன்றம், கடந்த 1993 ஆம் ஆண்டில் இருந்து 2009 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்ட நிலக்கரி சுரங்கங்கள் அனைத்தும் சட்ட விரோதமானவை என்றும்- இதுவரை நிலக்கரி எடுக்காத சுரங்கங்களின் உரிமம் இரத்துச் செய்யப்படுவதாகவும் நிலக்கரி எடுக்கப்படும் சுரங்கங்கள் குறித்து செப்ரெம்பர் ஒன்றில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## கேரளாவில் இருந்து பிரான்ஸுக்கு மூளை மூலம் தகவல் பரிமாற்றம்

திருவனந்தபுரம், செப்.2
கேரளாவின் திருவனந்தபுரத்தில் இருந்து ஒரு மனிதன் தனது மூளையில் அனுப்பிய 'ஹாலோ' மற்றும் 'சியோ' என்ற இரண்டு வார்த்தைகளை பிரான்ஸின் ஸ்ட்ராஸ்பேர்க்கில் உள்ள மற்றொரு மனிதன் மூளை பெற்றுக் கொண்டுள்ளது. கைகள் இல்லை, பேச்சும் இல்லை, எந்த தட்டச்சும் இல்லை, எந்த முகபாவங்களும் இல்லாமல் அனுப்பிய இந்த தகவல் அறிவியலில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் இந்தக் கண்டுபிடிப்புகள் தொடர்பாக சோதனை மேற்கொள்ளப்பட்டு பார்சிலோனா பல்கலைக் கழகம், ஹார்வாட் மருத்துவ பாடசாலை ஆகியவை கடந்த வாரம் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. மூளை தூண்டுதல் உபகரணங்கள் மற்றும் ரோபோக்களை உருவாக்கும் மூன்று நிறுவனங்களின் ஆராய்ச்சி யாளர்கள் ஆய்வில் ஈடுபட்டனர். கேரளா நபரின் ஒரு மடிக்கணினியில் பொருத்தப்பட்ட ஒரு அமைப்பு மூளையில் சிறிய மின்சாரத்தை அளவிடும். அவ்வாறு செய்ய சிறிய மின் அமைப்பு மிகவும் இறுக்கமான தொப்பி அணிந்திருப்பது போல உச்சந்தலையின் மீது பொருத்தப்படுகிறது. இதன் மூலம் தகவல் பரிமாறப்படுகிறது. இவ்வாறு வடிவமைக்கப்பட்ட மூளை கணினி இடைமுகம் என்று அழைக்கப்படுகிறது. (வ)

## ராஜஸ்தானில் ஏ.ரி.எம்களில் குடி தண்ணீர்

ராஜஸ்தான், செப்.2
ராஜஸ்தானில் தண்ணீர் பஞ்சம் நிலவும் கிராமங்களில் குடி தண்ணீர் ஏ.ரி.எம். மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்களின் தாகம் தணிக்கப்பட்டுள்ளது.

குடி தண்ணீர் பஞ்சம் நிலவும் கிராமங்களில் ஜீவன் அம்ரித் என்ற திட்டத்தை ராஜஸ்தான் அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன்படி கவாஸ், குடா, ஜோகாசாகர், பைட்டு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் குடி தண்ணீர் வழங்கும் ஏ.ரி. எம்கள் திறக்கப்பட்டுள்ளன.

இந்த ஏ.ரி.எம். மையங்களில் 24 மணி நேரமும் குடி தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இதற்காகக் கிராம மக்களுக்கு ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அட்டையைப் பயன்படுத்தி லீற்றரொன்று ரூ.5 விலையில் 20 லீற்றர் குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்ளலாம்.

தற்போது 22 குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு ஏ.ரி.எம்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.



இந்தத் திட்டத்தின் மூலம் சுமார் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயன்பெற்று வருகின்றனர். (வ)

# 8 நாள்களான ஆண் சிசு ரூ.50,000க்கு விற்பனை

## 6 பேர் பொலிஸரால் கைது

கொழும்பு, செப்.2
8 நாள்களேயான ஆண் சிசுவை 50 ஆயிரம் ருபாவுக்கு விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று முகத்துவாரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு-15 முகத்துவாரம் (மோதறை) பிரதேசத்தில் வசிக்கும் பெண்ணொருவர், இராகமை வைத்தியசாலையில் கடந்த 24ஆம் திகதி ஆண் சிசுவொன்றை பிரசவித்துள்ளார். அதையடுத்து குறித்த சிசுவின் தாய் மற்றும் தந்தையின் சம்மதத்துடன் மோதரை பிரதேசத்தில் வசிக்கும் பெண்கள் இருவரின் ஊடாக உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தை சேர்ந்த இளம் தம்பதியினருக்கு ரூபா 50,000க்கு சிசுவை விற்பனை செய்துள்ளனர்.

முகத்துவாரம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் சிசுவின் தாய், தந்தை, சிசுவை விற்பதற்கு உதவிய பெண்கள் இருவர் மற்றும் குழந்தையை வாங்கிய இளம் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முகத்துவாரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 18ஆவது அரசமைப்பில் மாற்றம்

## உயர் நீதிமன்றத்தின் உதவியை நாடவுள்ளது அரசு

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 18ஆவது அரசமைப்புத் தொடர்பான ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக அரசு உயர் நீதிமன்றத்தின் உதவியை நாடவுள்ளது என்று அரசின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**தற்போதைய அரசமைப்பு விதிகளின் படி ஒருவர் உச்ச பட்சம் இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாம்.**

தற்போதைய அரசமைப்பு விதிகளின்படி ஒருவர் உச்ச பட்சம் இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாம். இந்த வரம்பை அதிகரிக்கும் நோக்கில் 18ஆவது அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே அரசு உயர் நீதிமன்றத்தின் உதவியை நாடவுள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அரசமைப்பு விதிகளின்படி ஜனாதிபதியின் முதலாவது பதவிக்காலம் தொடங்கிய நான்கு வருடங்களில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. எனினும், புதிய மாற்றத்தின்படி இரண்டாவது பதவிக் காலம் முடிடைந்ததும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதில் சட்டச் சிக்கல்கள் உள்ளன என்று சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளதையடுத்தே இது தொடர்பில் மேலதிக ஆலோசனையைப் பெற உயர் நீதிமன்றத்தின் உதவி நாடப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அரசின் சிரேஷ்ட அமைச்சரொருவர், "18ஆம் அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகவே உயர் நீதிமன்றத்தின் ஆலோசனை கோரப்பட்டுள்து. அவசியம் ஏற்பட்டால் இந்தத் திருத்தச் சட்டத்தில் மேலும் திருத்தத்தை மேற்கொள்ள பிரேரணையொன்று நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)



கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சீஷெல்ஸ் நாட்டைச் சேர்ந்த சிறுவன் ஜனாதிபதி பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவைச் சந்தித்தான். கடந்த மாதம் ஷீசெல்ஸ் சென்றிருந்த ஜனாதிபதி பாரியார் ஆரம்ப கட்ட நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்த சிறுவனை சந்தித்து நலன் விசாரித்தார். இலங்கையில் சிகிச்சையளிக்குமாறு அச்சிறுவனின் தந்தை விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்பட்டது.

# ஆபாச குறுந்தகவல்; ஒருவர் கைது

கொழும்பு, செப்.2
பெண்களின் கைத்தொலைபேசிகளுக்கு ஆபாச வார்த்தைகளிலான குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) அனுப்பிய சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்த சம்பவமொன்று மஹறவ பொலிஸ் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

ஆபாச குறுந்தகவல்களை அனுப்பித் தங்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதாக மஹாவ பொலிஸ் நிலையத்தில், சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள், முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பில் விசாரணை செய்த பொலிஸார், 30 வயதான சந்தேகநபரை, வதுரஸ்ஸ பிரதேசத்தில் வைத்து கைது செய்துள்ளனர். (ற)

# வெறுப்பின் காரணமாக வெளிநாடு செல்லவில்லை

## மங்கள சமரவீர கூறுகின்றார்

கொழும்பு, செப்.2
வெறுப்பு காரணமாகவோ, எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்காகவோ நான் வெளிநாடு செல்லவில்லை என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, சில மாதங்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்த பயணமாகவே வெளிநாடு பயணமாகியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் அதிகாலை அவசரமாக லண்டன் நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியை சஜித் பிரேமதாசவுக்கு வழங்க கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மங்கள இவ்வாறு வெளிநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"எனது வெளிநாட்டுப் பயணம் குறித்து கட்சித் தலைமையிடம் அனுமதி பெற்றுள்ளேன். எதிர்வரும் 8 ஆம் திகதி நாடு திரும்ப உள்ளேன். அதன் பின்னர் ஊவா மாகாண சபைத் தேர்தல் முடியும் வரை பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொள்ள உள்ளேன்" - என்று தெரிவித்துள்ளார். (ற)



# ஆறு வயதான மகளை அடித்துக் கொன்ற தாய்

கொழும்பு, செப்.2
ஆறு வயதான தமது மகளை கொலை செய்த தாய் ஒருவர் கொலன்னாவையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான பெண் தமது மகளின் கழுத்தை நெரித்து காலால் உதைத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த சிறுமி பொரளை சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

தாய் தமது தங்கையின் கழுத்தை நெரித்து தாக்கினார் என்று கொல்லப்பட்ட சிறுமியின் ஏழு வயது சகோதரன் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை நாகஹமுல்ல பகுதியைச் சேர்ந்த 29 வயதான பெண் ஒருவரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார். (ற)

# மூடப்படுகிறது யால சரணாலயம்

கொழும்பு, செப்.2
வறட்சி காரணமாக இன்று முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை யால சரணாலயம் தற்காலிகமாக மூடப்படவுள்ளது.

வறட்சியான காலநிலை தொடருமாயின் சரணாலயம் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# ஜெயக்குமாரி விடயத்தில் தலையிட வேண்டும் என மனித உரிமைகள் ஆணையகத்திடம் வேண்டுகோள்

## இலங்கை சமாதான மன்றம் விடுத்தது

கொழும்பு, செப்.2
பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் ஏதுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாலேந்திரன் ஜெயக்குமாரி மற்றும் இதுபோன்று தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனையவர்களின் விடயத்தில் உரிய கவனம் செலுத்தி ஆவன செய்யுமாறு இலங்கை சமாதான மன்றம் தேசிய மனித உரிமைகள் ஆணையகத்திடம் முறையிட்டுள்ளது.

இந்த வருடம் மார்ச் மாதம் மனித உரிமைகள் ஆர்வலர்கள் பலர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் பலர் உள்ளூர் மற்றும் சர்வதேச எதிர்ப்புக்கள் காரணமாக விடுதலை செய்யப்பட்டனர். ஆனால் இவர்களில் ஒருவரான பாலேந்திரன் ஜெயக்குமாரி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் காணாமற்போனவர்கள் தொடர்பான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்துள்ளார்.

அவர் கூட தமது நான்கு பிள்ளைகளில் மூன்று பேரை இழந்த நிலையில் காணப்படுகின்றார். இந்த மூன்று பேரில் இரண்டு பேர் போரின் போது இறந்துள்ளனர். இவரது 15 வயதான மகனைக் காணவில்லை.

தமது மகன் அரசின் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இவர் குற்றஞ்சாட்டி வந்துள்ளார்.

இவரது 13 வயதான மகள் தனது காணாமற்போன சகோதரனின் புகைப்படத்தை ஊடகங்களுக்குள் காட்டியதுடன் அவரது வருகையைத் துரிதப்படுத்துமாறும் கேட்டிருந்தார்.

இந்தநிலையில் ஜெயக்குமாரி கருத்து வேற்றுமையை உருவாக்கக் கூடியதொரு சூழ்நிலையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கை போரினால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாகக் குரல் கொடுப்பவர்களுக்கு நியாயமற்ற வகையில் தண்டனை வழங்கும் ஒரு நடவடிக்கை என்ற கேள்வியையும் எழுப்புவதாக இலங்கை சமாதான மன்றம் தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவரை எந்த வித குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யாது 18 மாதங்கள் தடுத்து வைத்திருக்க முடியும். தற்போது ஜெயக்குமாரியும் ஐந்து மாதங்களுக்கும் மேலாக காலியில் அமைந்துள்ள பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் தெரிவிக்கையில்; விசாரணைக்குத் தேவையான ஆயுதமேந்திய குற்றவாளிக்கு ஒருவருக்கு அடைக்கலம் வழங்கியதன் காரணமாகவே ஜெயக்குமாரி கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் அவரது இள வயதான மகளுக்கு அடைக்கலம் தருவதற்கு உறவினர் விரும்பாததால் அவரும் பாதுகாப்பின் பொருட்டுத் தடுத்து வைக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்த நிலையில் இலங்கை சமாதான மன்றம் தேசிய மனித உரிமைகள் ஆணையகத்தின் கவனத்துக்கு இதனைக் கொண்டு வந்துள்ளது.

இதேவேளை- சர்வதே காணாமற்போனோர் தினம் கடந்த 30 ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

இந்தத் தினத்தில் காணாமற்போனவர்களின் குடும்பங்கள், நண்பர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் வவுனியா நகரில் ஒன்று கூடித் தமது ஆதங்கங்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## நச்சின்னு கடி



கணவன்: (மனைவியிடம்) இன்றைக்கு நீ கறுப்பு நாய்க்கு சோறு வச்சனியா?
மனைவி: ஓம். ஏன் கேட்கிறீங்க?
கணவன்: அதுவா.. தெரு ஓரத்தில ஒரு கறுப்பு நாய் செத்துப்போய் கிடந்தது. அதனாலதான் கேட்டன்.



"என்ன நம்ம தலைவரைக் கைது செய்ய வேற்றுக் கிரகத்தில இருந்து பறக்கும் தட்டுல இங்க வந்திருக்காங்களா?"
"பின்ன என்ன? செவ்வாய்க் கிரகத்தில் போய் நில அபகரிப்பு செய்தா சும்மா விடுவாங்களா?"

நடிகர்: நான் நடித்த படம் நூறு நாள் ஓடும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கு.
ரசிகன்: நூறு நாள் என்ன, நூறு நாள். ஐநூறு நாளே ஓடும்.
நடிகர்: என்னாங்க காமெடி பண்றீங்க....
ரசிகன்: ங்கொய்யால.... முதல்ல யாரு காமெடி பண்ணினது...?

ஒருவன்: அந்த ரவுடியை இந்த இடத்தை விட்டு துரத்திறத்துக்கு ஒரு ஐடியா இருந்தா சொல்லுங்களேன் அண்ணாச்சி...
அண்ணாச்சி: அவன அரசியல்ல நிற்க வைத்து வாக்குப் போட்டு வெற்றி பெற வைச்சிடுங்க
ஒருவன்: அப்பிடி செஞ்சா...
அண்ணாச்சி: ஐந்து வருசத்துக்கு இந்தப் பக்கமே வரமாட்டான்...

ஆசிரியர்: படிக்கிற பிள்ளைகள் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் தூங்கினால் போதும்.
மாணவன்: அது எப்பிடி ஆசிரியர் முடியும். ஒரு நாளைக்கு ஏழு மணி நேரம் தான் பள்ளிக்கூடம் நடக்குது!!!

## இன்ப அதிர்ச்சி கொடுத்த திரிஷா



சமந்தா, தமன்னாவுடன் போட்டிக்குத் தயாராகியுள்ளார் திரிஷா. ஹிந்தி படத்தில் நீச்சல் உடை அணிந்து ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தார் தமன்னா.

அவரைத் தொடர்ந்து அஞ்சான் படத்தில் சமந்தா நீச்சல் உடையில் கலக்கினார். இதுவரை நீச்சல் உடையில் தோன்றாத திரிஷா முதன்முறையாக கன்னட படத்துக்காக நீச்சல் உடையில் நடித்து அதிர்ச்சி கொடுத்திருக்கிறார்.

இது தொடர்பில் திரிஷா கூறியதாவது:- குடும்பப்பாங்கான படங்களில்தான் நடித்து வருகிறேன். அஜித்துடன் மீண்டும் நடிப்பது சந்தோஷம். அதுபோல் ஜெயம் ரவியுடனும், உனக்கும் எனக்கும் படத்துக்குப் பிறகு பூலோகம் படத்தில் நடிக்கிறேன்.

கன்னட படத்தில் நடிக்க நிறைய வாய்ப்புகள் வந்தன. ஆனால் நேரப் பிரச்சினையால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. தெலுங்கில் வெளியாகி வெற்றி பெற்ற டூகுடு படம் கன்னடத்தில் பவர் என்ற பெயரில் ரீமேக் ஆகிறது. புனித் ராஜ்குமாருடன் ஜோடியாக நடிக்கிறேன். ஆக்ஷன் படங்களில் நடிப்பீர்களா? என்கிறார்கள். இதுவரை 20 சதவீத அளவுக்கே நான் மாறுபட்ட கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறேன். இன்னும் நிறைய வேடங்களில் நடிக்க வேண்டி உள்ளது. ஆக்ஷன் படங்கள் மட்டுமல்ல சரித்திர வேடங்கள் ஏற்று நடிக்கவும் ஆசை உள்ளது - என்றார்.


## ரிலாக்ஸா வாசியுங்க

மூன்று பேருக்கு 25 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் தம்மோடு வைத்துக் கொள்ள ஏதாவது கேட்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.
முதலாவது நபர் : எனக்கு 500 புத்தகங்கள் வேண்டும், என்றான்
இரண்டாவது நபர் : எனக்கு சிறையில் உடற்பயிற்சி செய்ய உபகரணங்கள் வேண்டும், என்றான்
மூன்றாவது நபர் : எனக்கு ஒரு லட்சம் சிகரெட்டுகள் வேண்டும், என்றான்
25 வருடம் கழித்து மூன்று பேரும் விடுதலை செய்யப்பட்டனர்
முதலாவது நபர் : நான் நிறைய விடயங்களைத் தெரிந்து கொண்டேன். ஒரு நூலகம் அமைப்பேன், என்றான்.
இரண்டாவது நபர் :நான் உடலை வலுவாக்கினேன். உடற்பயிற்சிகூடம் வைப்பேன், என்றான்
மூன்றாவது நபர் : நான் சிகரெட் பிடிப்பதை விட்டு விட்டேன், என்றான்.
எல்லோருக்கும் ஆச்சரியம். போகும் போது லட்சம் சிகரெட் கேட்டவன் எப்படி திருந்தினான் என்று.
அவன் சொன்னான், தீப்பெட்டி கேட்க மறந்துட்டேன்....

## இன்றைய பேஸ்புக் தத்துவம்



கடலில் பிடிக்கிற மீனையும், காதலிக்கிற பெண்ணையும் இறுக்கமாகப் பிடித்திருக்க வேண்டும். இல்லையென்றால் இரண்டும் நழுவி ஓடி விடும்......






## ஒரு நேரத்தில் ஒன்றுதான்

ஒரே நேரத்தில் இரண்டு மூன்று சின்னத்திரை தொடர்களில் நடிப்பது, தமிழ், மலையாளம், கன்னடம் என்று மாறி மாறி நடிப்பதுதான் இப்போது பாஷனாக உள்ளது. இதற்குக் காரணம் கொட்டும் பணம். ஆனால் சமீதா ஒரு நேரத்தில் ஒரு சின்னத்திரைத் தொடர்தான் என்பதில் உறுதியாக இருக்கிறார். தற்போது பிள்ளைநிலா தொடரில் நடிக்கும் அவர் வேறு சில தொடர் வாய்ப்புகள் வந்தும் தவிர்த்து விட்டார். காரணத்தை அவரே சொல்கிறார்,

"ஒரு தொடரில் சிறிய கதாபாத்திரத்தில் நடிப்பவர்கள் வேறு தொடரில் நடிக்கலாம். ஆனால் நாயகியாக நடிக்கும்போது ஒரு தொடரில் நடித்தால்தான் அதில் கவனம் செலுத்த முடியும். இன்னொரு தொடரில் நடிக்கும்போது உடையில் தொடங்கி கதாபாத்திரத்தை உள்வாங்குதல், வசன உச்சரிப்பு, அத்தனையிலும் வித்தியாசப்படுத்தி காட்ட வேண்டும்.



ஒரு கதாபாத்திரத்தில் இருந்து வெளியே வந்து அடுத்த கதாபாத்திரத்துக்குள் நுழைய வேண்டும். இது சில நாள் படப்பிடிப்பு நடக்கும் சினிமாவில் வேண்டுமானால் சாத்தியமாக இருக்கலாம். சின்னத்திரையில் முடியாது. எனவே தான் ஒரே நேரத்தில் ஒரு தொடர் என்பதில் தெளிவாக இருக்கிறேன். பிள்ளைநிலா முடிந்த பிறகு அடுத்த தொடரில் நடிப்பேன். அதுவரைக்கும் பிள்ளை நிலாவில்தான் கவனம் செலுத்துவேன்" என்கிறார் சமீதா.




எஸ்.ரி.சி. நிறுவனத்தின் சுப்பர் மாக்கெற் ஒன்று சாவகச்சேரியில் திறந்து வைக்கப்பட்டது. சாவகச்சேரி நகர சபைத் தலைவர் தேவசகாயம்பிள்ளை, வர்த்தகர் சங்கத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் இணைந்து இதனைத் திறந்து வைத்தனர். (கு-9)



# வெளிநாட்டில் கல்வியை தொடர்வதற்கு புலம்பெயர்ந்தோரின் உதவி நாடும் நிலை

யாழ்ப்பாணம்.செப்.2

வெளிநாட்டில் கல்வியைத் தொடர விரும்புவர்கள் புலம்பெயர் உறவுகளின் உதவியையோ அல்லது அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவிகளிலேயோ தங்கி இருக்க வேண்டியுள்ளது.

இதனால் வெளிநாட்டுக் கல்வியில் ஆர்வம் உடையவர்களும் தமது விருப்பத்தைக் கைவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று திசைகாட்டி பிறைவேற் லிமிட் விசா ஆலோசனை நிறுவனத்தின் சர்வதேச தொடர்பாளர் எஸ். சுபசீலன் தெரிவித்தார்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட் விஸா ஆலோசனை நிறுவனத்தால் வெளிநாட்டுக் கல்விக்கான நிதியூட்டம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளித்த அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

திசைகாட்டி நிறுவனம் தனது வியாபாரத்தைப் பெருக்கும் நோக்கத்துக்கு அப்பால் சமூக சேவைகளையும் வழங்கி வருகிறது.

அந்த வகையில் எம்மிடம் விஸா ஆலோசனையை பெற வந்தவர்கள் பலருக்கு நிதி உதவியில்லாது அல்லல்பட்டதை அவதானிக்க முடிந்தது. காணிகளையோ அல்லது சொத்துக்களையோ ஈடுவைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அரச, தனியார் வங்கி நிறுவனங்கள் வெளிநாட்டுக் கல்விக்கு உதவி வழங்குவதாக விளம்பரப்படுத்தல் செய்தாலும் அதனால் ஒருவர் கூட பயன்பெற்றதாக இல்லை.

சாதா ரண ஒரு மாணவனுக்கு நிறுவனங்கள் உதவி வழங்கியதாக வும் இல்லை.

நிதி மூலங்களை இலகுபடுத்துவதற்கு ஏதுவாக நிதி நிறுவனங்களுடன் நியாயபூர்வமான திட்டதை ஏற்படுத்தி இந்தக் கடன் திட்டத்தை வழங்க முன்வந்துள்ளோம்.

விஸா ஆலோசனை நிறுவனத்துக்கும் வெளிநாட்டுக்கல்வியை எதிர்பார்க்கும் மாணவனுக்கும் இது வரப்பிரசாதமாக அமையவுள்ளது.

வங்கிகள் மீளச் செலுத்தவதுக்கான நிபந்தனைகளைக் கேட்ட பின்னர் தான் கடன்களை வழங்குகின்றன.

எமது நிறுவனத்தால் 13 வீத வருடாந்த வட்டியுடன் 75 வீதமான பணத்தை நேரடியாகத் தொடர்புடைய கல்லூரிக்கோ, பல்கலைக்கழகத்துக்கோ வழங்கும் வகையில் வங்கியின் உறுதிப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிதி நிறுவனம் தொடர்புள்ளதால் வழங்கப்படும் ஆதனங்களுக்கு 50 வீதமான கடனை வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கு 10 வருடம் மீளச் செலுத்தும் காலமும் முதல் 2 வருடத்துக்கு வட்டியில்லாத கடனை மீளச் செலுத்த வேண்டிய கட்டணம் மட்டும் அறவிடுவதற்கான நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 20 நாளுக்குள் கடனுதவியைப் பெறக்கூடியதாக இருக்கும். சாதாரண கடனுதவியைப் பெறுவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் போதுமானதாகும்.

முதல் தடவையாக விஸா ஆலோசனை பெறுபவர்களுக்கு மட்டும் தான் இந்த கடனுதவி வழங்கப்படும். இனிவரும் காலங்களில் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பிப்பவர் பெயரில் ஆதனம் இருக்க வேண்டிய தேவையும் இல்லை

நிதி நிறுவனங்களில் குறிப்பிட்ட காலம் கடனுதவி பெறுவதற்கு தேவைப்படும். ஆனால் சுலபமாக குறைந்த காலத்தில் இந்த கடன் உதவி வழங்கப்படுகிறது.

தனியார் நிறுவனங்கள் வங்கிகளுடன் தொடர்புபடுத்தி இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதால் நம்பிக்கையும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் பன்முகப்படுத்தப்பட்ட சேவைகளும் வழங்கப்படும்-என்றார்.

நிகழ்வில் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி வி.இந்துஜாவும் கலந்து கொண்டார். (கு-14)

# சி.டி.பி. நிறுவனத்துக்கு பிளாட்டினம் விருது

சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி. (CDB) நிறுவனமானது, உலகின் மிகப்பெரிய வருடாந்த அறிக்கை போட்டியாக திகழும் லீக் ஒவ் அமெரிக்கன் கொம்யுனிகேசன் புறொபசனல் விருதுகள் வழங்கும் நிகழ்வில் பிளாட்டினம் விருதை வென்றுள்ளது.

சி.டி.பி. நிறுவனமானது பன்முக நிதிச்சேவைகள் பிரிவில், சீரான உயர் திறமையை உறுதி செய்து சுமார் 24 நாடுகள் மற்றும் 1000 நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த விருதை தனதாக்கிக் கொண்டுள்ளது.

இந்த நிறுவனமானது முழு ஆசிய பசுபிக் பிராந்தியத்திலும் மிகச்சிறந்த உள்ளக ஆண்டறிக்கையை தயாரித்தமைக்காக பாராட்டிக் கௌரவிக்கப்பட்டது. மேலும் உலகளவில் சிறந்த 100 ஆண்டறிக்கைகளுள் 42 ஆவது இடத்தையும், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் சிறந்த 80 ஆண்டறிக்கைகளுள் 17ஆவது இடத்தினையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய புறூனி/ பொது முகாமையாளர் அசித்த தசநாயக்க, 'எமது ஆண்டறிக்கையானது வெற்றிக்கான எமது நோக்கத்தை கோடிட்டுக்காட்டுகின்றது. உலகளாவிய மட்டத்தில் இத்தகைய அங்கீகாரத்தை பெற்றமையானது நோக்கம் மீதான எமது உறுதியை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது. விஸன் விருது விழா 2012 இல் வெள்ளி விருது உள்ளடங்கலாக, இதற்கு முந்தைய நிகழ்வுகளில் நாம் பல்வேறு விருதுகள் மற்றும் கௌரவிப்புகளை பெற்றுள்ளோம். அர்ப்பணிப்பு மற்றும் உறுதியைப் புதுப்பித்துத் தொடர்ந்து பேணவுள்ளோம்' என்றார்.

பிளாட்டினம் விருதை வென்றமையானது சி.டி.பி. ஆண்டறிக்கையின் வெளிப்படைத்தன்மை மற்றும் உயர்தரம் ஆகியவற்றுக்குச் சான்று பகர்வதாக அமைந்துள்ளது என மேலும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் பட்டியலிடப்பட்ட மிகச்சிறந்த வங்கியல்லாத நிதிசார் நிறுவனங்களில், சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனமும் ஒன்றாகும். நாடு முழுவதும் 59 கிளைகளுடன் விரிவான வலையமைப்பை கொண்டுள்ள சி.டி.பி. ஆனது, நிறுவனத்தை முன்னோக்கி கொண்டு செல்லக் கூடிய மூலோபாயங்கள் மற்றும் சரியான முறைமைகளை முன்னெடுத்து வருகின்றது. (கு)




# கிளிநொச்சி நகரப் பகுதியில் ஹற்றன் நஷனலின் ஏ.ரி.எம்.

கிளிநொச்சி மாவட்ட மக்களின் நன்மை கருதி நேற்று முதல் ஹற்றன் நஷனல் வங்கியானது இலத்திரனியல் பண பரிமாற்று இயந்திரச் செயற்பாட்டை (ஏ.ரி.எம்) கிளிநொச்சி நகரப் பகுதியில் ஆரம்பித்துள்ளது.

பரந்த நிலப் பரப்பைக் கொண்ட மக்கள் வாழும் இந்தப் பகுதியில் இந்த இலத்திரனியல் பணப் பரிமாற்ற இயந்திரம் பொருத்தப்பட்டுச் செயற்படும் பணியானது பொதுமக்களுக்கு அதிக நன்மை அளிக்கக் கூடியதாக அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாளாந்தம் பொது மக்கள் ஏ-9 வீதியில் அதிகம் வந்து செல்லும் இடமான கிளிநொச்சி வைத்தியசாலை முன்றல் மற்றும் ஆடைத் தொழிற்சாலை உட்பட பல்கலைக்கழகத்தின் விவசாய பொறியியல் பீடங்களையும் உள்ளடக்கிய அறிவியல் நகர் பகுதியிலும் இவை செயற்படவுள்ளன.

இந்த இரண்டு இலத்திரனியல் பணக் கொடுப்பனவு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு நேற்றுத் திங்கட்கிழமை முதல் இயங்குவதாக கிளிநொச்சி பிரதேச ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர் தெரிவித்தார். (கு-86)

# 22 ஆயிரம் தென்னை நாற்றுகள் கிராஞ்சி பண்ணையில் உற்பத்தி

## விவசாயத் திணைக்களம் நடவடிக்கை

கிளிநொச்சி, செப்.2
போரில் அழிவடைந்த பிரதேசங்களில் மீண்டும் தென்னை உற்பத்தியை மேற்கொள்வதற்கு ஏதுவாக தரமான நடுகைக்கு தயாரான 22 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் கிராஞ்சிப் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிளிநொச்சி மாவட்டத்தில் கிராஞ்சி பிரதேசத்தில் 7 ஏக்கர் நிலப் பரப்பில் என்றிப் திட்டத்தின் நிதி உதவியுடன் காணி நிர்வாகத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பண்ணை கடந்த வருடம் விவசாயத் திணைக்களத் திடம் கையளிக்கப்பட்டது.
இந்தப் பண்ணையில் தென்னை நாற்றுக்களும், பழமரக் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.
போரினால் அழிவடைந்த பிரதேசங்களில் தென்னை மீள்நடுகை செய்வதற்கும், புதிய நிலங்களில் தென்னை நாற்றுக்களை நடுகை செய்வதற்கும், மிகவும் உற்பத்தி குறைந்த தென்னை மரங்களின் மீள்நடுகைக்கும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் வீட்டுத்தோட்ட செய்கைக்கும் ஏற்றதாக இந்தப் பண்ணையில் நாற்றுக்கள் உற்பத்தி செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
தற்போது பண்ணையில் 22 ஆயிரம் தென்னை நாற்றுக்கள் நடுகை நிலைக்கு தயாரான பருவத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.
தெரிவு செய்யப்பட்ட தாய்த் தாவரங்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட இந்த நாற்றுக்களை அந்தந்த விவசாயப் பயிற்சி நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
அடுத்துவரும்பெரும்மழைக்கு முன்னதாகத் தென்னை நாற்றுக்களை நடுகை செய்வதன் ஊடாக நடுகை செய்யப்படும் தென்னங்கன்றுகள் வேர்விட்டு தமது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.
எதிர்காலத்தில் கிடைக்கும் மழை வீழ்ச்சி தென்னங்கன்றுகளுக்கு வீரியமான வளர்ச்சியை தரும் என்பது விவசாயிகளின் கருத்தாகவும் அமைவதால் அழிவடைந்த பிரதேசங்களில் தென்னை நாற்றுக்களை நடுகை செய்து மீண்டும் தென்னைச் செய்கையூடான வருமானத்தைப் பொதுமக்கள் குறுகிய காலத்தில் பெறக்கூடியதாக இருக்கும்.
பண்ணையாளர்களும், பொதுமக்களும் தேவைக்கேற்ப விவசாயத் திணைக்களத்திடம் தொடர்பு கொண்டோ அல்லது நேரடியாகப் பண்ணைக்குச் சென்றோ நாற்றுக்களைப்பெற்றுக் கொள்ள முடியும்- என்றார். (த-14)

# மீனவருக்கு ஓய்வு மண்டபம் அமைக்கக் காணி வேண்டும்

## அரச அதிபரிடம் கோரிக்கை

கிளிநொச்சி, செப்.2
கிளிநொச்சி வன்னேரிக்குளத்தில் மீனவருக்கு ஓய்வு மண்டபம் அமைப்பதற்கான காணி வழங்கும்படி கிளிநொச்சி அரச அதிபரிடம் வன்னேரிக்குளம் நன்னீர் மீன்பிடியாளர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மாவட்டக் கடற்றொழில் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
வன்னேரிக்குளத்தில் மீன்பிடியில் ஈடுபடும் மீன்பிடிப் போர் ஓய்வு மண்டபம் அமைப்பதற்குரிய நிலையில் இருந்த போதும் காணியில்லாதமை காரணமாக ஓய்வு மண்டபம் அமைக்கமுடியாத நிலையிலுள்ளதாகக் கூட்டத்தில் தெரிவித்தனர்.
இதன்போது கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி அரச அதிபர், கரைச்சி பிரதேச செயலரிடம் மீன்பிடி ஓய்வு மண்டபம் அமைப்பதற்கான காணியினை இனங்காட்டும்படி தெரிவித்தார்.
வன்னேரிக்குளத்தில் நெற்செய்கையுடன் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக குளத்தில் நடைபெறும் நன்னீர் மீன்பிடி முக்கியத்துவம் பெறுகின்றது. இதே வேளை வன்னேரிக்குளக் கிராமத்தின் முக்கிய குளமான திக்காய் குளம் முற்றாக நீர் வற்றியதன் காரணமாக நன்னீர் மீன்கள் முற்றாக அழிந்து விட்டதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (த-18)



கேரதீவு-சங்குப்பிட்டிப் பாலம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டபோதும் சங்குப்பிட்டியிலிருந்து பூநகரி நோக்கிச் செல்லும் கடல் நீரேரியூடான வீதி தற்பொழுது தான் கனரக வாகனங்களின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது.
இந்தவீதி முழுமையாகப் புனரமைப்பு செய்யப்பட்ட பின்னர் கேரதீவு ஊடாக மன்னாருக்கான போக்குவரத்தையும் கேரதீவு-பரந்தன் ஊடான ஏனைய இடங்களுக்குமான போக்குவரத்தையும் விரைவாகவும் குறைந்த நேரத்திலும் மேற்கொள்ள வாய்ப்புக் கிட்டும். (த-102)

# சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இடமாற்றம்

வவுனியா, செப்.2
வவுனியா நகர் பகுதியில் பல ஆண்டுகளாக இயங்கி வந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையம் கடந்த 29 ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மேற்படி நிர்வாகம் தெரிவித்துள்ளது.
கடந்த 10வருடங்களாக வவுனியா நகர் பகுதியில் வவுனியா நகர சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த இந்த பாதுகாப்பு நிலையத்தில் பஸ் நிலையத்துக்குச் செல்லும் மக்கள் தமது வாகனங்களைப் பாதுகாப்பாக விட்டுச் செல்வதற்கு வசதியாக இருந்தது.
எனினும் இந்தப் பாதுகாப்பு நிலையம் கடந்த 29 ஆம் திகதி மூடப்பட்டு வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி முன்பாக இடமாற்றப்பட்டுள்ளதால் பயணிகள் சிரமப்படுகின்றனர். (த-421)

# வலைஞர்மடம், மாத்தளன் பகுதிகளுக்கு பஸ் இல்லை

முல்லைத்தீவு, செப்.2
முல்லைத்தீவின் மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களது வசதிக்காக பஸ் சேவைகளை நடத்தும்படி மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
700 வரையான குடும்பங்கள் மீளக்குடிய்மர்ந்துள்ள இந்தக் கிராமங்களில் முற் பகலில் முல்லைத்தீவிலிருந்து- வவுனியா செல்லும் பஸ் மட்டும் மாத்தளன் வரை பயணிப்பதாகவும், ஏனைய நேரங்களில் புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு நகரங்களுக்குச் செல்வதில் மக்கள் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது.
குறிப்பாக் 25 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள முல்லைத்தீவு பொது மருத்துவமனை, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றுக்குச் செல்வதிலும் மேற்படி கிராம மக்கள் இடர்களை எ்திர் கொண்டுள்ளனர்.
1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தக் கிராமங்களுக்கு தினமும் 6 தடவைகள் பஸ் சேவை இடம் பெற்றதாகவும், தற்போது அத்தகைய சேவைகள் இடம்பெறுவதில்லையெனவும் மக்கள் தெரிவிப்பதுடன் இரட்டைவாய்க்கால் தொடக்கம் மாத்தளன் வரையான 13 கிலோமீற்றர் வீதியைப் புனரமைக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-18)

# வீதியைப் புனரமைக்க கோரிக்கை

கிளிநொச்சி, செப்.2
கிளிநொச்சி பூநகரியின் பல்லவராயன்கட்டு கிராம வீதியை புனரமைக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
பல்லவராயன்கட்டுச் சந்தியிலிருந்து ஜெயபுரம் நோக்கி நகர்ந்து, பல்லவராயன்கட்டு கிராமம் வழியாக பன்றி வெட்டிக்குளத்தை சென்றடையும் 4 கிலோமீற்றர் வீதியை புனரமைத்துத் தாருங்கள் என இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
150 குடும்பங்கள் வாழும் இந்தக் கிராமத்தில் சோலை, விநாயகர் குடியிருப்பு, மாதிரிக் கிராமம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தும் முக்கிய வீதியாக இந்தவீதி காணப்படுகின்றது. (த-18)



# மன்னார் கூட்டுறவுப் பிரதிநிதிகளுடன் மாகாண அதிகாரிகள் விசேட சந்திப்பு

வடமாகாண கூட்டுறவு அமைச்சின் பிரதிநிதிகளுக்கும், மன்னார் மாவட்ட மீன்பிடி, கால்நடை, பனை, தென்னை கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் அதன் தலைவர் என்.எம்.ஆலம் தலைமையில் இடம் பெற்றது.
இதில் வடமாகாண சபை உறுப்பினரும், வடமாகாண கூட்டுறவு அமைச்சின் விசேட பிரதிநிதியுமான சட்டத்தரணி எஸ்.சயந்தன், வடமாகாண கூட்டுறவுத் திணைக்கள பிரதம அலுவலகர் உதயன், மன்னார் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் மங்களதாசன் மற்றும் மாவட்டத்தின் மீனவ சங்கம், கால்நடை வளர்ப்போர் சங்கம், பனை தென்னை உற்பத்தியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.
தற்போது மன்னார் மாவட்டத்தில் கூட்டுறவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்கள் தொடர்ச்சியாக எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும் வடமாகாண கூட்டுறவு அமைச்சின் பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது. (த-56)

## கடும் காற்றினால் மீன்பிடி பாதிப்பு



யாழ்ப்பாணம், செப்.2

தற்போது வீசும் கடுமையான காற்றினால் யாழ். குடாநாட்டு மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒருவார காலமாக காற்றின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு வீசிய கடுமையான காற்றினால் கரையோரப் பகுதி மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை.

இதனை அடுத்து யாழ். நகரை அண்டிய மீன் சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

இதனைவிட பாசையூர், குருநகர் இறங்குதுறைகளில் இருந்து குறைந்த அளவான படகுகளே மீன் பிடிப்பதற்குக் கடலுக்கு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## பணியாளர்களின் ஊக்குவிப்பு கொடுப்பனவை உடன் வழங்குக

### சங்கங்களுக்கு ஆணையாளர் பணிப்பு

யாழ்ப்பாணம், செப்.2

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளை நிலையங்களில் மாதாந்தம் நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்குக் கூடுதலான தொகைக்கு பொருள்களை விற்பனை செய்து இலாபம் ஈட்டிக் கொடுக்கும் பணியாளர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு உரிய முறையில் வழங்கப்பட வேண்டும் என்று கூட்டுறவுஅபிவிருத்தி உதவிஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனேகமான கூட்டுறவுச் சங்கங்கள் பணியாளர்களுக்கான இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்காது தவிர்த்து வருகின்றன.

கிளை விற்பனை நிலையங்களில் மாதாந்தம் கூடுதலான ரொக்க வியாபாரம் மேற்கொள்வதன் மூலம் சங்கத்துக்கு இலாபம் ஈட்டிக் கொடுக்கும் பணியாளர்களுக்கு இந்தக் கொடுப்பனவு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதன் மூலம் கிளை நிலையங்களின் விற்பனை நடவடிக்கையை மேலும் அதிகரிக்க முடியும். சில சங்கங்கள் இந்தக் கொடுப்பனவை வழங்காதமை குறித்து எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன- என்றார். (த-17)

## நெடுந்தீவில் 503 குதிரைகள்

யாழ்ப்பாணம், செப்.2

நெடுந்தீவுப் பகுதியில் சுமார் 503 குதிரைகள் உள்ளன என்று வன விலங்குகள் ஜீவராசிகள் திணைக்களம் எடுத்த கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது.

கடந்த மாத நடுப்பகுதியில் மூன்று தினங்கள் வரை நெடுந்தீவில் தங்கியிருந்த வனவிலங்குகள் ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், நெடுந்தீவுக் குதிரைகள் தொடர்பான கணக்கெடுப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

கணக்கெடுப்பை அடுத்து நெடுந்தீவில் 503 குதிரைகள் உள்ளன என்று வன விலங்குகள் ஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.ரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

குதிரைகள் தாகம் தீர்க்க வசதியாக காட்டுப் பகுதிகளில் தண்ணீர்த் தொட்டிகளை அமைக்க நீர் வடிகாலமைப்புச் சபை முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-7)



## நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் செப்ரெம்பர் 10 முதல் 16 வரை

யாழ்ப்பாணம், செப்.2

எதிர் வரும் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தை நுளம்புக் கட்டுப்பாட்டு வார அனுஷ்டிக்குமாறு சுகாதார அமைச்சினால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தினர் தமது பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலகம், உள்ளூராட்சி சபைகள், பொலிஸார் மற்றும் படையினர் ஆகியோருடன் இணைந்து நுளம்புக் கட்டுப்பாட்டு வார செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

## மீளக்குடியமர்ந்து 3 வருடம் கடந்தும் வீடுகளின்றி கரையோரக் குடும்பங்கள்

### சேந்தாங்குளத்திலேயே இந்த நிலை

யாழ்ப்பாணம்.செப்.2

சொந்த இட த்தில் மீள்குடியேறி 3 வருடங் ள் கடந்த நிலையிலும் நிரந்தர வீடுகளோ, தற்காலிக வீடுகளோ இதுவரை வழங்கப்ப ாது 19 குடும்பங்கள் கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் காற்றுடனும் மழையுடனும் போராடுவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

சேந்தாங்குளம் ஜே/222 கிராமசேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மீளக்குடியமர்த்தப்பட் 19 குடும்பங்களுமே இவ்வாறான பாதிப்பை எதிர்கொண்டுள்ளன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தில் ஒருவரான சின்னராசா தெரிவிக்கும்போது:-

சுனாமி பாதிப்பை எதிர்கொண்ட பின்னர் இடம் பெயர்ந்து பருத்தித்துறைப் பகுதியில் வசித்தபோது தற்காலிக வீடு பருத்தித்துறைப் பகுதியில் எங்களுக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மீண்டும் சொந்த இடத்தில் எம்மை குடியமர்த்தினார்கள். பருத்தித்துறையில் வழங்கப்பட்ட தற்காலிக வீட்டை உறவினர்களுக்கும், தெரிந்தவர்களுக்கும் வழங்கிவிட்டுத்தான் இங்கு வந்தோம்.

எங்களை மீளக்குடியமர்த்தி 3 வருடங்கள் கடந்த நிலையில் தற்காலிக வீடுகளையோ அல்லது நிரந்தர வீடுகளையோ வழங்குமாறு கோரிக்கைகள் விடுத்தபோதும் இதுவரை எந்தவித உதவிகளும் கிடைக்கவில்லை.

கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் காற்றுக்கும் மழைக்கும் மத்தியில் தறப்பாழ் கொட்டகையிலும், தகரக் கொட்டிலும் வசித்து வருகிறோம். ஒவ்வொரு குடும்பத்தினரும் 5, 6 பிள்ளைகளுடன் பெரும் சிரமப்படுகின்றனர்.

எங்கள் கோரிக்கையை பிரதேச செயலருக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கவில்லை.

இந்த நிலையில் எங்களுக்கு வீடு அமைத்து தரக்கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்குப் பாதிக்கப்பட்ட நாம் தீர்மானித்துள்ளோம்- என்றார். (த-14)

## பெண்ணுக்கு எரிகாயம்

தென்மராட்சி, செப்.2

காலையில் அடுப்புப் பற்ற வைக்க விறகுகளுக்கு மேல் மண்ணெண்ணெயை ஊற்றிய பெண் மீது தீ பற்றிக் கொண்டதால் அவர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை தனங்களப்பில் இடம்பெற்றது.

வேலைக்குச் செல்வதற்காக குறிப்பிட்ட பெண் அதிகாலையில் தேநீர் தயாரிப்பதற்கு அடுப்பைப் பற்ற வைத்த வேளையில் திடீரென அவரது உடையில் தீப்பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் அதே இடத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ஜெயசித்திரா (வயது-33) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். (த-9)

## வாகனங்களின் பாதுகாப்புக்கு அதிக கட்டணங்கள் அறவீடு

### செல்வச் சந்நிதி ஆலயத்தில்

கரணவாய், செப்.2

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் அதிகூடிய கட்டணம் அறவிடப்படுவது தொடர்பாக ஆலயத்துக்கு செல்லும் பக்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயச் சூழலின் பல்வேறு பகுதிகளிலும் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வல்வெட்டித்துறை நகர சபையின் அனுமதியுடன் நடத்தப்படும் இந்தச் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் சைக்கிளொன்றுக்கான பாதுகாப்புக் கட்டணமாக 5 ரூபாவும், மோட்டார் சைக்கிளொன்றுக்கான பாதுகாப்புக் கட்டணம [illegible] 20 ரூபாவும், ஓட்டோ ஒ[illegible]றுக்கான பாதுகாப்புக் க[illegible]டணமாக 30 ரூபாவும் [illegible]னைய வாகனங்களுக்கு 4[illegible] ரூபாவும் அறவிடப்படுகி[illegible]றன.

இதனால் [illegible]ரமும் வாகனங்களில் ஆ[illegible]யத்துக்கு வரும் பக்தர்கள் [illegible]நம் சிரமங்களை எதிர்நோக்[illegible] வருகின்றனர்.

இது தொ[illegible]பாக வல்வெட்டித்துறை ந[illegible]ர சபை செயலாளரிடம் தொ[illegible]டர்பு கொண்டு கேட்டபோ[illegible]

இந்தப் பகு[illegible]யில் நகர சபையின் அனு[illegible]தியுடன் அமைக்கப்பட்ட [illegible]க்கிள் பாதுகாப்பு நிலையங்[illegible]ளுக்கான கட்டணங்கள் [illegible]மால் தீர்மானிக்கப்பட்டதற்[illegible] அமைவாகவே அறவிடப்[illegible]கின்றன எனத் தெரிவித்தா[illegible] (த-108)



வாழ்வின் எழுச்சி வாழ்வாதார மற்றும் கடனுதவித்திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கிக் கிளையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உத்தியோக பூர்வமாக 44 பயனாளிகளுக்கு இந்த கடன் தொகை வழங்கப்பட்டது.

வடமாகாண வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் மகேஸ்வரன், பயனாளி ஒருவருக்குப் பணத்தொகையை வழங்குகிறார். அருகில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம்,வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி ஆகியோர் உள்ளனர்.(த-21)

## உறுப்பினரின் உ[illegible]டைமைகளுக்குத் தீ; சபைக் கூட்டத்தில் கடும் கண்டனம்

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரின் வீட்டு அறையை உடைத்து அங்கிருந்த உடைமைகளை இனந்தெரியாதோர் சேதமாக்கி முக்கியமான ஆவணங்களை அறையினுள் வைத்து தீ மூட்டி எரித்தமை தொடர்பாக பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை வீட்டில் இல்லாத வே[illegible]ளையில் அவரது வீட்டுக்குள் [illegible]துமீறி நுழைந்த இனந்தெரி[illegible]ாதோர் வீட்டின் கதவுப் பூட்[illegible] உடைத்து அங்கிருந்த ஆவ[illegible]ணங்களைச் சேதப்படுத்தியதுட[illegible] தீயிட்டு எரித்த சம்பவமான[illegible]. ஜனநாயக நாட்டில் பிரதேச [illegible]பை உறுப்பினர்களுக்குப் பா[illegible]துகாப்பு இல்லாத நிலையைக் காட்டுகிறது.

இது கண்டி[illegible]கப்பட வேண்டுமெனச் சபையின் துணைத் தலைவர் க.யோகராசா வினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை உறுப்பினர் ச.தங்கராசா வழி மொழிந்ததையடுத்து தீர்மானமாக நிறைவேறப் பட்டதாக தலைவர் சி.துரைராஜா தெரிவித்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:-

குறித்த பிரதேச சபை உறுப்பினர் கடந்த 2011 ஆம் ஆண்டு எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரிவில் மக்களை மீளக்குடியமர்த்திய வேளையில் அங்கு உருவாக்கப்பட்ட பொது அமைப்புக்களின் செயலாளராக நியமிக்கப்பட்டு 2014 வரை பணியாற்றியிருந்தார். அமைப்பின் செயலாளர், பொருளாளர் ஆகியோரின் பதிவேடுகள் சிலரிடமே இருந்துள்ளன.

அரசியல்வாதியொருவர், பொது அமைப்புக்களின் பதவிகளில் இருக்க முடியாது என்பதால் கடந்த மே மாதம் இடம் பெற்ற அந்தப் பகுதி விவசாய சம்மேளனத்துக்கு வேறொரு செயலாளர் நியமிக்கப்பட்டார்.

புதிய நிர்வாகத்திடம் அவற்றுக்கான பதிவேடுகளை வழங்கப் பின்னடித்த உறுப்பினர் குறித்த காலப்பகுதியில் அந்த அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் கணக்குகள் பற்றிய விவரங்கள் வெளியாகக்கூடுமென்ற அச்சத்தில் தானே அறையினுள் அந்த ஆவணங்களை எரித்துவிட்டாராம். இவரது வீட்டு அறை உடைக்கப்பட்டு ஆவணங்கள் சேதமாக்கப்பட்டு எரியூட்டப்பட்ட சம்பவம் பற்றிய தகவல் பத்திரிகையில் செய்தியாக வெளிவந்த பின்னரே தமக்குத் தெரிய வந்ததாக இவரது வீட்டுக்கு அருகில் உள்ள பலர் தெரிவித்தனர். தானே திட்டமிட்டு இவற்றைச் செய்து விட்டு (அமைப்பில் செய்த மோசடிகள் வெளிவராமல் இருக்க) இனந்தெரியாதோர் அவர் மீது பழி சுமத்துவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கூட்டமைப்பினரின் இந்தியப் பயணமும் எதிர்பார்ப்புகளும்

அரசுக்கும் - தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வந்த இருதரப்பு பேச்சுக்கள் ஏன் முறிந்து போனது என்பதற்கு சரியான தகவல் பகிரங்கமாகாவிட்டாலும், பேச்சிலிருந்து முறித்துக் கொண்டு போனது அரசு தரப்புதான் என்பது பொதுவாக தெரிந்த விடயம். அதன் பிறகுதான் தீர்வு வேண்டுமானால் தெரிவுக் குழுவுக்கு வாருங்கள் என்ற வகையில் அரசுத் தரப்பிலிருந்து 'சவடால்' தனமான அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இப்பொழுது மீண்டும் அந்த முறிந்துபோன பேச்சை முன்னெடுக்க அரசு விரும்புகிறதோ இல்லையோ, அரசு தரப்பைச் சேர்ந்த வட்டாரங்களில் இருந்து அப்படியான ஒரு விருப்பம் இருப்பது பற்றிய தகவல் கசிந்துள்ளது.

பேச்சு வார்த்தைகளைத் தொடர்வதானால், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் கோரிக்கை விடுக்க வேண்டும் என்று அமைச்சர் ஒருவர் அண்மையில் கூறியிருந்ததும், அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் விடுக்கப்பட்ட பதிலில் பேச்சை முறித்துக் கொண்டது நீங்கள், அப்படியிருக்க மீண்டும் பேசுவதானால் விடுபட்ட இடத்திலிருந்து அதனைத் தொடரலாம். ஆனால் அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்தே முறையான அழைப்பு வர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஒரு ஜனநாயக அமைப்பு. அதனால் பேச்சுவார்த்தைகள் மூலமே ஒரு தீர்வு ஏற்பட வேண்டும் என்பதில் அவர்களுக்கு அக்கறையுண்டு. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் நடத்திய அரசு அதற்காக வடக்கு, கிழக்குக்கு பெரும் எடுப்பில் படைகளை நகர்த்தி நிலைகொள்ளச் செய்துவிட்டு அவைகளை திரும்ப அழைக்க முடியாமல் அல்லது விரும்பாமல் இந்தப் பிரதேசங்களில் வாழும் பொதுமக்களின் பொது வாழ்வில் நெருக்கடிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

போர் முடிவுற்று தமிழீழ விடுதலைப் புலிகள் இல்லாமல் செய்யப்பட்டு, ஒப்புக்கு வடக்கு மாகாண சபைத் தேர்தலும் நடத்தப்பட்டு விட்ட பிறகும், அரசு தமிழ் மக்களையும் அவர்களின் பிரதிநிதிகளையும் ஓரக்கண்ணால் நோக்குவதை கைவிடாமல் இருக்கிறது. 60 வருடங்களுக்கு மேலாக ஏமாற்றப்பட்டு வந்துள்ள தமிழ் மக்கள் இலகுவில் அரசையோ அதன் கையாள்களையும் நம்பிவிட மாட்டார்கள். முதலில் அரசுத் தரப்புதான் நம்பிக்கை ஊட்டும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். அளிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் தனி நாட்டைக் கோரி நிற்கவில்லை என்பதை பல தடவைகளிலும் பட்டவர்த்தனமாக அறிவித்து விட்டார்கள். அப்படியிருக்க அவர்களை தமிழ் மக்களின் சந்தேகத்துக்கிடமற்ற பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு நியாயபூர்வமான ஒரு தீர்வை நோக்கி நகர முயல வேண்டியதே இன்றுள்ள யதார்த்த நிலையாகும்.

இதைத்தான் அண்மையில் இந்தியாவுக்கு சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியபின் இந்திய தலைவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்தியத் தலைவர்களுடன் நடத்தியுள்ள பேச்சுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திருப்தி கொண்டுள்ளனர். இலங்கை அரசு சார்பில் பலவித கருத்துக்கள் இந்தச் சந்திப்பு குறித்து வெளியிடப்பட்டாலும், இந்தியாவின் மறைமுக அழுத்தம் இலங்கை அரசு மீது இருக்கவே செய்யும். அவைகளை அரசினால் புறந்தள்ளிவிட முடியாது. ஏனென்றால் சர்வதேச மட்டத்தில் பல சூழ்நிலைகளில் இந்தியாவின் ஆதரவும் அனுசரணையும் இலங்கைக்கு தேவைப்படுவதாய் இருக்கும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இந்திய பயணத்தின் விளைவாக ஏற்படக் கூடிய நல்லதொரு அனுகூலமான திருப்பத்தால், இலங்கை அரசியலிலும் மாற்றம் ஏற்படும் வாய்ப்பு இருப்பதாகவே தெரிகிறது. அவ்வாறே நடக்க வேண்டும் என்பதே மக்கள் விருப்பமாகவும் இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

# தமிழ் புத்திஜீவிகள் தளத்தின் குறுக்குவெட்டுத் தோற்றம்

கனல்

தமிழ் பரப்பில் இயங்கும் புத்திஜீவிகள் தளம் எப்படியானது? அது தனது பெயரில் முன்னெட்டாகக் கொண்டிருக்கும் புத்தி அதாவது அறிவுக்கும் அதன் ஜீவித நிலைத் திருப்புக்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா? கடந்த 30 வருடங்களாக இயங்கும் இந்தப் புத்திஜீவிகள் தளத்தை அவதானிக்கும் ஒருவருக்கு இந்தச் சந்தேகங்கள் எழுவது சாதாரணமான விடயம்தான்.

**புத்திஜீவிகள் யார்?**

குறித்த ஒரு சமூகத்தின் ஒருவகைப் பிரதிநிதிகள், அதாவது அரசியல் தலைவர்களுக்கும் அந்த சமூகத்துக்கும் இடையில் நிற்கும் இடையீட்டாளர்கள், அதற்குள் நின்று தொடர்ச்சியாகத் தொழிற்படுபவர்கள், ஒட்டுமொத்த சமூகத்தினதும் அறிவுப் பெட்டகமாகக் கொள்ளத்தக்கவர்கள். அவர்கள் நடமாடும் வெளிக்கும் நிகழும் எந்த மாற்றங்களுக்கும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள்.

ஆக, அவர்கள் இயங்கும் சமூகத்தின் கேள்விகளாகவும், பதில்களாகவும் நின்று, அதை வெளிப்படுத்திக் கொண்டிருப்பவர்கள் எனப் பலவாறான விளக்கங்களைப் புத்திஜீவிகளுக்கு கொடுக்க முடியும். அந்தவகையில் இந்த வட்டத்துக்குள். அறிஞர்கள், கல்வியியலாளர்கள், சமயத் தலைவர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் அடங்குகின்றனர்.

**தமிழ்ப் பரப்பில் புத்திஜீவிகள்**

தமிழ்ப் பரப்பில் புத்திஜீவிகளின் காலம் தொன்மையானது. சங்க இலக்கியப் புலவர்களிலிருந்து இந்த வகுப்பாரின் பாரம்பரியத்தை அவதானிக்கலாம். மக்கள் பக்கம் நின்று மன்னனுக்கு அறிவுரை வழங்குபவர்களாகவும், மன்னன் மிலேச்சத்தனமிக்கவனாகவும், மக்கள் நலனில் அக்கறை கொள்ளாதவனாகவும் இருந்த காலத்தில் வசையாகவேனும் தம் பாடல்களில் எடுத்துச் சொல்பவர்களாகவும், மக்களின் நாட்பட்ட துயரங்களை எழுத்தில் பதிவுசெய்தவர்களாகவும், அரசவை ஆலோசகர்களாகவும் இயங்கியிருக்கின்றனர். இதில் மன்னனின் பொன் பொருளுக்காக மட்டும், மாறி..மாறி..புகழ் பாடும் மரபினரும் இருந்திருப்பதை வரலாறு பதிவுசெய்திருக்கின்றது. இந்த வகை புத்திஜீவிகளின் தொடர்ச்சி சோழ சாம்ராஜ்யத்தின் சரிவு வரைக்கும் நீடித்திருக்கின்றமையை தமிழ் இலக்கியங்கள் ஆதாரப்படுத்தியிருக்கின்றன. கீழைத்தேசங்கள் நோக்கி மேலைத்தேயர்களின் - ஆங்கிலேயர்களின் ஆதிக்கப்படர்ச்சி நிகழ்ந்த காலத்தில், புத்திஜீவிகள் மட்டத்தில் முதல் தடவையாக மாற்றம் நிகழ்கின்றது. வெளிப்படையாக இருவகையாகப் பிரிந்து இயங்கத் தொடங்குகின்றனர். ஒருசாரார் ஆங்கிலம் கற்று, வெள்ளைக்காரத் துரைமார்களின் எடுபிடிகளாகவும், தமிழ் கலாசாரத்தினையும், பண்பாட்டையும் அவர்களுக்குக் கற்பிக்கும் கோர்ட்-சூட் அணிந்த சேவகர்களாக மாறுகின்றனர். இன்னொரு சாரார் தமிழர்களின் பண்பாட்டையும், கலாசார விழுமியங்களையும் ஆங்கிலேய ஆக்கிரமிப்புக்களில் இருந்து காப்பாற்றும் சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்து, சமூகத்தின் கலாசார இருப்பைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். காலம்செல்லச் செல்ல கோர்ட்- சூட் அணிந்த புத்திஜீவிகள் வெள்ளைக்காரர்களின் அரண்மனைகளின் அரசியல்வாதிகள் ஆகும் அந்தஸ்தைப் பெற்று வரலாற்றில் தலைவர்களாக நிலைபெற, தெருவில் இறங்கிப் போராடிய புத்திஜீவிகள், சமயத் துறவிகளாகவும், கண்டுகொள்ளப்படாதவர்களாகவும்மாறியது தமிழ் வரலாற்றின் துயரான பக்கங்களில் ஒன்று.



இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்பு, இந்தப் புத்திஜீவிகளின் போராட்டமும், அவர்கள் வெள்ளைக்கார அரசியலில் பெற்ற முக்கியத்துவமும் சிங்கள வர்களுக்கு ஏற்படுத்திய கோபமே, முள்ளிவாய்க்காலில் முடிந்ததும், இன்று வரை நீடிப்பதுமான மனச்சாட்சியைத் தொலைத்த அரசியல். இலங்கையின் சுதந்திரத்தோடு தமிழர் மத்தியில் உருவான அகிம்சைப் போராட்டத்தின் மைய சக்தியாகவே புத்திஜீவிகள் இயங்கினார்கள். ஏனெனில் வெள்ளைக்காரன் பரிசளித்துவிட்டுப்போன இணைக் கப்பட்ட இலங்கையில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது அவர்கள் தான். அகிம்சைப் போராட்டத்தின் முதிர்ச்சி நிலை யிலேயே அரசியல் செய்வதை ஒரு தொழிலாகக் கருதும் தரப்பினர் தமிழ் அரசியலுக்குள் நுழைந்தனர். அவர்கள் சமூக மட்டத்தில் பெற்றிருந்த செல் வாக்கும், ஜனநாயக வாக்களித்தலிலும், கல்வியறிவிலும் சாதாரண மக்கள் பெற்ற அறிவும் புத்திஜீவிகள் தரப்பி லிருந்து அரசியல்வாதிகளைத் தனித் தொகுதியினராக்கியது. அரசியல் வாதிகள் வேறு, புத்திஜீவிகள் வேறு என்கிற நிலை உருவானது. புத்திஜீவிகள் கல்வி, சமய, வணிக நிறுவனங்களுக்குள் போன காலத்தில் அகிம்சை தன் தோல்வியை அறிவித்தது. இளைஞர்கள் ஆயுதங்களைக் கொண்டு விடுதலையைத் தேட எல்லாத்திசைகளிலிருந்தும் புறப்பட்டார்கள்.

> வெள்ளைக்காரன் பரிசளித்து விட்டுப்போன இணைக்கப்பட்ட இலங்கையில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியது அவர்கள்தான். அகிம்சைப் போராட்டத்தின் முதிர்ச்சி நிலையிலேயே அரசியல் செய்வதை ஒரு தொழிலாகக் கருதும் தரப்பினர் தமிழ் அரசியலுக்குள் நுழைந்தனர். அவர்கள் சமூக மட்டத்தில் பெற்றிருந்த செல்வாக்கும், ஜனநாயக வாக்களித்தலிலும், கல்வியறிவிலும் சாதாரண மக்கள் பெற்ற அறிவும் புத்திஜீவிகள் தரப்பிலிருந்து அரசியல் வாதிகளைத் தனித் தொகுதியினராக்கியது.

ஆரம்பத்தில் விடுதலைப் போராட்டங்களுக்குள் இருந்த பல கிளைகள், அவரவர் கருத்துகளுக்கும், விடுதலை குறித்த புரிதலுக்கும் அமைவான இயக்கங்களை உருவாக்கின. அதற்கெனப் போதியளவான பெயர்களும் உடனுக்குடன் கிடைத்தன. நினைவிருக்கும் கணக்கின்படி 32 அமைப்புகள் உருவாகியிருந்தனவாம்! அவரவர் வாசிப்புக்கும், அறிவுக்கும் ஏற்புடைய ஆயுதப் போராளிகளின் முகாம்களுக்குள் புத்திஜீவிகள் புகுந்து கொண்டனர். ஆயுதங்களின் அபாயம் உணர்ந்து எதுவும் பேசாது ஒதுங்கிக் கொண்டவர்களும் இருந்தனர். துப்பாக்கிகள் கண்ட வனையெல்லாம் சுட்டுத் தள்ளியபோது அதற்கு உயிரைக் கொடுத்த புத்தி ஜீவிகளும் இருந்தனர். புத்திஜீவித்தனத்திலிருந்து விலகியவர்கள் போக, தொடர்ந்தும் இயங்கியவர்கள் ஏதாவதொரு ஆயுத அமைப்பின் கூடாரத்துக்குள் ஒதுங்க வேண்டிய சூழல் உருவானது. எல்லா ஆயுத அமைப்புகளும் ஓரியக்கமாக்கப்பட்ட நேரத்தில், அதில் உடன்பாடில்லாதவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி புலம்பெயர் தேசங்களில் மாயமானார்கள். மறைந்து போனர்கள். அவ்வப்போது சிலர் எழுத்து சர்ச்சை களில் வெளிப்பட்டார்கள்.

விடுதலைப் புலிகளை ஏற்றுக் கொண்ட புத்திஜீவிகள் அமைப்பில் தொடர்ந்தும் உள்ளும் புறமுமாக இயங்கினார்கள். சமாதான காலத்தில் அதற்குள்ளும் பிளவுகள் உருவாகின. சிலர் மௌனித்தார்கள். நந்திக்கடலில் ஆயுதப் போராட்டம் இறுதியாகக் கரைந்ததுடன், புத்திஜீவிகள் எனப்பட்டோர் பூசியிருந்த சாயமும் கரைந்தது.

இதுவரை எழுதிய எழுத்துக்களும், நெஞ்சாரத் தாங்கிய தத்துவங்களும் பொய்யென்றும், பிழையென்றும் வாதிட்டார்கள். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் தமது தற்போதைய நிலைப்பாட்டை நிரூபித்தார்கள். ஏதாவதொரு அதிகாரத் தரப்பின் ஆதரவுடன் தமது இருப்பைத் தொடர்ந்தும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனக்கொண்டு செயற்பட்டதைத் தெளிவாக அவதானிக்க முடிந்தது. கல்வித் துறையில் இயங்கிய புத்திஜீவிகளின் நிலையோ சிரிப்பை வரவைத்தது. கொஞ்சமும் கூச்சப்படாது, மேடையேறினார்கள். அதிகாரத்தரப்பின் முன்னால் கூனிக் குறுகினார்கள். வாழ்த்துப் பாடினார்கள். மீண்டும் சங்க காலத்தின் ஒரு தரப்பினராகிய புலவர்கள் அரங்கிற்கு வந்தார்கள். இப்படியே, மாற்றம் ஒன்றே மாறாததென்று சொல்லி ஆரம்பத்தில் கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளிலிருந்தும் தப்பித்துக் கொண்டார்கள் புத்திஜீவிகள்.

ஆயினும் இதிலிருந்து சிலர் மறுபடியும் ஒதுங்கிக் கொண்டார்கள். இன்றும் சிலர் தொடர்ந்தும் மக்களுக்காக, மக்கள் பக்கம் நின்று இயங்குகின்றார்கள். எல்லா வகையான தடைகளையும், அச்சுறுத்தல்களையும் மீறி தம்மால் இயன்றளவு எல்லைக்குள் பயணித்துக் கொண்டிருப்பதை தமிழ் உலகம் மறந்துவிடவில்லை.

# தென்னைப் பயிர்ச் செய்கைக்கான நவீன தொழில்நுட்ப ஆலோசனைகள்

*இன்றைய தினம் இலங்கை முழுவதும் தெங்கு தினம் கொண்டாடப்படுவதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது*

ரி.எஸ்.சத்தியேந்திரன்,
*தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி.*



தென்னைச் செய்கையில் புதிய தென்னங் கன்றுகளை நடுதலும் தற்சமயம் உள்ள தென்னை மரங்களைப் பராமரித்தலும் முக்கிய செயற்பாடாகும். மழை காலம் ஆரம்பித்தவுடன் வீட்டுத் தோட்டத்திலும், பெரிய அளவிலான தோட்டங்களிலும் புதுநடுகை, மீள் நடுகை, கீழ் நடுகையாகவும் தென்னங் கன்றுகளை நாட்டலாம். எந்த வர்க்கமான தென்னைகளாயினும் சரி, தெரிவுசெய்யப்பட்ட தாய் மரங்களிலிருந்து பெறப்பட்ட விதைகளை அதற்குரிய தொழில்நுட்ப முறையில் நாற்று மேடை போடப்பட்டு சிறந்த தென்னங் கன்றுகளை விநியோகிக்கும் இடங்களிலிருந்தே வாங்கி நடுகை செய்வது சாலச் சிறந்தது.

தென்னைகள் உயரினம், கலப்பினம், செவ்விளநீர் இனம் என்று பிரிக்கப்பட்டுள்ளன. உயரினம், செவ்விளநீர் இனங்கள் எமது பிரதேசத்துக்குப் பொருத்தமானதாகும். கலப்பின செவ்விளநீர் இன தென்னங் கன்றுகளை வீட்டிலே மூன்று அல்லது நான்கை நட்டு சிறந்த முறையில் பராமரிப்பதன் மூலம் முறையே மூன்று, ஐந்து வருடங்களில் விளைச்சலைப் பெற முடியும். கலப்பின தென்னங்கன்றுகளை நடும்போது ஈரலிப்பு எந்த நேரமும் இருக்கும் இடமாகத் தெரிவு செய்து நடுதல் வேண்டும். உயர் வர்க்கத்தை, பெருந்தோட்டங்களிலும் அல்லது வீட்டுத் தோட்டங்களிலும் நடலாம். இது பயன்தர ஐந்தில் இருந்து ஆறு வருடங்கள் எடுக்கும்.

**தென்னை நடுகை முறை**

எந்த வர்க்கமான தென்னைகளாயினும் சரி நடுகை முறையில் வேறுபாடு இல்லை. நடுகை செய்வதற்குரிய காணியைத் தெரிவு செய்து துப்புரவாக்கி நடுகைக் குழியைத் தயார் செய்தல் வேண்டும். நடுகைக் குழியின் அளவு மண்ணுக்கு மண் வேறுபடும். தென்னைகளுக்கிடையில் ஊடு பயிர்ச் செய்கை செய்யும் நோக்கத்துடன் நடுகை மேற்கொள்வதாயின் சதுர முறையில் இரண்டு தென்னங்கன்றுக்கிடையேயான தூரம் 26 X 26 அடி ஆகவும் ஏனைய பிறவாயின் 22 X 22 அடி தூர இடைவெளியிலும் ஏக்கருக்கு முறையே 64,90 தென்னங்கன்றுகளை நடலாம். எனவே மேற்குறிப்பிட்ட அளவுகளில் கூனி அடித்து நடுகைக் குழியை வெட்டுதல் வேண்டும்.

**நடுகைக்குழி தயார் செய்தல்**


நடுகை செய்யப்பட வேண்டிய இடங்களை அடையாளப்படுத்திய பின்பு, கிரவல் மண் உள்ள இடத்தில் மூன்று அடிக்கு, மூன்று அடி நீள.அகல ஆழத்திலும் மணல் மண், இருவாட்டி மண் உள்ள தரையாயின், இரண்டு அடி இரண்டு அடி நீள அகல ஆழத்திலும் குழிகளை வெட்டுதல் வேண்டும். வெட்டும்போது மேற்படை மண்ணை ஒரு புறமாகவும் கீழ்ப் படை மண்ணை எதிர்ப் பக்கமாகவும் தரையில் போடவும். குழியின் அடியில் நிலக்கறையானைக் கட்டுப்படுத்த கிடைக்கக்கூடிய அளவு அடுப்புச் சாம்பல் இடவும். பின்பு அடியில் இரண்டு படையில் பொச்சுமட்டை அடுக்கவும். அழுத்தமான பக்கம் கீழ்ப்பக்கம் இருக்கத்தக்கவாறு அடுக்கவும். மேற்படை மண்ணுடன் பின்வருவனவற்றைக் கலக்க வேண்டும். இரண்டு கூடை மாட் டெரு அல்லது ஒரு கூடை ஆட்டெரு உடன் ஐந்து கிலோ அடுப்புச் சாம்பல். இவை கிடைக்காது விட்டால் அடி உரமாக அரை கிலோ வை. பி.எம். (இளமரக் கலவை) இனை மண்ணுடன் கலக்கவும். பசளை கலக்கப்பட்ட மண்ணை மணல் தரையாயின் ஒன்றரை அடி ஆழத்துக்கு கிரவல் தரையாயின் இரண்டரை அடி ஆழத்துக்கும் நிரப்புதல் வேண்டும். இத்தனை செயல் முறைக்கு முன்பு தென்னங்கன்றை நடுதல் கூடாது.

**நடுகை முறையின் தொழில்நுட்பம்**

நாற்றுக்களுடன் கூடிய விதைத் தேங்காய்களைக் கறையான் தாக்கத்திலிருந்து தடுப்பதற்கு அல்றெக்ஸ் 25வீதம் அல்லது குளோரோபைரிபொஸ் ஐந்து மில்லி லீற்றரை ஐந்து லீற்றர் தண்ணீரில் கலந்த கலவையினுள் அமிழ்த்தி எடுக்கவும். பின்பு நில மட்டத்திலிருந்து அரை அடிக்குக் கீழே நடுகைக் குழியிலுள்ள மண் மட்டத்தில் ஒரு பொழி மண்ணை மண்வெட்டியால் கிடங்கின் நடுவே வெட்டி எடுத்து அதனுள் தென்னங்கன்றை நேராகவும் விதைத் தேங்காயின் மேற்பரப்பும் கிடங்கிலுள்ள மண் மட்டமும் சமனாக இருக்கத்தக்கவாறு தண்டுப் பகுதியை மண்ணினுள் தாழ்க்காமலும் மண்ணை அணைக்கவும். தேங்காயின் மேற்பரப்பும் கிடங்கிலுள்ள மண்மட்டமும் சமனாக இருக்கத்தக்கவாறு தண்டுப் பகுதியை முற்றாக மண்ணினுள் தாழ்க்காமலும் மண்ணை அணைக்கவும்.

அனேகமான தென்னைச் செய்கையாளர்கள் தண்டுப் பகுதியையும் விதை தேங்காயையும் மண்ணினுள் முற்றாகத் தாட்டுவிடுகின்றனர். இது முற்றிலும் பிழையான செயல்முறை ஆகும். எனவே மேற்குறிப்பிட்ட செயன் முறையில் நட வேண்டும்.

மேலதிக, தென்னைத் தொழில்நுட்ப ஆலோசனைகளை தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் கமநலசேவை நிலையத்தில் சந்தித்து பெற்றுக்கொள்ள முடியும். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ளவர்கள் கிளிநொச்சி கமநல சேவை நிலையக் கட்டடத்தில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை அலுவலகத்தில் புதன்கிழமைகளில் மட்டும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்புகொள் ள முடியும்.



# நெருக்கடியான காலகட்டத்திலும் மக்களுடன் வாழ்ந்த "தர்மர்"

ஆ.சி.கணேசவேல்
*பிரதேச சபை உறுப்பினர் மானிப்பாய்.*

ஈழத் தமிழ் பேசும் மக்களின் உன்னதமான இலட்சியத்துக்காக பல வருடங்கள் போராடித் தனது உயிரைத் தியாகம் செய்த அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கம் அவர்களின் 29 ஆவது சிரார்த்த தினம் இன்று ஆகும்.

கந்தரோடைக் கிராமத்தில் தானதர்மம் செய்யும் வள்ளல் பரம்பரையின் ஏக வாரிசாக 05.02.1918 இல் பிறந்தவர் அமரர் தர்மலிங்கம். இவரை உறவினர், நண்பர்கள் மற்றும் மக்கள் "இலங்கையர்" என செல்லமாக அழைப்பார்கள். எப்பொழுதும் தமிழ்க் கலாசாரத்துக்கு அமைவாக தூய அழகான வேட்டி, நஷனல், கழுத்தில் மவ்ளர், முகம் மலர்ந்த சிரிப்பு, பொலிவான தோற்றம், கள்ளம் கபடமில்லாத வெள்ளை நெஞ்சம் கொண்ட "தர்மர்" இன்றும் பல்லாயிரக்கணக்கான மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்.

இவர் இளைஞராக இருந்த காலத்தில் 1942 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் மாணவர் பேரவை என்ற அமைப்பை உருவாக்குவதில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளார். அவர் ஈடுபட்ட முதலாவது பொதுப்பணி இதுவேயாகும். இளமைத் துடிப்பும் இலட்சியப் பற்றும் உடைய இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களை ஆக்கப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்றதன் விளைவே யாழ்ப்பாணம் மாணவர் பேரவை.

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்ட தர்மா உடுவில் கிராம சபையின் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். இவர் சபைத் தலைவராக இருந்தபோது ஊழலுக்கும் இலஞ்சத்துக்கும் எள்ளளவும் இடம்கொடாது நேர்மையான நிர்வாகத்துக்கு இலக்கணமாக விளங்கியமையால் பலமுறை இந்தச் சபையின் தலைவர் பதவி இவரைத் தேடி வந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் அவருக்கிருந்த பற்றால் 1960 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட உடுவில் தொகுதிக்கு அந்த வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் நிறுத்தப்பட்டு பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் பெருவெற்றியீட்டினார். அன்று தொடக்கம் உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ச்சியாக இருபத்துமூன்று வருடங்கள் சிறப்பாகக் கடமையாற்றி 1983 ஆம் ஆண்டு ஆறாவது அரசியல் அமைப்பு திருத்தச் சட்டத்துக்கு அமைய சத்தியப்பிரமாணம் எடுக்க மறுத் ததன் காரணமாக அவரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது.

தர்மர் தன்னுடன் தேர்தலில் போட்டியிட்டவர்களுடன் எப்பொழுதும் அன்பாகவும், பண்பாகவும் பழகி அவர்களுக்கிடையில் நிலவிய நட்பும் பரஸ்பர மதிப்பும் பாதிக்கப்படாத வகையில் ஒரு நாகரிகமான அரசியல்வாதியாகத் திகழ்ந்தார். இவர் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரைகளைப் புரட்டிப் பார்ப்போமானால் அவரின் பேச்சுக்களில் மூன்று கருத்துக்கள் என்றும் தொனிக்கும்- தமிழுணர்வு, சம தர்மக் கொள்கை, இந்தியாவுடனும் மற்ற சோஷலிஸ நாடுகளுடன் நட்பு இந்த வகையில் தமிழரசுக் கட்சியின் அப்போதைய வெளிநாட்டுக் கொள்கையின் பிரதிநிதியாகவே காட்சியளித்தார். "தர்மர்" எந்த இடதுசாரிக் கட்சியிலும் ஒரு நாளும் அங்கத்தவராக இல்லாவிட்டாலும் நாடாளுமன்றத்தில் பொதுவுடைமை நாடுகளின் மேம்பாட்டையும் குறிப்பாக அப்போதைய சோவியத் ஒன்றியத்தின் வளர்ச்சியையும், பலஸ்தீன மக்களின் இன்னல்களையும் எடுத்து இயம்பிய பெருமை இவரையே சாரும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன நடத்திய சகல போராட்டங்களிலும் பற்றுறுதியுடன் கலந்து கொண்டார். 1961 ஆம் ஆண்டு தமிழ் பிரதேசங்களில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின் போது குண்டாந்தடியால் தலையில் தாக்கப்பட்டு இரத்தம் வழிந்த நிலையில் பனாகொடை முகாமில் அடைக்கப்பட்டு விடுதலையானார்.

நெருக்கடியான காலகட்டத்தில் கூட ஏனையவர்கள் இந்தியாவிலும் வேறு நாடுகளிலும் இருந்த போது தனது சொந்தக் கிராமத்தில் துணிந்து வாழ்ந்தவர் "தர்மர்"

"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என திருவள்ளுவர் கூறியதுக்கிணங்க தர்மரின் ஏக புத்திரன் தம்பி சித்தார்த்தன் தனது தந்தையார் விட்டுச்சென்ற பணிகளைச் சிறப்பாகச் செய்து வருகிறார். யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி அமைப்பதற்கு தந்தையின் நினைவாக இருநூறு பரப்புக் காணியை இலவசமாக வழங்கியதை யாழ்.கல்விச் சமூகம் பாராட்டியுள்ளது. கல்லூரியின் நிர்வாகம் தர்மருக்கு உருவச்சிலை அமைத்து அவர் நினைவாக ஒரு மண்டபத்துக்கு "தர்மலிங்கம் மண்டபம்" என பெயர் சூட்டி இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**:பக்தியில் நாட்டம் ஏற்படும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை தீரும். உதவிகளைச் செய்து மனத் திருப்தி அடைவீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்ற எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும்.

**இடபம்**:மனதில் இருந்த குழப்பம் நீங்கி திருப்தி நிலவும். பயணங்கள் செல்ல நேரிடலாம். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணியாளர்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும்.

**மிதுனம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**கடகம்**: சாமர்த்தியமான பேச்சின் மூலம் எடுத்த காரியத்தை வெற்றிகர மாகச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வாக்குவன்மையால் காரிய வெற்றி பெறுவார்கள். குடும்பத்தில் வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**சிங்கம்**: நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். உத்தியோகத்தில் இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாள்களாக முடிக்க முடியாமல் இருந்த ஒரு காரியத்தைச் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி**: தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். உத்தியோகத்தர்களுக்கு வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்சினை குறையும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். திருமண காரியங்கள் கைகூடும்.

**துலாம்**: முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். அதனால் நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும்.

**விருச்சிகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். மற்றவர்கள் மூலம் உதவி கிடைக்கும். குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். வாழ்க்கையில் சந்தோஷம் அதிகரிக்கும்.

**தனுசு**: தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கி சாதகமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலும் காரிய தாமதமும் ஏற்படும்.

**மகரம்**: புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். வெளியூர் பயணங்களின்போது கவனம் தேவை. அடுத்தவர்களுக்காக பொறுப்புக்களை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது.

**கும்பம்**: புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. வீண் அலைச்சலைக் குறைத்துக்கொண்டு வேலைகளில் கவனம் செலுத்துவது நல்லது. துணிச்சலுடன் எந்த காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாகச் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்**: புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செல்ல வேண்டி வரலாம். பலவகையிலும் பிறர் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். புத்தி சாதுரியம் அதிகரிக்கும். யாருக்கும் வாக்குறுதிகள் கொடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும்.

## நாளை

**ஆவணி-18 புதன்கிழமை | 03.09.2014**

திதி: நவமி மு.இ.09.52 வரை
நட்சத்திரம்: கேட்டை பி.ப.01.58 வரை
சுபநேரம்: 04.35-06.05 வரை
இராகுகாலம்: 12.05-01.35 வரை
ஆவணி மூலம்



## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### படித்தவனும் பணக்காரனும்


"இந்தக் காலத்தில் சாரமற்றதற்கு மக்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக நினைக்கிறீர்களா?"

"பின்தங்கிய நாடுகளிலும் மேலை நாடுகளின் பண்படாத மக்களிடையேயும் தான் இப்படி இருக்குமென நான் எண்ணுகிறேன். படித்தவர்களிடமும் பணக்காரர்களிடமும் விடயங்கள் வேறு விதத்தில் தெரியக் கூடும் என்ற எண்ணத்தினால் உங்கள் கேள்வி பிறந்திருக்கலாம். ஆம், அது உண்மையே. பணக்காரர்கள் பணத்தால் வரும் இன்பத்தில் ஆழ்ந்துள்ளனர்; பணத்தைச் சேர்க்கப் பேராசை பிடித்தலைகின்றனர். அவர்களும், சற்றும் ஓய்வின்றித் திரிபவர்களும் சமயத்தை வீண் பிதற்றலென்றும், அழுகிய குப்பை என்றும் ஒதுக்கி விடுகிறார்கள். அவர்கள் உண்மையாகவே அப்படித் தான் கருதுகிறார்கள். இப்போதைய சமயம் என்பது நாட்டுப் பற்றும், ஊர் வாய்க்கு அஞ்சி நடிக்கின்ற செயலுமே. மணம் புரிவதற்கோ. இறந்தவரைப் புதைப்பதற்கோதான்மக்கள்தேவாலயத்துக்குச் செல்கிறார்கள்."

"உங்கள் உபதேசம் மக்களே அடிக்கடி கோயிலுக்குப் போகும் படி தூண்டுமா?"

"அப்படி ஒன்றும் நான் நினைக்கவில்லை. சடங்குகள், பிடிவாதமான மூடக் கொள்கைகள் இவற்றுடன் எனக்குச் சிறிதும் தொடர்பு இல்லை. சமயமே எல்லாம், சமயத்திலேயே எல்லாம் என்பதைக் காட்டுவதே எனது பணி. இங்கிலாந்திலுள்ள சமய அமைப்புக்களை பற்றி என்ன சொல்வது! பொதுவுடமை அரசியலோ, அல்லது ஏதோ ஒரு குடியரசோ, எந்தப் பெயரையாவது வழங்குங்கள். ஏதோ ஒன்று நடைமுறையில் உள்ளன. என்பதை ஒவ்வொன்றும் காட்டுகிறது.உலகத்தேவைகளைப் பெறுதல், குறைந்த நேர வேலை, எதிர்ப்பின்மை, போரின்மை முதலியவற்றையே மக்கள் விரும்புகிறார்கள். மனித நன்மை மீதும், "சமயத்தின் மீதும் நிறுவப்படாத இந்த நாகரிகம் எப்படி நீடிக்க முடியும்? சமயம் தான் எந்தப் பொருளின் மூலத்தையும் ஆராய்கிறது. " எனவே அதைச் சார்ந்து நில்லுங்கள்.சமய நெறி சரியாக அமைந்தால் எல்லாம் ஒழுங்காகிவிடும்.

## பூமியை அச்சுறுத்தும் சூரியப் பிழம்புகள்



சூரியனின் மிக வீரியமான பிழம்புகளால் பூமிக்கு பாதிப்பு ஏற்படலாம் என்று பிரபல விண்வெளி ஆய்வு மையமான நாஸா தெரிவித்துள்ளது.

சூரியனில் எப்போதும் நடுக்கம் இருந்துகொண்டே இருக்கும். அப்போது அதிலிருந்து நெருப்புக் கோளங்கள் தோன்றும்.

இந்தச் சூரிய நடுக்கம் ஒவ்வொரு 11 ஆண்டுகளுக்கும் உச்சத்தை அடையும். அப்போது அதன் பிழம்புகள் மிக வீரியத்துடன் இருக்கும். சூரிய நடுக்கம் தற்போது உச்சத்தை அடைந்துள்ளது.

சமீபத்தில் அமெரிக்காவில் உள்ள விண்வெளி மையமான நாஸா தன்னிடம் உள்ள சோலர் டைனமிக்ஸ் அப்சர் வேட்டரி அண்ட் சோலர் ஹீலோஸ் பெரிக் அப்சர்வேட்டரி' என்ற கண்காணிப்புக் கருவி மூலம் சூரிய நடுக்கத்தை ஆராய்ந்து உறுதி செய்துள்ளது.

இதுகுறித்து நாஸாவின் செய்தித் தொடர்பாளர் கேரன் ஃபோக்ஸ் கூறுகையில்; இந்தச் சூரியப் பிழம்புகள் பூமியில் உள்ள ஜி.பி.எஸ். மற்றும் இதர தொலைத் தொடர்பு சமிக்ஞைகளைப் பாதிக்கும் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து விஞ்ஞானிகள் கூறுகையில்; நாளடைவில் சூரியப் பிழம்புகள் குறைந்து கொண்டே வந்தாலும் கூட சூரிய நடுக்கம் அதன் குறைந்த பட்ச அளவை அடையும் வரை இந்தப் பிழம்புகளின் தாக்கம் பூமிக்குப் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். இதனால் மனிதர்களுக்கோ, பூமியில் உள்ள பிற உயிரினங்களுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று கூறியுள்ளனர்.

அதைத் தொடர்ந்து அமெரிக்க இராணுவம் தங்களின் தரை, கடல் மற்றும் வான் வழி தொலைத் தொடர்பு சாதனங்களைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு, தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 9 | | | | 3 |
| 7 | | 4 | | 5 | | 1 | | 2 |
| 2 | | | | 4 | 7 | 6 | 8 | |
| | | 6 | | | | | 4 | 8 |
| | 8 | | 3 | 1 | 4 | | 6 | |
| 4 | 7 | | | | | 2 | | |
| | 9 | 8 | 2 | 3 | | | | 4 |
| 3 | | 5 | | 7 | | 8 | | 6 |
| 6 | | | | 8 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 8 | 1 | 3 | 6 | 5 | 2 | 7 | 9 |
| 5 | 9 | 2 | 7 | 8 | 4 | 1 | 3 | 6 |
| 7 | 6 | 3 | 9 | 1 | 2 | 5 | 8 | 4 |
| 8 | 2 | 5 | 6 | 7 | 1 | 9 | 4 | 3 |
| 1 | 4 | 6 | 2 | 3 | 9 | 7 | 5 | |
| 9 | 3 | 7 | 5 | 4 | 8 | 6 | 2 | 1 |
| 3 | 1 | 9 | 8 | 2 | 7 | 4 | 6 | 5 |
| 2 | 5 | 8 | 4 | 9 | 6 | 3 | 1 | 7 |
| 6 | 7 | 4 | 1 | 5 | 3 | 8 | 9 | 2 |

# யங்ஸ்ராரை வெற்றி கொண்டது சென்றல்



கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை 140 ஓட்டங்களால் வெற்றி கொண்டது யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அந்த அணி சார்பாக பாலேந்திரா 57 ஓட்டங்களையும், அன்ரூ 43 ஓட்டங்களையும், விஸ்ணு 38 ஓட்டங்களையும், கலிஸ்ரன் 31 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி சார்பில் விஜிதரன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 28 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், கோபி 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

256 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் 24 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 115 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர். இதன் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி 140 ஓட்டங்களால் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இதில் அதிகபட்சமாக விஜிதரன் 30 ஓட்டங்களையும், சுஜயன் 24 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பில் சுபாதீஸ் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 3 ஓட்டங் களுக்கு 3 இலக்குகளையும், யசிந்தன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், மில்லா 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ரி-23)

# வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய வி.கழகம்

யாழ்ப்பாணம், செப். 2

மன்னார் பெரியமடு ஈச்சளவக்கை மருதம் விளையாட்டுக்கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஈச்சளவக்கை மருதம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூட்சிய விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணி வீரர்களும் சமபலத்துடன் மோதினர். இதனால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் பள்ளிமுனை சென். லூட்சிய விளையாட்டுக்கழக அணி வீரர் கெட்வின் தனக்குக் கிடைத்த பந்தை எதிர் அணி வீரர்களின் தடுப்பாட்டத்தையும் மீறி கொண்டு சென்று தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். பதிலுக்கு ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியினர் தமது அணிக்கான கோலை அடிக்க பல முயற்சிகளை மேற்கொண்டனர். இதன் பயனாக ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வீரன் றொக்சன் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இரண்டு அணி வீரர்களும் மேலும் தமது அணிக்கான கோலைப் பெற்றுக் கொள்வதற்காக எதிர் அணியினரின் கோல் பரப்பினை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். ஆனால் இடைவேளைவரை இரு அணியினராலும் மேலதிக கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கிய போது இரு அணிகளும் ஆட்ட வியூகங்களை மாற்றி அமைத்துக் களமிறங்கின. ஒரு கட்டத்தில் இரண்டு அணியினரும் எதிர் அணியின் கோல்பரப்பை நோக்கி முன்னேறி கோல்கள் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால் இரண்டு அணியின் பின்கள வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் கோல்கள் பெறும் சந்தர்ப்பங்கள் தடுக்கப்பட்டன. ஆட்டம் முடிவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணிவீரர் டெசில், சக வீரர் அடித்த பந்தை தலையால் முட்டி தனது அணிக்கான இரண்டாவது கோலாக வெற்றிக் கோலினை அடித்தார். ஆட்ட நேர முடிவில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. ஆட்டத்தின் சிறந்த வீரராக ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணியின் டொசில்லும், சிறந்த கோல் காப்பாளராக ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வீரர் போல்லெனின்னும் தெரிவு செய்யப்பட்டனர். (ரி-23)



*இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வியமைச்சர் த. குருகுலராஜா, வெற்றி பெற்ற அணியின் தலைவர் செறின் மற்றும் கழகத் தலைவர் கோல்டன் டெனி ஆகியோரிடம் வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார்.*

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், செப். 2

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்துக்கு முன்னைய ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23)

* * *

யாழ்ப்பாணம், செப். 2

தும்பளை நற்கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி-23,108)



இமையாணன் இளைஞர்களால் நடத்தப்பட்ட 18 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சம்பியனான அண்ணா சிலையடி இளைஞர் அணியினர். (ரி- 422)




# காலிறுதியில் சானியா, பயஸ் ஜோடிகள்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்றுவரும் அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் தொடரின் கலப்பு இரட்டையர் பிரிவின் காலிறுதிக்கு இந்திய வீரர்களான சானியாவினதும், பயஸினதும் ஜோடிகள் தகுதி பெற்றுள்ளன. அதேவேளை ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஜோகோவிச் மற்றும் ஆன்டி முர்ரே ஆகியோர் நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

தொடரின் பெண்களுக்கான இரட்டையர் பிரிவின் இரண்டாவது சுற்றில், இந்தியாவின் சானியா மிர்சா மற்றும் சிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி 6-1, 6-2 என்ற நேர் செற் கணக்கில் பிரான்சின் கரோலின் கார்சியா மற்றும் ருமேனியாவின் மோனிகா நிகுலஸ்கு ஜோடியை தோற்கடித்தது. கலப்பு இரட்டையருக்கான இரண்டாவது சுற்றில், இந்தியாவின் சானியா மிர்சா, புரூனோ சோரஸ் ஜோடி 6-2, 7-6 என்ற நேர் செற் கணக்கில் பிரிட்டனின் ஜமி முர்ரே, ஆஸ்திரேலியாவின் கேசி டெல்லாகுவா ஜோடியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது. மற்றுமொரு கலப்பு இரட்டையர் 2வது சுற்றில், இந்தியாவின் லியாண்டர் பயஸ் மற்றும் ஜிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி 6-1, 4-6, 10-4 என்ற செற் கணக்கில், ரஷ்யாவின் அலா குட்ரியவ்சேவா, பாகிஸ்தானின் குரேஷி ஜோடியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவுக்கான மூன்றாவது சுற்றில் செர்பியாவின் ஜோகோவிச், அமெரிக்காவின் சாம் குயர்ரே ஆகியோர் மோதிக் கொண்டனர். இதில் அபாரமாக ஆடிய ஜோகோவிச் 6-3, 6-2, 6-2 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு மூன்றாவது சுற்றுப் போட்டியில், பிரிட்டனின் ஆன்டி முர்ரே 6-1, 7-5, 4-6, 6-2 என்ற செற் கணக்கில் ரஷ்யாவின் ஆன்ட்ரே கஸ்னட்சோவை தோற்கடித்தார். ஏனைய மூன்றாவது சுற்றுப் போட்டிகளில், ஜப்பானின் கெய் நிஷிகோரி, கனடாவின் மிலோஸ் ராவோனிச், சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா, ஸ்பெயினின் டாமி ராபிரிடோ உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றில், அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், சக நாட்டை சேர்ந்த வாவரா லேப்செனோவுடன் மோதினர். அசத்தலாக ஆடிய நடப்பு சம்பியன் செரினா 6-3, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா 4-6, 4-6 என்ற நேர் செற் கணக்கில், செர்பியாவின் அலெக்சாண்டிரா குருனிக்கிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறினார்.

ஏனைய மூன்றாவது சுற்றுப் போட்டிகளில், இத்தாலியின் பிளவியா பெனிட்டா, கனடாவின் பவுச்சர்டு, பெலாரசின் விக்டோரியா அசரன்கா, ரஷ்யாவின் எகடரினா மகரோவா உள்ளிட்டோர் வெற்றி பெற்று, நான்காவது சுற்றுக்கு தகுதி பெற்றனர். (ரி)

# சுழற்பந்து வீச்சுக்கு செய்த தவறுகளே தோல்விக்கு காரணம் கூறுகிறார் குக்

சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதில் செய்த தவறே தோல்விகளுக்கு காரணம் என்று இங்கிலாந்து அணித்தலைவர் அலெஸ்டயர் குக் கருத்து வெளியிட்டுள்ளார். இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்தில் அடைந்த தோல்வி குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது இந்த ஆட்டத்தில் இலக்குகளை வேகமாக இழந்தமையால் அதிரடியாக விளையாட முடியவில்லை. மத்தியதர ஓவர்கள் தான் இங்கிலாந்தின் பிரதான பிரச்சினையாக இருக்கிறது. அந்த சமயத்தில் எங்களது வீரர்கள் சுழற்பந்து வீச்சை சரியான முறையில் எதிர்கொண்டு ஆடுவதில்லை. இது தான் பின்னடைவுக்கு காரணம். இந்த தொடரில் எங்களின் பெரும்பாலான இலக்குகள் சுழற் பந்து வீச்சில் தான் இழக்கப்பட்டுள்ளன. இதில் நாங்கள் முன்னேற்றம் காண வேண்டியது அவசியம். நாங்கள் நல்ல தொடக்கத்தை ஏற்படுத்தியும் 227 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தமை மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒருநாள் கிரிக்கெட்டைப் பொறுத்தவரை, வெகு விரைவில் நிலைமையை மாற்ற முடியும். அதற்கு தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவரும் பொறுப்புடன் விளையாட வேண்டும். யாராவது ஒரு வீரர் சதம் அடித்து, மற்ற வீரர்களும் கணிச[illegible] பங்களிப்பை அளிக்கும் போது, 330 ஓட்டங்களுக்கு மேல் குவித்து வெற்றி பெற முடியும். அதற்கு அணியின் முன்னணி வீரர்கள் ஓட்டங்கள் குவிக்க வேண்டியது முக்கியம் என தெரிவித்தார். (ரி)



# ரெய்னா, ராயுடுவின் வரவால் புத்துயிர் பெற்ற இந்தியா - ரகானே




ஒருநாள் தொடருக்கு தேர்வான ரெய்னா, அம்பதி ராயுடு உள்ளிட்ட வீரர்கள், இந்திய அணிக்கு புத்துயிர் தந்துள்ளனர் என இந்திய அணியின் இளம் வீரர் அஜிங்க ரகானே தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை, இந்திய அணி 1-3 என்ற கணக்கில் இழந்தது. இந்நிலையில் தற்போது நடைபெற்றுவரும் ஒருநாள் தொடருக்கான அணியில் ரெய்னா, அம்பத்தி ராயுடு, சஞ்சு சாம்சன் உள்ளிட்டோர் இடம்பிடித்தனர். இவர்களின் வரவால் இந்திய அணி புத்துயிர் பெற்று கார்டிப், நாட்டிங்காமில் நடந்த ஒருநாள் ஆட்டங்களில் அடுத்தடுத்து வெற்றி பெற்று 2-0 என்ற ரீதியில் முன்னிலை பெற்றுள்ளது.

இதுகுறித்து ரகானே கூறுகையில்: - ஒருநாள் தொடருக்கு மட்டும் தேர்வான ரெய்னா, அம்பத்தி ராயுடு உள்ளிட்ட புதிய வீரர்களின் வரவால் இந்திய அணி புத்துணர்ச்சி பெற்றுள்ளது. டெஸ்ட் தொடரில் இந்தியாவின் களத்தடுப்பு படுமோசமாக இருந்தது. ஆனால் ஒருநாள் ஆட்டங்களில், களத்தடுப்பில் அசத்தி வருகின்றோம். இது மகிழ்ச்சியாக உள்ளது. டெஸ்ட் தொடரில் கண்ட மோசமான தோல்வி, எங்களை வெகுவாக பாதித்தது. பின், ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொண்டு, ஒருநாள் தொடரில் கவனம் செலுத்தினோம். இதற்கு தற்போது நல்ல பலன் கிடைத்துள்ளது. முதல் ஆட்டம் மழையால் கைவிடப்பட, கார்டிப்பில் நடந்த 2வது போட்டியில் வெற்றி பெற்று, தொடரை வெற்றியுடன் ஆரம்பித்தோம். பின்னர், மூன்றாவது ஆட்டத்திலும் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றியைத் தக்கவைத்துக் கொண்டோம்.

காயம் காரணமாக ரோகித் சர்மா விலகியதால் மீண்டும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்க வாய்ப்பு கிடைத்ததில் மகிழ்ச்சி. நான்காவது வீரராக களமிறங்கி, திடீரென ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக விளையாடுவது எளிதான காரியமல்ல. ஆனால், ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக விளையாடிய அனுபவம் நிறைய இருப்பதால், அது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. பந்துகளை சந்திப்பதில் சிறிய மாற்றம் செய்தால் போதுமானது. விராட் கோஹ்லி, சிகார் தவான் விரைவில் எழுச்சி காண்பார்கள் என்று அவர் கூறினார். (ரி)

# உலக சம்பியனாக ஸ்பெயினின் கரோலினா




டென்மார்க்கில் நடைபெற்ற உலகை பூப்பந்தாட்ட சம்பியன் கிண்ணத் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் நாட்டு வீராங்கனை கரோலினா மரின் சம்பியன் பட்டம் வென்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான இறுதிப் போட்டியில் தரவரிசையில் முதலிடத்திலுள்ள வீராங்கனையான சீனாவின் லிஊவருயியை எதிர்கொண்ட கரோலின்னா மரின் 17- 21 என்ற கணக்கில் முதல் செற்றை இழந்து பின்தங்கினார். அடுத்த செற்றில் அதிரடியாக விளையாடிய அவர் 21- 17 என வென்று பதிலடி கொடுத்து போட்டியை சமநிலைப்படுத்தினார். இதைத் தொடர்ந்து, தங்கப் பதக்கம் வெல்லப் போகும் வீராங்கனையைத் தீர்மானிப்பதற்கான கடைசி செற் ஆட்டம் நடைபெற்றது. அனல் பறந்த இறுதி செற்றில் இரு வீராங்கனைகளும் சரிசமனான பலத்துடன் மோதிக்கொள்ள கடும் போராட்டத்தின் மத்தியில் கரோலினா மரின் 21- 18 என்ற கணக்கில் வெற்றி பெற்றார்.

முதல் செற்றை இழந்தாலும், இறுதி இரு செற்களிலும் அசத்தலாக ஆடிய கரோலினா மரின் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று தங்கப்பதக்கத்தை வென்றார். இந்தியாவின் பி.வி.சிந்து, ஜப்பானின் மினாட்சு மிடானி ஆகியோர் வெண்கலப் பதக்கத்தை வென்றனர். (ரி)

# இந்தியாவை வீழ்த்த இங்கிலாந்து தயார்

டெஸ்ட் தொடரை வென்று, ஒருநாள் தொடரில் சொதப்பி வரும் இங்கிலாந்து அணி ரி- 20 ஆட்டத்தில் இந்தியாவை வீழ்த்துவதற்காக தயாரகியுள்ளது. பர்மிங்காமில் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள இவ் ஆட்டத்துக்கான 14 பேர் கொண்ட இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவுக்கு எதிரான ஒரே ஒரு ரி- 20 போட்டியில் விளையாடும் இங்கிலாந்து அணியில் ரிம் பிரஸ்னன் மற்றும் ரவி போபரா இடம் பிடித்தனர்.

இயன் மோர்கனை அணித்தலைவராகக் கொண்ட அணியில், சமீபத்தில் முடிந்த ஏ பிரிவு ஆட்டங்களில், யார்க்சயர் அணிக்காக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வேகப்பந்துவீச்சாளர் ரிம் பிரஸ்னன் மீண்டும் தேசிய அணியில் விளையாடும் வாய்ப்பை பெற்றார். இவர் கடந்த மார்ச் மாதம் நெதர்லாந்துக்கு எதிரான உலக கோப்பை ஆட்டத்தில் இறுதியாக விளையாடினார். இதேபோல, இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து நீக்கப்பட்ட ரவி போபரா, ரி- 20 அணியில் இடம் பிடித்தார். கவுன்டி போட்டியில் சிறப்பாக செயல்பட்ட ஜேம்ஸ் ரெய்லர், சர்வதேச ரி- 20 அரங்கிற்கு அறிமுக வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள இங்கிலாந்து அணி விபரம்:- இயன் மோர்கன் (அணித்தலைவர்), அலெக்ஸ் ஹேல்ஸ், ஜாசன் ராய், ரவி போபரா, ஜோ ரூட், ஜோஸ்ஸ் பட்லர் (இலக்கு காப்பாளர்), ஜேம்ஸ் ரெய்லர், மொயீன் அலி, கிறிஸ் வோக்ஸ், கிறிஸ் ஜோர்தான், ரிம் பிரஸ்னன், ஜேம்ஸ் டிரட்வெல், ஸ்டீவன் பின், ஹாரி குர்னே. (ரி)

# ஒருநாள் ஆட்ட வெற்றிகளுக்கு தரவரிசையில் முதலிடம் பரிசு

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி மோசமாக ஆடி டெஸ்ட் தொடரை இழந்திருந்தாலும் தற்போது நடைபெற்றுவரும் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் அபாரமாக விளையாடி வருகிறது. தொடரின் இரண்டு ஆட்டங்களை வெற்றி பெற்றதன் மூலம் ஐ.சி.சி. ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

தரவரிசையில் இரண்டாம் இடத்தில் இருந்த இந்தியா, இங்கிலாந்துக்கெதிரான தொடரில் சிறப்பாக ஆடி வருகின்ற அதேசமயம், சிம்பாப்வேயில் ஆஸ்திரேலிய அணி முத்த ரப்பு தொடரில் சிம்பாப்வே அணி யிடம் 31 ஆண்டுகளுக்கு பிறகு தோல்வி அடைந்தும், தென்னாபிரிக்காவுடன் 7 இலக்குகளாலும் தோல்வியடைந்திருந்தது. இதன் எதிரொலியாக முதலிடத்தில் இருந்து வந்த ஆஸ்திரேலிய அணியின் இடத்தை இந்தியா கைப்பற்றியுள் ளது.

ஐ.சி.சியினால் வெளியிடப்பட்டுள்ள புதிய தரவரிசைப் பட்டியலில் இந்தியா 114 புள்ளிகளுடன் முதலிடத்திலும், தென்னாபிரிக்கா 113 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், இலங்கை 111 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. முதலிடத்தில் இருந்த ஆஸ்திரேலிய அணி நான்காம் இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கைப்பற்றிய முதலிடத்தை இந்தியா தக்கவைத்து கொள்ள வேண்டுமெனில் இங்கிலாந்துக்கு எதிராக உள்ள ஏனைய இரு போட்டிகளிலும் வெற்றி பெற வேண்டும். அதேவேளையில், தென்னாபிரிக்காவை ஆஸ்திரேலியா அணி வெற்றி பெறவேண்டும். (ரி)

# சூதாட்ட வழக்கை முடிக்க உச்சநீதிமன்றம் உத்தரவு

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பான விசாரணை நடத்த மேலும் இரண்டு மாதங்கள் காலஅவகாசம் நீட்டிக்கப்படுகிறது என்றும் அந்த இரண்டு மாதங்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் கடந்த ஆண்டு சூதாட்டம் நடைபெற்றதாக புகார் எழுந்தது. இதுதொடர்பாக ராஜஸ்தான் அணியின் ஸ்ரீசாந்த் உள்ளிட்ட மூன்று வீரர்கள் அதிரடியாக கைது செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் சென்னை அணியின் உரிமையாளரான ஸ்ரீனிவாசனின் உறவினர் குருநாத் மெய்யப்பன் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். மேலும், ஸ்ரீனிவாசன் மற்றும் 12 வீரர்கள் மீது குற்றச்சாட்டு எழுந்தது. இந்த குற்றச்சாட்டை விசாரிக்க நீதிபதி முகுல் முத்கல் தலைமையில் விசாரணை குழு அமைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த வழக்கு விசாரணை தொடர்பான இடைக்கால அறிக்கையில் தன்னைப் பற்றி விவரம் உள்ளதா? என்று கேட்டு ஸ்ரீனிவாசன் மனுத்தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது. விசாரணையின் போது முகுல் முத்கல் குழு விசாரணை நடத்த மேலும் இரண்டு மாதங்கள் காலஅவகாசம் நீட்டிக்கப்படுகிறது என்றும் அந்த இரண்டு மாதங்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர். விசாரணை முடிவடையும் முன் இடைக்கால அறிக்கை விவரத்தைக் கூற முடியாது என்றும் தெரிவித்தனர். (ரி)

# பாகிஸ்தானுக்கு உலகக்கிண்ணம் சந்தேகம்




இலங்கை அணியிடம் தொடரைப் பறிகொடுத்த பாகிஸ்தான் அணி எதிர்வரும் உலகக்கிண்ணத் தொடரை வெல்வது கேள்விக்குறியாக அமைந்து விட்டதாக முன்னாள் வீரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் விளையாடியது. இதில் டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கிலும் பறிகொடுத்துள்ளது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கு இன்னும் சில மாதங்கள் மட்டுமே உள்ள நிலையில், இந்த தோல்விகள் உலகக்கிண்ண போட்டிகளை பாதிக்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது பற்றி முன்னாள் அணித்தலைவர் முகமது யூசுப் கூறுகையில், தற்போது அணித்தலைவராக உள்ள மிஸ்பா உல் ஹக் உலகக்கிண்ண ஆட்டங்களுக்கு சிறந்த அணித் தலைவராக இருப்பார் என்ற நம்பிக்கை இல்லை. அவரிடம் எந்த முன்னேற்றமும் இல்லை. உலகக் கிண்ண போட்டிகளில் அப்ரிடி சிறந்த அணித்தலைவராக இருப்பார் என்பது என்னுடைய தீர்வாக உள்ளது என்று கூறியுள்ளார். (ரி)

# ஐ.எஸ்.எல் போட்டியில் ஆட ஆர்வம் - டெல் பியரோ




இந்தியன் சூப்பர் லீக் கால்பந்து போட்டியில் பங்கேற்பதை ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக இத்தாலி வீரர் அலெசண்ட்ரோ டெல் பியரோ தெரிவித்துள்ளார்

இத்தாலி, ஜுவன்டெஸ் கிளப் என இரு அணிகள் சார்பிலும் முத்திரை பதித்துள்ள பியரோவை, டெல்லி அணி நட்சத்திர வீரராக அறிவித்துள்ளது. இவர் முதலாவது ஐ.எஸ்.எல் தொடரில் டில்லி டைனமோஸ் அணி சார்பாக விளையாடவுள்ளார்.

2006 உலகக்கோப்பை கால்பந்து போட்டியில் அரையிறுதி, இறுதி ஆட்டங்களில் கோல் அடித்து புகழ்பெற்ற பியோரோ, ஐ.எஸ்.எல். தொடரில் பங்கேற்பது குறித்து கூறியதாவது : சாகசமான இந்த ஐ.எஸ்.எல் தொடரில் பங்கேற்பதை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். இந்தியாவில், குறிப்பாக தலைநகரைச் சேர்ந்த டில்லி அணி சார்பில் ஆட இருப்பது உற்சாகம் அளிக்கிறது. விரைவில் அணியின் பயிற்சியாளர், சக வீரர்களுடன் இணைந்து பயிற்சி மேற்கொள்ள உள்ளேன். டில்லி மக்கள் எங்கள் அணிக்கு ஆதரவளிப்பர் என்ற நம்பிக்கை உள்ளது என்றார்.

இருபது ஆண்டுகள் கால்பந்து உலகில் ஆதிக்கம் செலுத்தும் பியரோ, சம்பியன்ஸ் லீக் போட்டியில் அதிக கோல்கள் அடித்த பத்தாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். அத்தோடு, சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு வெளியிட்ட, சம காலத்து தலைசிறந்த 100 கால்பந்து வீரர்கள் பட்டியலிலும் அவர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# கிளார்க் அதிருப்தி

சிம்பாப்வேக்கு எதிரான ஆட்டத்தில் ஸ்டீவன் சிமித் தெரிவு செய்யப்படாமை தொடர்பாக கிளார்க் ஆஸ்திரேலிய தேர்வுக்குழு மீது அதிருப்தி அடைந்துள்ளார். சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி அதிர்ச்சிகரமாக 3 இலக்கு களால் தோற்றதுடன், 31 வருடங்களின் பின் அந்த அணியிடம் தோல்வி யடைந்துள்ளது. இந்த ஆட்டத்தில் 11 பேர் கொண்ட அணியில் சகல துறை வீரர் ஸ்டீவன் சிமித் இடம் பெறவில்லை. தேர்வு குழுவி னரின் இந்த முடிவால் ஆஸ்திரேலிய அணித்தலைவர் கிளார்க் அதிருப்தி அடைந்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது:- மத்திய வரிசையில் சிமித்தை தவறவிட்டோம். சுழற்பந்தை எதிர் கொள்வதில் அவர் சிறந்த வீரர். அவர் அணியில் இடம் பெறாதது ஏமாற்றம் அளித்தது. தேர்வு குழுவினரின் முடிவால் தான் அவர் நீக்கப்பட்டார். தேர்வுக் குழுவின் இந்த முடிவு சரியானது அல்ல என்று கிளார்க் கூறியுள்ளார். (ரி)

## மரண அறிவித்தல்



## கந்தையா கோபாலபிள்ளை

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கோபாலபிள்ளை நேற்று (01.09.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், புவனேஸ்வரியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சின்னச்சாமி, செல்வராசா மற்றும் கனகரத்தினம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கருணாகரன், திலகவதி, இந்திராணி (டென்மார்க்), மோகனேஸ்வரி, சிவாகரன் (ஜேர்மனி), திருக்குமரன், கமலதாஸ் ஆகியோரின் அன்புக் தந்தையும், அழகேசன், சிறீராகவன் (டென்மார்க்), சுமதி, சோபிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், கௌதமன், கௌதமி, கோபிகா (டென்மார்க்), ... (டென்மார்க்), காருண்ஜா, சௌமியா (ஜேர்மனி) லதுசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2014) புதன்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம். (51602) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

## 75 பேர் குருதிக்கொடை

கல்முனை வடக்கு ஆதார மருத்துவ மனையின் இரத்த வங்கித் தேவையை கருத்தில்கொண்டு பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற குருதிக் கொடை 75 பேர் கலந்து கொண்டு குருதிக் கொடைவழங்கினர்.

சர்வதேச அரிமா கழகத்தின 306 சி 2 மாவட்டத்தின் கல்முனை நகர அரிமா கழகமும், பாண்டிருப்பு விளை யாட்டுக்கழகமும் இணைந்து ஏற் பாடு செய்திருந்த குருதிக் கொடை முகாம் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை நடை பெற்றது.

லயன் எஸ்.நந்தகுமார் தலைமை யில் நடைபெற்ற இந்த முகாமில், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன, சர்வ தேச அரிமா கழகத்தின் 306 சி 2 மாவட்டத்தின் ஆளுநர் லயன் ஈ.டபிள்யூ. எ.ஹரிச் சந்திர, மாவட்டத் தின் முன் னாள் ஆளுநர் லயன் லால் மென வல்கே, ஆளுநர் சபையின் செயலாளர் லயன் பெனற் கம்லத், ஆளுநர் சபையின் பிரதிச் செயலாளர் ரசிக எஸ் பிரியங்க உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ)

## யானைகளின் தொல்லை சம்மாந்துறையில் அதிகரிப்பு

சம்மாந்துறை பிரதேசத்தின் நெல்லுப் பிடி சந்தி மற்றும் அதற்கு அண்மையில் உள்ள பகுதிகளில் உள்ள அரிசி ஆலை களுக்குள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உள் நுழைந்த யானைகள், அரிசி ஆலைகளின் சுற்று மதில்கள் மற்றும் சேமித்து வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகளை சேதப்படுத்தியதுடன், அங்கு பணிபுரிகின்ற ஊழியர்களையும் தாக்க முட்பட்டன.

சில தினங்களாக சம்மாந்துறை பிரதேசத் தில் உள்ள சில கிராமங்களிலும் குடிருப் புக்களிலும் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக அந்தப் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இதற்கான தீர்வை பெற்றுத்தர வேண் டும் என்று அரிசி ஆலை உரிமையாளர் களும் குடிருப்பாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ)

## காத்தான்குடி மையவாடிகளை பராமரிக்க நகரசபை தீர்மானம்

மட்டக்களப்பு, செப்.2

காத்தான்குடியிலுள்ள மைய வாடி களை காத்தான்குடி நகரசபை பராமரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக நகர சபைத் தலை வர் எஸ்.எச். அஸ்வர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

காத்தான்குடி பிரதேசத்தில் காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும்மா பள்ளிவாசல் மையவாடி, காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்மா பள்ளிவாசல் மைய வாடி, காத்தான்குடி ஜாமியுழ் ழாபிரீன் ஜும்மா பள்ளிவாசல் மைய வாடி, புதிய காத்தான்குடி பதுறியா ஜும்மா பள்ளிவாசல் மையவாடி, புதிய காத்தான் குடி பெரிய ஜும்மா பள்ளிவாசல் மைய வாடி, புதிய காத்தான்குடி நூறா னிய்யா ஜும்மா பள்ளிவாசல் மையவாடி ஆகி யவை உள்ளன. மேற்படி 6 மையவாடிக ளையும் பராமரிக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேற்படி மையவாடிகள் பள்ளிவாசல்களுக்கு இருக்கின்ற போதிலும், அவற்றைப் பரா மரிக்கும் வேலையை காத்தான்குடி நகர சபை மேற்கொள்ளும் -என்றார். (வ)

## கொஞ்சம்........

### வாலிபத்தில் வயோதிபம்

கோயிலுக்குச் சென்றால் வழிபடுவது, பாத்திரபண்டங்கள் வாங்குவது மட்டுமல்ல, விடுப்பு விசாரணைகளுக்கும்தான் என்பதில் எங்களைக் கேட்டுத்தான். கோயில் வீதியில் வேப்பமர நிழலில் இருந்த பெண் தனக்கு அருகில் இருந்த பெண்ணோடு கதைத்துச் சலித்த நிலையில் "நீ போனமுறை லண்டனிலிருந்து வந்த போது உன்ரை வெள்ளைக்கார மருமேள் பிள்ளைத்தாச்சி எண்டனி, என்ன பிள்ளையாம்" என்கிறார். லண்டன்காரிக்கு முகமெல்லாம் ஓடிக்கருக்க "கிழடுக்கு நல்ல ஞாபகசக்தி" என முணுமுணுத்தவராக " ஆம்பிளைப் பிள்ளை. மூண்டு மாதமாச்சு" என்று விட்டேத்தியாகப் பதிலளிக்கிறார். கேள்வி கேட்ட பெண்மணி "முருகா"என கோபுரத்தைப் பார்த்துக் கை கூப்ப இவவுக்கு முகத்தில் ஈயும் ஆடவில்லை.

இவரது இந்தச் சலிப்புக்குக் காரணம் குழந்தை தகப்பனின் நிறத்தில் அல்லாமல் உரிச்சுப் படைச்சு தாயைப் போல் வெளிறல் வெள்ளையாகப் பிறந்து விட்டதுதான். அங்குள்ளவர்களெல்லாம் பொதுவாக கடும் வெள்ளையை விரும்புவது குறைவாம். உல்லாசப் பயணிகளில் அதிகமானோர் உடலில் ஓரிரண்டு துண்டுகளைக் கட்டிக் கொண்டு அனல் பறக்கும் வெயிலில் 'சண்பாத்' என சூரியக்குளியலில் வெள்ளைத் தோலைக் கொஞ்சம் சுட்டுச் சிவப்பாக்கிக் கொள்கிறார்கள். தமது நாட்டுக்குப் போய் சில நாள்களில் அவர்களது உடல் பழைய வெள்ளையாகி விடுவதைக் கண்டு கவலைப்படும் அளவுக்கு அங்கு வெள்ளைக்கு பிரியம் குறைந்து வருகிறதாம்.

இங்குள்ளவர்களோ வெள்ளைத்தோல் மோகத்தினால் கிறீம், ஊசி என்றும் செய்யாத வேலைகளையெல்லாம் செய்து கொள்கிறார்கள் - சிலர் உயிரையே இழக்கிறார்கள். எருது, கிடாய், நாய், பூனை என்பனவற்றில் மட்டும் கருப்புத்தான் நல்லது என்பவர்கள் மணமகள் தேவை விளம்பரத்தில் மட்டும் வெள்ளை - சிவப்பைத் தேடுகின்றனர். நாங்கள் பூசும் தலைச்சாயத்தின் பின்னே வழுக்கையை மறைக்கும் "விக்"கும். உலாவரும் பலரக பற்பசைகளின் பின்னே பொக்கை வாய்க்கான கட்டுப் பற்களும் ஏற்கனவே எங்களுடன் உறவாடக் காத்திருக்கின்றன. இந்த நிலையில் மேனி மினுக்கும் ஆர்வம் வாலிபத்தில் வயோதிபத்தை அடையவே வழிகாட்டிவிடலாம்.

செல்வவேலாயுதம்.

## வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ். மாநகர சபை எல் லைக்குள் அமைந்த அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது. இன்று காலை 9 மணி தொடக்கம் முற் பகல் 11 மணி வரை அரியாலை ஏ.வி. வீதியிலுள்ள அருணோதய சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை அரியாலை திருமகள் சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்க ளுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும். வளர்ப்பு நாய் களுக்கு உரிமக் கட்டணமாக 20 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்று யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (வ)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
# VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

My No. :Np/14/41(15)/01/Tender/2014 Date: 01.09.2014.

## விலைக்கேள்விக்கான கோருதல்
### பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டம்-2014

01 தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், யாழ்ப்பாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிட மிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை திறந்த போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கீழ்க்காட் டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02 கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள் ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வேலைகளுக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.

03 ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (தொலைபேசி: 0212240017, மின்னஞ்சல் vspsch@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை, 02.09.2014ஆம் திகதி தொடக்கம் 22.09.2014ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

04 ஆர்வமுள்ள தகைமையுடைய கேள்விதாரர்களினால் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி படிவத்தினை **தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்** (தொலைபேசி: 0213202277, மின்னஞ்சல் chairmanvsps@gmail.com web:- vsps.lk) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச்சமர்ப்பித்து 02.09.2014 முதல் 22.09.2014 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

05 விலைக்கேள்விகள் 23.09.2014ஆம் திகதியன்று 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய வற்றை பூரணப்படுத்தி தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் எனும் முக வரிக்கு உரிய காலத்திற்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி விவரத் தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும் நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் 23.09.2014 ஆம் திகதியன்று 2.00 மணிக்கு விலைக் கேள்விகள் திறக்கப்படும்.

06 கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 10.09.2014 அன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

07 கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். குறித்த தொகை அலுவல கத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

| இல | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | சுன்னாகம் மத்திய சந்தை தெற்கு வீதி வடிகால் புனரமைப்பு- கட்டம் 2 NP/14/41(15)/01/02/PRNP/01/2014 | 0.903 | ஒரு மாதம் | M7/C8 | 10,000.00 |

தி.பிரகாஷ்,
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(C/15650)(10.6.3)



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கோகிலா கேதீஸ்வரன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி கண்ணகாதேவி
உருத்திரசுந்தரம்



அவர்கள் 29.08.2014இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்ப துடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி. யா/கைதடி குருசாமி வித்தியாலயச் சமூகம்

(51589)(7.6.3)



## பெயர் மாற்றம்

365/23, வேப்பங்குளம், வவுனியா எனும் முகவரியுடைய சின்னவன் பாலன் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சின்னவன் பாலசிங்கம் எனப் பெயர்மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன். சி.பாலசிங்கம் (51588) (7.6.3)



## பணிப்பெண் தேவை

இருவர் உள்ள வீட்டில் தங்கி நின்று பணிபுரிய ஆரோக்கியமுள்ள பணிப்பெண் உடனடியாகத் தேவை. (51581) (4.6.3)

தொ.பே: 077 516 7472, 021 226 0277



## இடமாற்றத்தை முன்னிட்டு.....



யாழ் மாநகரம் காணாத மிக மிக மலிவு விற்பனை!
இருப்பகற்றலை முன்னிட்டு
சில தினங்கள் மட்டுமே.

- பட்டு சாறிகள்
- சீதுன் சாறிகள்
- ஸ்ரோன் சாறிகள்
- சல்வார்கள்
- இந்தியன் றொப்
- சேட்
- ஜீன்ஸ்

மேலும் அனைத்து ஆடைகள் மற்றும் பான்சி பொருள்கள் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் அனைத்தும் குறித்த விலையிலிருந்து பாதி விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.



கனடா ஜெயசாயி சுப்பர் சென்ரர்
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393

(50542)(7.6.3)



## சீமெட் வைத்திய பரிசோதனை ஆய்வுகூடசேவை
## CEYMED HOSPITAL SERVICES (Pvt) Ltd.

CEYMED

தற்போது உங்களுக்கான வைத்திய ஆலோசனை சேவை ஆரம்பம்
மருத்துவ சேவை / ஆய்வுக்கூட சேவை / E.C.G / மருந்து விநியோகம்

கொழும்பிலிருந்து எங்களிடம் வருகை தரும் விசேட கண் வைத்திய நிபுணர் (Eye Surgeon) — வியாழன் மட்டும் பி.ப 4.00

பொது வைத்திய நிபுணர்கள் (PHYSICIANS) — திங்கள் முதல் வெள்ளி பி.ப 4.00 மணி, சனி ஞாயிறு மதியம் 12.00 மணி

இருதய வைத்திய நிபுணர் (CARDIOLOGIST) — சனி பி.ப 1.30 மணி

தோல் வைத்திய நிபுணர் (DERMATOLOGY)
சத்திரசிகிச்சை நிபுணர்கள் (GENARAL SURGEONS) — திங்கள் முதல் வெள்ளி பி.ப 4.00 மணி, சனி ஞாயிறு மதியம் 12.00 மணி

காது வைத்திய நிபுணர் (ENT SURGEON) — சனி மாலை 4.00 மணி

மூட்டு வாதவியல் வைத்திய நிபுணர் (RHEUMATOLOGYS) — புதன் வியாழன் மாலை 4.00 மணி

உங்கள் பதிவுகளுக்கு: 021 221 9777
550, HOSPITAL ROAD, JAFFNA.

(C/16198)(10.6.3)

தொடர்ச்சிகள்

## யாழ்ப்பாணத்தில்

யிக்கப்பட்ட விலைகள் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசிகளை நியாயமான விலையில் விற்பனை செய்யவேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.
இதன்போது, அரிசி விலை தொடர்பில் நுகர்வோர் பாதிப்பை எதிர்கொள்ளாத வகையில் வர்த்தகர்கள் உரிய விலையில் அரிசியை விற்பனை செய்யவேண்டும்.
விற்பனை செய்யப்படும் சகல அரிசிகளின் விலைகள் விற்பனை நிலையங்களுக்கு முன்னால் நுகர்வோர்களுக்கு தெரியக்கூடிய வகையில் காட்சிப்படுத்தப்படவேண்டும்.
இன்று செவ்வாய்க்கிழமை முதல் வர்த்தகர்கள் இதனை நடைமுறைப்படுத்த வேண்டும். இதனை மீறும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாவனையாளர் அதிகார சபையின் இணைப்பாளர் வசந்தசேகரன் தெரிவித்தார்.
இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்கள் இறக்குமதி செய்யப்படும் தரமான அரிசிகளைக் கொள்வனவுக்கு ஏற்ற வகையில் நியாயமான விலையில் விற்பனை செய்யுமாறு யாழ். வணிகர் கழக தலைவர் இ.ஜெயசேகரமும் தெரிவித்தார்.
அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரிசி வகைகளின் கட்டுப்பாட்டு விலைகளுக்கு ஏற்ப சதொச நிறுவனத்திடம் கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள் அவற்றை விற்கும் போது சிறிய இலாபத்துடனும் போக்குவரத்து செலவுடனும், இறக்குமதி செய்யப்படுகின்ற உயர்தர அரிசிகளை கொள்வனவுக்கு ஏற்ற வகையில் நியாயமான விலையில் விற்பனை செய்யவேண்டும்.
நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் வரை சகல அரிசி விற்பனையாளர்களும் இதனைக் கருத்தில் கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.
அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கொள்முதல் செய்யும் அரிசியை சந்தையில் விற்பனை செய்யமுடியாது. தரமான அரிசியும் கிடைக்கப்பெறுவதில்லை. வெள்ளை நாடு அரிசி எனக்கூறி கோரா அரிசி தரப்படுகிறது. விலைக்கட்டுப்பாட்டுக்கு ஏற்ப இந்தியாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.
உள்ளூரில் கொள்முதல் செய்யப்படுகின்ற ஆட்டக்காரி இன அரிசியின் மதிப்புக் கூட அந்த அரிசிகளில் இல்லை எனவும் தெரிவித்தனர்.(த-14-ரி)

## புலிகளைத்

தலை சிறந்த தலைவர் எனது சகோதரரும் இந்த நாட்டின் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷவே.
அவரின் தன்னாதிக்கமும் நம்பிக்கையும் தைரியமும் இந்த நாட்டைதீவிரவாதத்தில் இருந்து பாதுகாத்துள்ளது. இந்த நாட்டை பல தலை வர்கள் ஆட்சி செய்துள்ளனர். எனினும் அவர்களால் தீவிரவாதத்துக்கு அடிபணிந்து செல்ல முடிந்ததே தவிர எவரும் தீவிரவாதிகளை எதிர்க்கவில்லை.
எனினும் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி உருவாகியதைத் தொடர்ந்து எம்மை சந்தித்த உள்நாட்டு தலைவர்களும் சர்வதேச தலைவர்களும் போரைமுடிவுக்குகொண்டு வர முடியாது. இணங்கி செயற்பட வேண்டுமென்றே தெரிவித்தனர். இந்தியா உட்பட சகலரும் விடுதலைப் புலிகளைப் பாதுகாக்கவே செயற்பட்டனர். எனினும் எமது இலக்கும் நோக்கமும் ஒன்றாகவே இருந்தது.
எதிர்காலத்தில் தலை சிறந்த சமூகத்தினையும் அபிவிருத்தியினையும் அடைய வேண்டும் எனும் ஒரே நோக்கத்தில் தொடர்ந்தும் நாம் செயற்படுவோம். மேலும் நாட்டைப் பாதுகாப்பதிலும் சமூகத்திடையே சேவைகளை செய்வதிலும் இராணுவத்தின் பங்கு இருக்க வேண்டும் என பல தரப்புகளில் இருந்தும் வேண்டுகோள் விடுக்கின்றனர். ஒரு சிலர் இராணுவத்தை எதிர்க்கின்றனர். அவர்கள் எதிர் காலத்தில் அவர்களின் பாதுகாப்புக்கும் உதவிக்கும் இராணுவம் தேவை என்பதை உணர்ந்து கொள்வார்கள்"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## அச்சுவேலி

வாகனத்தை தீ மூட்டி முற்றாக எரித்தனர்.
மேற்படி சம்பவம் தொடர்பாக நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு விசாரணைக்கு வருமாறு 6 பேரின் பெயரைக் குறிப்பிட்டுச் சிவில் உடையில் சென்ற இரண்டு பொலிஸார் துண்டு ஒன்றை சம்பவம் நடைபெற்ற கிராமத்தின் சனசமூக தலைவரிடம் கையளித்திருந்தனர். குறித்த ஆறு பேரையும் விசாரிக்க வேண்டாம் எங்கள் எல்லோரையும் விசாரியுங்கள், 'எங்கள் பிள்ளையைப் பலி எடுத்துவிட்டு இளைஞர்களை விசாரணைக்கு அழைப்பதா' என்று கோஷம் எழுப்பி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
அச்சுவேலி மத்திய கல்லூரிக்கு முன்பாக ஒன்றுகூடிய பொது மக்கள் அங்கிருந்து ஊர்வலமாக நடந்துசென்று பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக கூடி நின்று தமது கோரிக்கையை வலியுறுத்தினர்.
பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வெளியே சென்றமையினால் அவர் வரும் வரை திரும்பமாட்டோம் எனக் கூறி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அவர்கள் அமர்ந்து கொண்டனர். ஆண்களும் பெண்களுமாகத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் பெண்கள் கைக் குழந்தைகளுடன் திரண்டிருந்தனர்.
பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யாரையும் விசாரணைக்கு வருமாறு குறிப்பு அனுப்பவில்லை என அங்கிருந்த பொலிஸார் கூறியபோது, விசாரணைக்கு வருமாறு குறிப்பினை கையளித்த தமிழ் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட இருவரின் பெயரையும் மக்கள் அங்கு வெளிப்படை யாகத் தெரிவித்த னர்.
வெளியே சென்றிருந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அங்கு வந்து நாளை (இன்று) முற்பகல் 11 மணிக்கு கிராமத் துக்கு நேரில் பயணம் செய்து மக்களின் கோரிக்கையை நேரில் கேட்டறிவதோடு உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் உறுதியளித்ததை அடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கலைந்து சென்றனர். (த-11)

## பனங்கட்டி

நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது சங்கத்தினர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அதனையடுத்துப் பனங்கட்டி தயாரிப்புக்கு உரம் பயன்படுத்திய குற்றத்துக்காக 5 ஆயிரம் ரூபாவும்; அவற்றை அனுமதியின்றித் தயாரித்த குற்றத்துக்காக ஆயிரம் ரூபாவும், அவற்றினது விளம்பர அட்டையில் (லேபிளில்) தயாரிப்பில் பயன்படுத்தப்படும் சேர்மானங்கள் தொடர்பில் குறிப்பிடாத குற்றத்துக்காக ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.
அத்துடன் விற்பனை செய்வதற்காக அனுப்பப்பட்ட பனங்கட்டிகளை மீள எடுத்து அவற்றைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களிடம் ஒப்படைக்குமாறும், பனை வெல்லம் தயாரிப்பது தொடர்பான சகல விடயங்களையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கவேண்டும் என்றும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எந்த நேரத்திலும் அங்கு பரிசோதனை மேற்கொள்ள அனுமதிக்கவேண்டும் என்றும், அவர் அறிவிக்கும் நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.
குறித்த நிறுவனத்தை மீளத் திறக்க முடியும் என்றும் அது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எதிர்வரும் 15 ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்றும் நீதிமன்று பணித்தது. (த-4)

## தமிழரசு

புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணிக்கான தெரிவும் இடம்பெறவுள்ளது.
அன்று மாலை 2 மணியளவில் தமிழரசுக் கட்சியின் இளைஞரணி மாநாடு நடத்தப்படவுள்ளது. 7 ஆம் திகதி கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு புதிய தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## வவுனியா

பெயரில் வவுனியாவைச் சேர்ந்த குறித்த மாணவன் அந்த முகப்புத்தகத்தை இயக்கி வந்துள்ளான். அவன் பாடசாலை மாணவனாக உள்ளதால் அவனுக்குப் பின் புலமாக யாரோ உள்ளனர் என்று பொலிஸார் உறுதியாக நம்புகிறனர்.
அரசியல்வாதிகள், மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் மிகமோசமாக விமர்சித்து முகப்புத்தகத்தில் கருத்துக்கள், படங்கள் பிரசுரித்து வந்துள்ளான் அவன். மற்றையவர்கள் தமது முகப்புத்தகத்தில் இடும் கருத்துக்கள் மற்றும் படங்களையும் குறித்த மாணவன் பகிர்ந்தும் வந்துள்ளான் என்று பொலிஸார் மேலும் கூறினர். (த-4-402)

### விற்பனைக்கு

4 மாதங்கள் நிரம்பிய ஜேர்மன் செப்பேட் பெண் நாய்க் குட்டிகள் ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் தேக்கு மரங்களும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 021 320 4044 (51597)

### திருமண சேவை

பொறியியலாளர்கள், மருத்துவர்கள், வங்கியாளர்கள், MSc, BSc, BCom, B.A, HNDA பட்டதாரிகள், வர்த்தகர்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகங்கள் பலவும் எம்மிடம் உள்ளன.
உங்கள் தெரிவுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும்.
"சிவா திருமண சேவை"
100, அரசடி வீதி, கந்தர்மடம்.
(யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியடி)
077 899 6281 (51596)(7.6.3)

### வேலையாள்கள் தேவை

யாழ். நகரிலுள்ள மொத்த, சில்லறை கருவாட்டுக் கடைக்கு வேலை ஆள்கள் தேவை.
தொடர்பு: (51598) (10)
077 230 6390, 077 116 6090

2 மணித்தியாலத்தில்
### கணினி திருத்தம்
உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்
0779086737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் பதில் விசர்நாய்கடி தடுப்பு மருந்து ஏற்றுநராக கடமையாற்றும்
ஜெ.கவிதாசன் அவர்களின் அன்புத் தாய்
### திருமதி ஜெகதீஸ்வரி ஜெகராசசிங்கம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.
பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்
யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
யாழ்ப்பாணம்.
(ƒ/15651) (10.6)

## மரண அறிவித்தல்

### திருமதி லதாதேவி அழகரத்தினம்




கேசரி வீதி, தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லதாதேவி அழகரத்தினம் 01.09.2014 திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா- மாணிக்கம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு- செல்லம்மா தம்பதியரின் மருமகளும், அழகரத்தினத்தின் அன்பு மனைவியும், தினேஷ், திவ்வியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவளகாந்தனின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.09.2014) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவடி.
தகவல்: குடும்பத்தினர்.
(51593)(6.4.3)

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் தனபாலசிங்கம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், மகிழடி வீதி, கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் தனபாலசிங்கம் கடந்த (30.08.2014) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், தேவசேனம்பாள் (தேவி) யின் அன்புக் கணவரும், தனபாலரத்தினசிங் கம் (சுவிஸ்), சிவலிங்கம் (ஜேர்மனி), லலிதாதேவி, சிவனேஸ்வரி (டென்மார்க்), சறோசினிதேவி (கனடா), சிவனேஸ்வரன், செல்வராணி (ஜேர்மனி), மாலினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுமதி (நோர்வே), சுரேஸ் (ஆஸ்திரேலியா), சுதாமதி (இந்தியா), சுஜாதா, சுகிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஸ்ணானந்தன் (நோர்வே), வசந்தகுமாரி (ஆஸ்திரேலியா), பிரபாகரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கஜேந்திரன் மற்றும் பிரபாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், தரணியா, தரணியாளன் (நோர்வே), சதுஸ் (ஆஸ்திரேலியா), கோபிதா, தீபிதா (இந்தியா), அபிநஜா, பிருந்தாபன், கிபிஷா, கிஷாந் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.09.2014) புதன்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மகிழடி வீதி,
கோப்பாய் வடக்கு.
(51600) (10)
தகவல்: குடும்பத்தினர்.

# தமிழக மீனவர்களின் படகுகளை கைப்பற்றுமாறு நானே இலங்கைக்குக் கூறினேன்

## போட்டுடைத்தார் சுப்பிரமணிய சுவாமி

கொழும்பு, செப்.3

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் படகுகளை கைப்பற்றிக் கொண்டு, மீனவர்களை விடுவிக்குமாறு இலங்கை அரசுக்கு நானே ஆலோசனை வழங்கினேன் என்று பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக சிறைப் பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கை நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டாலும் அவர்களின் படகுகளை இலங்கை அரசு விடுவிக்கவில்லை.

இந்த நிலையிலேயே சுப்பிரமணிய சுவாமி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"நான் கடைசியாக இலங்கை சென்றிருந்தபோது தமிழக மீனவர்களுக்காக பேசினேன். மீனவர்கள் என்பவர்கள் தொழிலாளர்கள். அவர்களை கைது செய்தால் உடனடியாக விடுவித்துவிடுங்கள். ஆனால், அவர்களுக்கு படகுகள் அளிக்கும் உரிமையாளர்கள், பணக்காரர்கள். முதலாளிகளின் படகுகளை சிறைப்பிடித்து வைத்துக் கொள்ளுங்கள் என இலங்கைக்கு ஆலோசனை வழங்கினேன் என கூறியுள்ளார். (ற)

## தொடர்ச்சிகள்

### பண்டாரவன்னி

வன்னியை ஆண்ட தமிழ் மன்னனான பண்டாரவன்னியனுக்கு சிலை அமைக்க வேண்டும் என்று நீண்ட காலமாக முல்லைத்தீவு மக்களால் கோரிக்கை விடப்பட்டு வந்தது. இந்தக் கோரிக்கையை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், முதலமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளார்.

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் இதற்கான சம்மதத்தை தெரிவித்துள்ளதுடன், சிலை அமைப்பதற்கு பொருத்தமான இடத்தை இனங்கண்டு அதற்குரிய அனுமதியைப் பெறுமாறு, வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனைப் பணித்துள்ள தாகக் கூறப்படுகின்றது. (த-5-86)

### வலி.தெற்கு

வலி. வடக்கு பிரதேச சபை உறுப்பினர்லயன் சி.ஹரிகரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார், செயலாளராக ச.யோக ராசாவும், பொருளாளராக ப.குணரத்தினமும், உபதலை வராக றொ.தவச்செல்வமும், உபசெயலாளராக ராஜ்குமாரும், நிர்வாகசபை உறுப்பி னர்களாக சி.சிதம்பரநாதன், ஜெயரூபன், கனகராஜா, கநிஷந்தன், தி.சிவபாதசுப் பிரமணியம், இ.சுதர்சன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் கணக்காய் வாளராக வலி.தெற்கு பிரதேச சபையின் செயலாளர் தி.தியாகச் சந்திரனும், போஷகராக வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளர் தி.பிரகாஷும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-5)

### வயோதிபரை

லுக்கு மற்றொருவருடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண் டிருந்தபோது அவர்களை முந்திச் செல்ல முற்பட்ட இராணுவ வாகனமே அவரின் காலில் பெரும்பகுதித் தசையைப் பிடுங்கியுள்ளது. அதனால் கடுமையாக ரத்தம் வெளியேறிய நிலையில் உடனடியாக வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார். வாகன சாரதியைக் கைது செய்துள்ள தாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4-17)

### கொழும்பு

7.45 மணியளவில் கொழும்பு நோக்கிப் புறப்படுவ தற்கு ஆயத்தமாகப் பயணி களை ஏற்றியவாறு நின்றி ருந்த தனியார் சொகுசு பஸ் ஒன்றின்மீது அங்கு திடீரென வந்த இனந்தெரியாதோர் கல்வீசித் தாக்குதலை நடத்தி விட்டுத் தப்பிச்சென்றனர். இதனால் பஸ்ஸின் யன்னல் கண்ணாடி நொருங்கிச் சிதறியது. இதன்போது பஸ்ஸின் உள்ளே அமர்ந்திருந்த பெண் ஒருவர் கழுத்தில் காயமடைந் தார். அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டார். இதனையடுத்து அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டது. கொழும்பு செல்ல வந்த பயணிகள் பெரும் அல் லோலகல்லோலப்பட்டனர். பெருமளவான பயணிகள் அச் சம்காரணமாகத் தமது பய ணத்தைக் கைவிட்டு வீடுக ளுக்குத் திரும்பினர்.

இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் நிலைமை யைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். வழி அனுமதிப் பத்திரம் உள்ள பஸ்கள் மாத்திரம் நேற்று கொழும்பு நோக்கிப் பயணித்தன.

இதேவேளை,

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவில் ஊழல் இடம்பெற்றுள்ளது. அதனால் தான் யாழ்.- கொழும்பு பணியில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்குப் போக்குவரத்து வழித்தட அனுமதியை வழங்க மறுத்துள்ளது. அனுமதி இல்லாது ஓடுவதாக இருந்தால் பொலிஸாருக்கு நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் ரூபாவுக்கும் மேல் லஞ்சமாகக் கொடுக்க வேண்டியுள்ளது. என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

போக்குவரத்து வழித்தட அனுமதி இன்றி நேற்றிலிருந்து எந்தவொரு பஸ்ஸும் பணியில் ஈடுபடமுடியாது என்று யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் றொஹான் டயஸ் நேற்று உத்தரவிட்டுள்ளார். அதனால் தாம் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் சாரதிகள் தெரிவிக்கின் றனர்.

சாரதிகளுக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் இடையே போக்குவரத்து வழித்தட அனுமதி தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. அதன்போது, நெடுந்தூர சேவையில் ஈடுபடும் பஸ்களுக்கு போக்குவரத்து வழித்தட அனுமதி பெறப்படவில்லை. எனவே அதனைப் பெறுவதற்குச் சிறிது கால அவகாசம் தருமாறு சாரதிகள் கேட்டனர்.

2010 ஆம் ஆண்டு வழித்தட அனுமதிக்கு 154 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் 48 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப் பட்டன. தற்போதும் 48 விண்ணப்பங்களுக்கு வழித்தட அனுமதி வழங்கப்பட்டுள்ளன. சொகுசு பஸ்களுக்கு 20 வழித்தட அனுமதியும் அரைச் சொகுசு பஸ்களுக்கு 28 வழித்தட அனுமதி வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அத்தனை விண்ணப்பங்களையும் சுமார் 5 பேரே பெற்றுக்கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் பிரபல வர்த்தகராக உள்ள ஒருவர் மாத்திரம் 2 பஸ்களை வைத்துள்ளபோதும் 8 பஸ்களுக்கான வழித்தட அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுள்ளார். அவ்வாறு மற்றொருவர் 2 பஸ்களை வைத்திருக்கின்ற போதும் 10 பஸ்களுக்கான வழித்தட அனுமதியைப் பெற்றுள்ளார். அவ்வாறே சிலருக்குள் மாத்திரம் 48 வழித்தட அனுமதியும் முடக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டிலிருந்து பஸ் சேவை நடத்திவரும் பலருக்குத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வழித்தட அனுமதியை வழங்க மறுத்துள்ளது. ஆனால் அதற்குப் பின்னர் பஸ் எடுத்தவர்கள் குறிப்பாகச் சில மாதங்களுக்கு முன்னரே பஸ் கொள்வனவு செய்து ஓடுபவர்களுக்கெல்லாம் வழித்தட அனுமதியை தேசிய போக்குவரத்து ஆணைக் குழு வழங்கியுள்ளது.

சொகுசு பஸ் ஒன்றுக்கான வழித்தட அனுமதிக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வருடாந்தம் 11 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தையும், அரைச் சொகுசு பஸ்களுக்கு வருடாந்தம் 7 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தையும் பெற்றுக்கொள்கிறது. ஆனால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வில் இடம்பெற்ற ஊழல் காரணமாகச் சிலர் மாத்திரம் அனைத்து வழித்தட அனுமதிகளையும் பெற்றுள்ளனர். அதனை அவர்கள் ஒவ்வொன்றுக்கும் மேலதிகமாக சுமார் 4 தொடக்கம் 5 லட்சம் ரூபா வரை பணம் அதிகரித்து 11 லட்சம் ரூபா பெறுமதியான வழித்தட அனுமதியை 15 தொடக்கம் 16 லட்சம் ரூபா வரை அதிக விலைக்கு ஏனைய சாரதிகளுக்கு விற்பனை செய்கின்றனர். அதனைப் பெறமுடியாத சாரதிகள் பல வருடங்களாக வழித்தட அனுமதியைப் பெறாது சேவையில் ஈடுபடுகின்றனர்.

வவுனியா சோதனைச் சாவடியைக் கடந்து செல்லும்போது வீதியில் நின்று மறிக்கும் இவ்விரண்டு பொலிஸ்காரர்கள் வீதம் தாம் செல்லும் வழியில் உள்ள அநேகமான பொலிஸ்காரர்களுக்கும் வழித்தட அனுமதியில்லை என்ற காரணத்துக்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பஸ்காரரும் சுமார் 3 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தை லஞ்சமாகக் கொடுக்க வேண்டியுள்ளது. சில வேளைகளில் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கிறார்கள். அண்மையில் வடக்கு மாகாணத்தில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் வழித்தட அனுமதி இன்றிப் பயணித்தமைக்காக 50 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்த வேண்டி வந்தது. அவ்வாறு தாம் எவ்வளவோ பணத்தைச் செலுத்துகிறோம். தமக்கு வழித்தட அனுமதியைத் தந்தால் உரிய முறையில் தாம் செயற்படுவோம்.

2 பஸ்கள் வைத்திருப்பவர்கள் எந்த அடிப்படையில், அவற்றைப் பெறுகின்றனர். அவ்வாறு சட்ட முரணாகப் பெறுமளவுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினர் ஏன் கவனவீனமாக இருக்கின்றனர்? மேலதிகமாக எடுத்து வைத்திருக்கும் வழித்தட அனுமதிப் பத்திரங்களை மீளப் பெற்று எமக்குத் தாருங்கள் என்று பஸ்களின் உரிமையாளர்கள், நடத்துநர்கள் கோரியுள்ளனர். (த-4,17,ரி)

### பொலிஸார்

மாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் அமர் வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களால் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச காணாமற் போனோர் தினம் ஒகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அதை முன்னிட்டு வடக்கில் காணாமற்போனோரின் உறவுகளால் வவுனியாவில் பேரணி நடத்தப்பட்டது. வடக்கின் ஐந்து மாவட்டங்களினதும் பிரஜைகள் குழுக்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இணைந்து இதனை முன்னெடுத்திருந்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் மனுக் கையளிப்பதற்காக காணாமற்போனோரின் உறவுகள் மாவட்டச் செயலகம் நோக்கிப் பேரணியாகப் புறப்பட்டனர். எனினும் பேரணியைப் பொலிஸார் தடுத்தனர். அத்துடன் ஜனாதிபதி மஹிந்தவுக்கான மனுவைக் கையளிப்பதற்கு பொலிஸார் அனுமதிக்கவில்லை.

அதேவேளை, கடந்த மாதம் 4ஆம் திகதி கொழும்பு - மருதானையில் நடைபெற்ற ஐ.நா. அதிகாரிகள், அமெரிக்கா, சுவிஸ் உட்பட சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்ட காணாமற்போனோரின் உறவுகளுடனான கலந்துரையாடலும், அங்கு பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்க்கத்தக்கவாறு அத்துமீறிப் புகுந்த கடும்போக்குடைய பௌத்த பிக்குகளால் குழப்பியடிக்கப்பட்டது.

இவ்விரு அடாவடிச் சம்பவங்கள் தொடர்பில் முழுமையான ஆவணங்கள் தென்னிலங்கை மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களால் திரட்டப்பட்டுள்ளன. அவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டத் தொடரில், இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பிலான சர்வதேச விசாரணையின் வாய்மொழி மூல அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், வவுனியா சம்பவம் குறித்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்படுவது இலங்கை அரசுக்கு மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கட்டாய காணாமற் போதல்கள், சரணடைந்து காணாமற்போதல்கள் என்பவற்றுக்கு வலுவான ஆதாரங்கள் உள்ள நிலையில், அவற்றை இல்லாமல் செய்வதற்காகவே இலங்கை அரசு பல முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும் அதன் ஒரு கட்டமாகவே வவுனியாவில் இடம்பெற்ற பேரணியை பொலிஸாரைக் கொண்டு தடுத்து நிறுத்தியதாகவும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், 1989 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமற்போன இளைஞர்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அறிக்கை சமர்ப்பித்தவராவார். (ற-5)

### தமிழர்களின்

குறித்து இந்தியாவில் விசாரணை நடத்த வேண்டும். அதற்காக ஐ.நா. சபை நியமித்துள்ள விசாரணைக் குழுவுக்கு இந்தியா வர மத்திய அரசு விஸா வழங்க வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தமிழக மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, மத்திய, மாநில அரசுகள் இணைந்து தமிழக மீனவர்களது படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்படி நான்கு தீர்மானங்களே நேற்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்தத் தீர்மானங்களை வலியுறுத்தியே நாளை சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது என்று டெசோ அமைப்பு அறிவித்துள்ளது. (ற)

### புதிய

சேர்த்துக் கொள்ளப்பட்டமைக்கு எதிராகவோ பொதுமக்கள் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தமது பெயர்கள் இல்லாதவர்கள், தமது பி.சி. படிவம் ஊடாகவோ அல்லது உரிமைக் கோரிக்கை படிவத்தினூடாகவோ தமது பெயர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### தமிழர்

ரின் இறுதியில் இலங்கை ஆயர்கள் இணைந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தோம். அங்கு ஆயர்கள் நாம் தற்போதைய நாட்டின் நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடினோம். குறிப்பாகப் பொதுபல சேனாவுடைய அத்துமீறிய செயற்பாடுகள், இராணுவத்தின் நில அபகரிப்புப் போன்ற விடயங்கள் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

யாழ் ஆயர் என்ற முறையில் நான் குறிப்பாக இரு விடயங்கள் பற்றி ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினேன். முதலாவதாக, போர் முடிந்து ஐந்து வருடங்களும் மாகாண சபை நிறுவப்பட்டு ஓராண்டு கடந்தும் சில அபிவிருத்தி நட வடிக்கைகள் தவிர்ந்த எந்த வித அரசியல் தீர்வுகளும் தமிழர்களுக்கு முன்வைக் கவோ கொடுக்கப்படவோ இல்லை என்பதும், இரண்டாவதாக, தமிழர் குடி நிலங்களும், அவர்களது வணக்கத் தலங்களும் இராணுவத்தின் நில அபகரிப்புக்கு உள்ளாவதும் மிகவும் வேதனைக்குரி யது என்றேன்.

மாகாண சபையினரோ முதலமைச்சரோ அரசுடன் இணைந்து செயற்பட முன்வருவதில்லை. கொடுக்கப்படுகிற அழைப்புக்களை ஏற்று எந்தக் கூட்டங்களுக்கும் சமுகம் கொடுப்பதில்லை. அவர்கள் அரசுடன் இணைந்து செயற்படாதவரை எம்மால் எதையும் செய்ய முடியாது.

மக்கள் குடியிருப்புக்கள் ஒருபோதும் அபகரிக்கப்படமாட்டாது. அந்த நிலப்பரப்பு தற்போது அளவிடப்பட்டு வருகின்றது. விரைவில் உரியவர்களுக்கு அவர்களது சொந்த நிலங்கள் வழங்கப்படும். மக்களின் வணக்கத்தல பிரதேசங்களும் விரைவில் மீளக் கையளிக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதியின் பதில் அமைந்திருந்தது.

யாழ் திரும்பிய நான், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா உட்பட மாகாண சபையினரை யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்து ஜனாதிபதியுடனான சந்திப்பின் விடயங்கள் பற்றிப் பேசினேன்.

அதற்கு வடக்கு முதலமைச்சர் தமது நிலைப்பாட்டைத் தெளிவுப்படுத்தினார். பல முறை பல கூட்டங்களுக்குச் சென்று வந்தபோதும் ஆக்கபூர்வமான விடயங்கள் எவையும் செயற்படுத்தப்படவில்லை. தமிழர்களின் அபிலாஷைகள் எதையும் பூர்த்தி செய்யவேண்டும் என்ற எண்ணமும் அரசிடம் தென் படவில்லை. எனவே தான் நாம் அரசின் அழைப்பை நிரா கரிப்பதற்குரிய காரணமாயிற்று - என்றார்.

இந்நிலையில், தமிழர்களின் எதிர்கால நலனையும் அபிலாஷைகளையும் கருத்தில் கொண்டு அரசும் மாகாண சபையினரும் ஒருவர் மீது ஒருவர் பிழைகளைக் காண்பதைத் தவிர்த்து உடன் தமிழர் நலனுக்காக இணைந்து செயற்பட வேண்டிய அவசர தேவை இன்று உள்ளது. இதற்கு இரு தரப்பினரும் பொதுநலனைக் கருத்தில் கொண்டு இணைந்து செயற்பட முன்வரவேண்டும்- என்றுள்ளது. (த)

### முகமாலை

அதன்பின்னர் கருத்து வெளியிட்ட அவர்,

"இலங்கையில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகளுக்கு பிரிட்டன் நீண்ட காலமாக ஆதரவு வழங்கி வருகின்றது. 2010 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை இதற்காக 3.5 மில்லியன் பவுண்ட்ஸ் வழங்கியுள்ளது. கடந்த வருடம் பொதுநலவாய மாநாட்டுக்காகப் பயணம் மேற்கொண்ட பிரிட்டன் பிரமதர் 1.6 மில்லியன் பவுண்ட்க வழங்கப்படும் என்று அறிவித்தார்.

மிதிவெடிகளை அகற்றி வரும் நிறுவனமான ஹலோ டிரஸ்ட்டுக்கான நிதியுதவி வடபகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்ற உதவுகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில். மேலும் இந்த நிதி கண்ணிவெடி குறித்த விழிப்புணர்வுத் திட்டங்களுக்கும் பயன்படுகிறது.

கண்ணிவெடி அகற்றுதல் என்பது முக்கியமான நடவடிக்கை, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்த பின்னர் நிலங்களை அவர்களது பயன்பாட்டிற்கு வழங்குவதில் பிரிட்டனின் பங்களிப்பை நேரடியாக பார்வையிட்டது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்"- என்று தெரிவித்தார்.

அவர் இன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கும், நாளை வவுனியாவுக்கும் சென்று நிலைமைகளை அவதானிக்கவுள்ளார். (ற)

## மருத்துவமனை நிர்வாகத்தை கண்டித்து கவனவீர்ப்புப் போர்



ஒலுவில், செப்.2

ஒலுவில் மாவட்ட மருத்துவமனையில் நிலவும் நிர்வாகச் சீர்கேட்டைக் கண்டித்து ஞாயிற்றுக்கிழமை மக்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

ஒலுவில் பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் மரத்தால் விழுந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட வேளையில் மருத்துவர்கள் எவருமே மருத்துவமனையில் இருக்கவில்லை.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்தே குறித்த கவனவீர்ப்பு நடைபெற்றதாக மருத்துவமனை அபிவிருத்தி சபையினர் தெரிவித்தனர்.

இதேவேளை- அந்த இடத்துக்கு விரைந்த அக்கரைப்பற்றுப் பொலிஸார், குறித்த பிரச்சினைக்கு சுமுகமான தீர்வைப் பெற்றுத் தருவதாக வாக்குறுதி அளித்ததன் பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (வ)

# பளைப் பிரதேச நூலகங்களில் நேற்று முதல் பத்திரிகை இல்லை

## செயலாளரை நியமிக்காததால் கட்டணம் செலுத்தப்படவில்லை

பளை, செப்.2

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் நூலகங்களுக்குப் பத்திரிகைகள் விநியோகிப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

பத்திரிகைகள் வழங்கும் கடைக்கு பிரதேச சபையால் கடந்த இரண்டு மாதங்களுக்குரிய கொடுப்பனவு வழங்கப்படாததால் நேற்று திங்கட்கிழமை முதல் பொது நூல கங்களுக்கு பத்திரிகைகள் விநியோகிப்பதை நிறுத்தியதை அடுத்து நூலகங்களின் வாசிப்புப் பிரிவுகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

சபைக்கான செயலாளர் இதுவரை நியமிக்கப்படாததால் பிரதேச சபையின் அனைத்துச் செயற்பாடுகளும் முடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடிதண்ணீர் விநியோகம், கழிவகற்றல் சேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த வாகனங்களுக்கு எரிபொருள் நிறுத்தப்பட்டதால் கடந்த 15 தினங்களாக அந்தச் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

சபை அலுவலகப் பயன்பாட்டுக்கான மின்சாரம், தொலைபேசி ஆகியவையும் கட்டணங்கள் செலுத்தப்படாததால் ஏற்கனவே நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - பளை நகர்ப் பகுதி பொதுச் சந்தை ஆகியுவற்றில் கழிவகற்றல் தொடர்ந்து 15 தினங்களுக்கு மேலாக இடம்பெறாததால் எங்கு பார்த்தாலும் குப்பைகள் குவிக்கப்பட்டிருக்கின்றன. பொதுச் சந்தை விற்பனைப் பிரிவுகளில் கழிவகற்றல் இடம் பெறாததால் சந்தைப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக வியாபாரிகளும் பொது மக்களும் தெரிவித்தனர்.

பிரதேச சபை சுத்திகரிப்பு பணியாளர்களால் நகர்ப் பகுதி தினமும் துப்புரவு செய்யப்படுகின்ற போதிலும், குப்பைகள் அகற்றப்படாததால் அவற்றைக் காகங்களும், நாய்களும் கிளறி கடைகளுக்குள் குப்பைகள் வருவதாகவும் கடைகளின் குப்பைகளும் அகற்றப்படாததால் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர். (த-9)

## வேலைபெற்றுத்தருவதாக கூறி மோசடியில் ஈடுபட்ட மூவர் கைது

ம[illegible]களப்பு, செப்.2

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் பெயரைப் பயன்படுத்தி, மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலை பெற்றுத் தருவதாக கூறி இளைஞர், யுவதிகளிடமிருந்துபெருந்தொகைப் பணத்தை பெற்ற மூவரை மட்டக்களப்பு பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை கைது செய்துள்ளனர்.

சம்வம் குறித்து தெரிய வருவதாவது:-

சந்தேக நபர்கள் மாகாண சபை உறுப்பினரொருவரின் மாதிரிப் போலி கையேட்டினைப் பயன்படுத்தி அமைச்சர் குமார வெல்கம மூலம் வேலை வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி 7 இளைஞர் களிடம் சு[illegible]20 இலட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுள்ளனர். அதன் பின்னர் குறித்த இளைஞர்களை கொழும்புக்குஅழைத் துச் சென்று அங்கு போலி நியமனக்கடிதம் வழங்கி மிகுதிப் பணத்தையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

நியமனக் கடிதத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் கடி தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த, மட்டக்களப்பில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு வேலை தொடர்பாக தெரிந்துக் கொள்ளும் நோக்கில்இளைஞர்கள்சென்றுள்ளனர்.


அலுவலகத்தில் வழங்கிய தகவலின் பிரகாரம் தாம் ஏமாற்றப்பட்டமை அவர்களுக்கு தெரியவந்ததை அடுத்து தாம் ஏமாற்றப்பட்ட சம்பவத்தை, மாகாணசபை உறுப்பினர் சந்திரகாந்தனின் கவனத்துக்கு பாதிக்கப்பட்டோர் தெரியப்படுத்தி யுள்ளனர்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் தம்பிராசா பாலசிங்கம் (சிறி), குமார் குமரேஷன், எம். கரீம் ஆகியோர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

ஆயுர்வேத வைத்தியசாலை, ரயில் நிலையம், தொலைத்தொடர்பு நிலையம் ஆகிய இடங்களில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி ஒவ்வொரு நபர்களிடமிருந்து சுமார் 2 லட்சம் தொடக்கம் 4 லட்சம் வரையிலான பணத்தை அவர்கள் பெற்றுக் கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இச்சம்பவம் குறித்து மிகவும் விழிப்புடன் செயற்படுமாறு மாகாண சபை உறுப்பினர் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ)



வரலாற்றுச் சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் அலுவலகம் ஒன்று நகரசபை வளாகத்தில் அமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம்ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக் கப்பட்டுள்ளது. இந்த அலுவலகக் கட்டடம் நகர சபை நிர்வாகத்தால் பெற்றுக் கொள் ளப்பட்ட காணித்துண்டு ஒன்றில், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினரால் அமைக்கப்பட்டுள்ளது. புதிய அலுவலகத்தை நகர சபைத் தலைவர் க.செல்வராசா திறந்து வைத்தார். ஆலய பிரதமகுரு மு.சண்முகரெத்தின குருக்கள் வழிபாடுகளை நடத்தி வைத்தார். (வு)

## கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை கட்டடம் திறப்பு

திருமலை, செப்.2

கிழக்கு மாகாண சபையால் திருகோணமலையில் அமைக்கப்பட்ட கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை கட்டடம், கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜய விக்ரமமும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீட் ஆகியோரால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, கலாசார அமைச்சர் விமலவீர திஸாநாயக, சுகாதார, சுதேச வைத்தியம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் எம்.ஐ. எம்.மன்சூர், விவசாய, கால் நடை அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சர் ஸட். ஏ. ஹாபிஸ் நஸீர் அகமட், கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் ஆரியவதி கலபதி மற்றும் பிரதித் தவிசாளர் எம். எஸ். சுபைர் ஆகியோரும்-

கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், பிரதம செயலாளர், கிழக்கு மாகாண அமைச் சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், மற்றும் அரச உயரதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

# தொண்டமானாறை அண்டிய பிரதேசம் உவராகும் நிலை

## நன்னீருடன் கடல் நீர் சேருவதால்

கரணவாய், செப்.2

தொண்டமானாறு கடல் நீரேரியில் இருந்து வெளியேறி நன்னீருடன் கலக்கும் கடல் நீரால் அந்தப் பகுதியை அண்டிய பிரதேசம் உவர் நிலமாக மாறி வருகின்றது. இதனால் தமது விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தொண்டமானாறு நீரேரியின் தடுப்பணை பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டது. அது சரியான முறையில் அமைக்கப்படாமையால் அதிலிருந்து வெளியேறுகின்ற கடல்நீர் நன்னீருடன் கலக்கும் நிலை காணப்படுகின்றது. இதனால் அதனை அண்டிய பகுதிகள் உவர் நிலமாக மாற்ற மடைந்து வருகின்றன.

குறிப்பாக கரவெட்டி பருத்தித்துறை மற்றும் கோப்பாய் பிரதேசங்களுக்குட்பட்ட பகுதிகளில் சிறுபோகத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளே பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். அதுமட்டுமல்லாது தடுப்பணை சீரான முறையில் புனரமைக்கப்படாது விட்டால் எதிர்காலத்தில் சிறுபோக விவசாயம் முற்றாகப் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே அந்தப் பகுதியில் விவசாயம் செய்வோரின் நன்மை கருதி நன்னீருடன், கடல்நீர் கலப்பதனைத் தடை செய்வதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-108)

## நெடுந்தீவில் நீர்த்தாங்கி அமைக்கும் பணி புதனன்று

யாழ்ப்பாணம், செப்.2

நெடுந்தீவில் காற்றுக் காரணமாக கடந்த வியாழக்கிழமை இரவு வீழ்ந்த குடிதண்ணீர் சேமிப்புத் தாங்கிக்குப் பதிலாக புதிய நீர்த்தாங்கி அமைக்கும் பணிகள் நாளை புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக நீர்வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நெடுந்தீவுக்கு வருகை தந்து வீழ்ந்த நீர்த்தாங்கியைப் பார்வையிட்ட அதிகாரிகள் நிலத்தின் சேற்றுத்தன்மை காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவித்தனர். நிலத்தின் கீழ்ப்பகுதி சேறாகக் காணப்பட்டதாகவும் தாங்கிக்கு நீர் ஏற்றும்போது ஒரு பகுதி மெதுவாகச் சேற்றில் இறங்கிக்கொண்டதாலேயே இந்த நிலை ஏற்பட்டது.

தற்போது சரிந்து வீழ்ந்த நீர் விநியோகத்தாங்கியை அதேஇடத்தில் மீண்டும் அமைப்பது சாத்தியமில்லை என்பதால் மாற்று இடம் ஒன்று தெரிவு செய்யப்பட்டது. அந்த இடத்தில் தண்ணீர்த்தாங்கி புதிதாக அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

## பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் மூன்று அதிபர்களிடம் விசாரணை

கிளிநொச்சி, செப். 2

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் அதிபர்கள் மூவர், கடந்த 30ஆம் திகதி கிளிநொச்சி கந்தசாமி கோயிலுக்கு அருகில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு நீண்ட நேர விசாரணைகளின் பின்பு விடுவிக்கப்பட்டனர்.

கிளிநொச்சியில் பாடசாலைகளின் முகவரிக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட உயிர்ப் பதிவு என்னும் புத்தகம் தொடர்பில் 3 பாடசாலைகளின் அதிபர்களே இவ்வாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் செயலகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணையின் பின்பு விடுவிக்கப்பட்டனர்.

குறித்த புத்தகம் கத்தோலிக்க மதகுரு ஒருவரினால் அச்சிட்டு வெளியிடப்பட்டதாகவும், அதன் பிரதிகளைப் பாடசாலை விடுமுறை யென்பதனால் தாம் இன்னும் படிக்கவில்லை யெனவும் கூறிய அதிபர்களிடமிருந்து புத்தகங்களைப் பெற்றுக் கொண்ட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அதிபர்களை உடன் விடுவித்தனர். (கு-101-4)

## தனிநாயகம் அடிகளுக்கு சிலை



மன்னார், செப் 2

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் இறையடி சேர்ந்த நினைவு தினமாகிய நேற்றுத் திங்கள் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மன்னாரில் அடிகளாரின் நினைவு நிகழ்வு நடை பெற்றது.

தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் மஹாதேவ சர்மா தர்மகுமார குருக்கள் குறித்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். மன்னார் பழைய நூல் நிலையத்துக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள தனிநாயகம் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வும் அதைத் தொடர்ந்து அஞ்சலி உரைகளும் இதன்போது இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், மன்னார் நகரசபைத் தலைவர் எஸ்.ஞானபிரகாசம், தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார், மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜந்த டொட்றிக்கோ, மருத்துவர் லோகநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த)

## பாடசாலைகள் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம் செப். 2

மூன்றாம்தவணைக்குரியகற்றல்செயற்பாடுகளுக்காக பாடசாலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன. கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டு ஒரு மாதத்தின் பின் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் எதிர்வரும் 10 ஆம் திகதியே மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது. (கு-108)

## தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கை

### யாழ். றோட்டறி கழகத்தின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்.செப்.2

தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் யாழ். றோட்டறிக் கழகம் ஏற்பாடு செய்துள்ள சைக்கிளோட்டம், வீதி விழிப்புணர்வு நாடகங்கள் மற்றும் பிரசார நடவடிக்கைகள் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகள் கிளிநொச்சி பொதுச் சந்தையில் இன்று செவ்வாய்க்கிழமையும், யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையம் முன்பாக நாளை புதன்கிழமையும், முல்லைத்தீவு பஸ் நிலையம் முன்பாக நாளை மறுதினம் வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில் பொதுமக்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு சைக்கிளோட்டத்தில் கலந்து கொள்வோருக்கு ஊக்கமளித்தும், வாழ்த்தும் தெரிவிப்பதுடன் பிரசார நடவடிக்கைகளில் பங்கேற்று தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கு-ரி)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நகரப் பகுதியில் குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு 077 0087 888

(C/15655) (10)

**SPOKEN ENGLISH**

மூன்று மாத வாரநாள் பயிற்சிநெறி

இம்முறை A/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், பல்கலை புகுமுக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

01.09.2014 இலிருந்து பதிவுசெய்யும் முதல் 100 பேருக்கு அனுமதிகட்டணம் 20 பாடப்புத்தகங்கள் (தமிழ்-ஆங்கிலம்) மற்றும் VIDEO DVD இலவசம்!!

வாரநாள் பிரிவுகள் (திங்கள், புதன்) ஆரம்பம்

1.காலை 8.00-10.00 2.காலை 10.00-12.00

06.09.2014 வரை பதிவுகளை மேற்கொள்ளமுடியும்!

நேரடியான உரையாடற்பயிற்சி வழங்கும் இலங்கையின் ஒரேயொரு பயிற்சிமையம்.

எமது இறுதிப்பிரிவுகளில் பயிற்சிபெற்ற 3000 பேருக்கான சான்றிதழ்கள் வெகுவிரைவில் வழங்கப்படும்.

SAAMSON Experts in English Training

179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.

021 320 3313
077 621 4567

**பணிநிலை வெற்றிடம்**

- நிர்வாக உத்தியோகத்தர் Administrative officer
- காசாளர் Cashier
- வரவேற்பாளர் Receptionist (சரளமாக உரையாடக் கூடியவர்)
- களஞ்சியக்காப்பாளர் Store Keeper

நேர்முகத்தேர்வு 03.09.2014 (புதன்கிழமை) நேரம் : மு.ப. 9.00 மணிமுதல் 02.00 மணிவரை

(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சுயவிபரக்கோவையுடன் சமூகமளிக்கவும்.)

ANDRA DIGITAL IMAGE

379, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே. 0776622981, 021 222 8929

**உதயன்**

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**தேவை**

எமது அச்சகத்திற்கு
புத்தகம் கட்டுனர்கள் தேவை
(பயிற்சி பெற்று வேலை செய்ய விரும்புவோர்)
கிழமை நாட்களில் 9.00 – 5.00ற்கு இடையில் நேரில் வரவும்

**வெளிவந்துவிட்டது**

- அலுவலக நடைமுறை, தாபன நடைமுறை, நிதி நடைமுறை 675/= ஆக்கம் : கமலநாதன், ஜெயராஜ் (திருந்திய பதிப்பு ஓகஸ்ட் 2014) (வவுனியா)
- SLAS - PART - 1 (திறந்த மட்டுப்படுத்தப்பட்ட) போட்டிப் பரீட்சைப் புத்தகம் 1500/= ஆக்கம் : P. உமாசங்கர்

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம். 021 222 9881

(C/15648)(7.6.3)

**DIPLOMA IN MOBILE PHONE REPAIRING**

**கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி**

நீங்கள் பாடசாலைகல்வியை இடைநிறுத்தியவரா? சுயதொழிலொன்ற எதிர்பார்ப்பவரா? வேலைசெய்து கொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்டவேண்டுமா?

புதுப்பொலிவுடன் யாழ் நகரில் உங்கள் எதிர்காலத்துக்கு நிரந்தரவருமானம் ஈட்ட ஒருவாய்ப்பு

திருத்தும் துறையில் 10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரும் இலங்கையில் 2000கும் மேற் பட்ட மாணவர்களை உருவாக்கிய முதற்தர ஆசிரியருமான GANESH.K. (0777444225) பாடநெறிக்கான கட்டணத்தை முதல் மாதத்திலேயே சம்பாதிக்க முடியும். ஆதிநவீன Mobile Phone Repairing முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

BTEC #21, Sirampiyadi Lane, Jaffna. Tel:0217904468

**சமையலுக்கு ஆள்கள் தேவை**

கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனத்தின், யாழ்.கிளைக்கு ஆண் சமையல் ஆள்கள் தேவை !

★ தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்

நேரில் தொடர்பு கொள்ளவும்:

லக்ஷ்மி என்ஜினியறிங்
இராசபாதை வீதி, கோப்பாய், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 567 0256, 078 736 4364

**VACANCY ANNOUNCEMENT — CIVIL ENGINEER**

One of the leading company based in Colombo, is looking for a qualified dynamic and experienced individual for the following position in Jaffna and Colombo.

| Position | Qualification | Min Exp Year |
|---|---|---|
| Civil Engineer / Civil Engineer (2) | B.Sc.Civil Engineering/ Btech Hons Civil | More than 2 years |

GENERAL REQUIREMENTS

Candidate should be self-starter,efficient, proactive with good management skills, Ability to operate Microsoft word,Excel, and Good command of spoken,written English. Sinhala will be added qualification Good interpersonal skills required. Accommodation available in both places. Salary negotiable.



Job.hrcosl@gmail.com

WE ARE AN EQUAL OPPORTUNITY EMPLOYER

**New Science Academy**
**நியூ சயன்ஸ் அக்கடமி**
வதிரி, நெல்லியடி.
(யாழ் முன்னணி ஆசிரியர்களுடன் வடமராட்சி முன்னணி ஆசிரியர்களும் இணைந்து)

மீட்டல் வகுப்புகள் ஆரம்பம் : 05.09.2014
Day Classes

- Chemistry - க.சிவத்திரன், சி.தங்கராசா
- Physics - ஜெ.சந்திரப்பிரகாசம் (SP), எஸ்.சோதிலிங்கம், க.குகநேசன் (குலர்)
- Maths - ப.விமலநாதன், க.அருளானந்தம்
- Biology - T.கெங்காதரன்

(49758)(7.6.3)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.